# திருக்கோயில்

சனவரி 1975

ரூ. 1

(103)

R. R. No. 1001/75

944





# அருள்மிகு
# சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்
# திருத்தணி

**செங்கை மாவட்டம், தமிழ்நாடு.**

தொலைபேசி :
அலுவலகம் : 25 — மலைக்கோயில் : 43
மலைப்பாதை : 96 — தங்கும் விடுதி : 87

திருமுருகன் உறையுஞ் சிறப்புத் தலங்கள் ஆறுபடை வீடுகளில் ஐந்தாவது படைவீடு திருத்தணிகை. இத்தலம் நக்கீரர், அருணகிரிநாதர், அருட்பிரகாச இராமலிங்க அடிகளார், முத்துசாமி தீட்சிதர் போன்ற பெருமக்களால் பாடல் பெற்றதாகும்.

''நினைத்ததை அளித்திடும், மனத்தினை உருக்கிடும் வழித்துணை வந்திடும்
திருத்தணி முருகனின் இன்னருள் பெற்றிட வாரீர்! வாரீர்!!''

இத்தலம் சென்னை—பம்பாய் இருப்புப் பாதையில் அரக்கோணம் சந்திப்பில் இருந்து வடக்கே 14 கி.மீ.; சென்னை—திருப்பதிப் பாதையில் 84 கி.மீ.; திருப்பதியிலிருந்து தெற்கே 54 கி.மீ. ; காஞ்சிபுரத்திலிருந்து வடக்கே 36 கி.மீ.

**தரிசனம் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை**

| | | | |
|---|---|---|---|
| விசுவரூப தரிசனம் | காலை 6 மணி | சாயரட்சை | மாலை 5 மணி |
| காலை சந்தி அபிஷேகம் | காலை 8 மணி | அர்த்தசாமம் பூசை | இரவு 8 மணி |
| உச்சிக்காலம் | காலை 10 மணி | | |

**விழாக் காலங்கள்**

1. ஸ்ரீ வள்ளித் திருமணப் பெருவிழா ... பிப்ரவரி, மார்ச்சு
2. சிவராத்திரி 1008 சங்காபிஷேகம் ... மார்ச்சு
3. ஸ்ரீ தெய்வானைப் பெருமண விழா ... ஏப்ரல், மே.
4. ஆடிக் கிருத்திகைத் தெப்பப் பெருவிழா ... ஜூலை, ஆகஸ்டு.
5. சஷ்டிப் பெருவிழா ... அக்டோபர், நவம்பர்.
6. திருப்புகழ்த் திருப்படி விழா ... டிசம்பர்.

**வேண்டுதல்**

பாதி நன்கொடைத் திட்டத்தின் கீழ்க் குடியிருப்பு இல்லங்கள் கட்டிக்கொடுக்க விரும்புவோர் ரூ. 10,000 செலுத்த வேண்டுகிறோம்.

தணிகை முருகனுக்குத் தங்கத் தேர்ப் பணி 6 மாத காலமாக நடைபெற்று வருகிறது. பக்தர்கள் தங்கள் காணிக்கையைத் தங்கத் தேருக்குத் தங்கமாகவும், பிற பொருளாகவும் திருத்தணிக்கோயில் அலுவலகத்தில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ள வேண்டுகிறோம்.

95 அறைகளும், 28 குடியிருப்பு இல்லங்களும் யாத்ரீகர்கள் தங்குவதற்கும் பணிச் செலவுக்கும் விடப்படுகிறது.

திரு. புலவர் மி. ச. நடேசன்,
அறங்காவலர் குழுத் தலைவர்.

திரு. கலவை. அ. கோபாலகிருஷ்ணன்,
அறங்காவலர்.

திரு. ஊ. ஆறுமுகம், பி.ஏ., பி.எல்.,
உதவி ஆணையர் / நிர்வாக அதிகாரி.

திரு. வி. எம். துரைசாமி ரெட்டி,
அறங்காவலர்.

103

**முகப்பு :**

ஒளிவெள்ளத்தில் மூழ்கி காட்சி தருவது மதுரை அருள்திரு மாரியம்மன் திருக்கோயி லின் தெப்பத்திருவிழா. இப்புத்தாண்டில் அனைவரது வாழ்விலும் இதுபோல் ஒளி பெருகிட இறைவன் அருள்புரிவாராக.

# திருக்கோயில்

மாலை 17 | ஆனந்த, மார்கழி — ஜனவரி, 1975 | மணி 4

## சந்தாதாரர்களுக்கு வேண்டுகோள்

* 'திருக்கோயில்' திங்கள் இதழின் சந்தா தாரர்கள் ஆகச் சேர விருப்பமுள்ளவர்கள் ''திரு. ஆணையர், அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034'' என்னும் முகவரிக்கு ரூபாய் பனிரெண்டு அனுப்பி எப்போது வேண்டுமாயி னும் சந்தாதாரராகச் சேர்த்து கொள்ளலாம்.

* அந்தந்த வட்டார அறநிலைய உதவி ஆணையர்களின் அலுவலகங்களிலும் சந்தாவைச் செலுத்திச் சந்தாதாரராகப் பதிவு செய்து கொள்ளலாம்.

* இதழ்கள் தவறாது கிடைத்திடச் சந்தா தாரர்கள் முழு முகவரியைத் தெரிவிக்க வேண்டும். முகவரி மாற்றத்தை உடனுக்குடன் தெரிவித்திடவும் வேண்டும்.

* எல்லா ஊர்களுக்கும் முன் பணம் கட்டும் விற்பனையாளர்கள் தேவை.

**ஆண்டுச் சந்தா ரூ. 12-00 தனி இதழ். ரூ 1-00**

## பொருளடக்கம்

1. கலைக்கூடக் கால்கோல் விழா
—மாண்புமிகு முதல்வர் கலைஞர்
2. இறைவனின் நீதிமன்றங்கள்
—கவிஞர் கண்ணதாசன்
3. சேது புராணம்
—ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
4. கந்தபுராணம்
—திருமுருக கிருபானந்தவாரியார்
5. நெஞ்சமே ஆலயம்
—கே. எஸ். ஜெகன்னாதன்
6. மார்கழியின் மாண்பு
—கவிஞர் அரங்கமுத்துமணி
7. திருமழிசையாழ்வார் திருநெறி
—டாக்டர் ந. சுப்புரெட்டியார், எம்.ஏ., பிஎச்.டி.,
8. பாண்டிமாதேவி
—மீனாட்சி மைந்தன்
9. உபநிடதங்களில் உயிரியல் உண்மைகள்
—தி. சு. கோவிந்தசாமி
10. இரண்டாட்டம்
—கி. வா. ஜகந்நாதன்
11. திருமூலர் விளக்கும் யோகநெறி
—ஜி. வரதராஜபிள்ளை, பி.ஏ.,
12. எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே
—டி. என். சுசிசுப்பிரமணியன்
13. அக்கமகா தேவியார்
—கவியோகி சுந்தானந்த பாரதியார்

ஆசிரியர்: ந.ரா.முருகவேள், M.A., M.O.L.
துணை ஆசிரியர்: கே.எஸ்.ஜெகன்னாதன்



158595

# கலைக்கூடக் கால்கோள் விழா


நெல்லையப்பர் கோயிலின் கலைக்கூடக் கால்கோள் விழாவில் கலந்துகொண்டு, உங்கள் அனைவரையும் சந்திக்கின்ற நல்வாய்ப்பினைப் பெற்றமைக்காக, நான்மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன். இந்த விழாவிலே மிகுந்த உற்சாகத்தோடு என்னை வரவேற்று, எனக்கு ஒரு செங்கோலையும் வழங்கி, முடியுடைய மூவேந்தர்கள் சேரன்செங்குட்டுவனும், பாண்டியன் நெடுஞ்செழியனும், சோழன் கரிகாலப் பெருவளத்தானும், அன்புப் பரிசுகளை வழங்குவதைப் போன்ற காட்சிகளை அமைத்து, நான் இந்த விழாவிற்கு வந்ததின் காரணமாக நிர்வாகத்தினரும் இந்தப் பகுதி மக்களும், ஆசிரிய மக்களும், மாணவர்களும், மாணவிகளும் தங்களுக்குள்ள மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டிருக்கின்றார்கள். மூவேந்தர்களுக்குப் பரிசு அளிப்பது என்பது இயலாத காரியம். அதனால்தான் மூவேந்தர்கள் எனக்கு இங்கே பரிசு அளித்திருக்கின்றார்கள். மூவேந்தர்கள் புலவர்களுக்குப் பரிசு அளித்துப் பழக்கப்பட்டவர்கள். நானும் ஏதோ கொஞ்சம் கவிதைகள் எழுதக் கற்றவன் என்கின்ற முறையில், அவர்கள் இந்தப் பரிசுகளை எனக்கு வழங்கியதாகவே நான் கருதுகின்றேன். சேர சோழ பாண்டிய மன்னர்களிடத்தில், எமன் கூட அவர்களுடைய உயிரைப் போரிட்டுப் பெற முடியாது என்று, ஒரு புலவர் பாடினார். அதிலும் குறிப்பாகக் கிள்ளி வளவன் என்கின்ற ஒரு மாமன்னனுடைய உயிர் பிரிந்த நேரத்தில், அந்த மன்னனுடைய உயிர்த் தோழராக விளங்கிய புலவர் நப்பசலையார் என்பவர், ஒரு பாடலைப்பாடினார். ''நீ எப்படி மறைந்தாய் மன்னவனே! உன்னை யாரும் வென்றிட முடியாதே. காலன் எப்படி உன்னை வென்றான்?'' என்ற கேள்வி கேட்டு அவர் பாடிய பாடல் ;

''செற்றன் றாயினுஞ் செயிர்த்தன் றாயினும்
உற்றன் றாயினும் உய்வின்று மாதோ
பாடுநர் போலக் கைதொழு தேத்தி
இரந்தன் றாகல் வேண்டும்''

என்று நப்பசலையார் என்னும் அப்புலவர் தமது பாட்டை முடிக்கிறார்.

''உன்னை எதிர்த்தோ போரிட்டோ அல்லது உறவாடியோ உன்னுடைய உயிரை எமன் பறித்திருக்க முடியாது, பிறகு எப்படி உன்னுடைய உயிர் பறிக்கப்பட்டது?'' என்று கேள்வி கேட்டு, அதற்குப் புலவரே பதில் சொல்கிறார். ''ஒருவேளை எமன் தந்திரமாகக் கவிதை பாடுகின்ற புலவரைப்போலவந்து, உன்னுடைய உயிரையே நன்கொடையாய் வேண்டுமென்று கேட்டுப் பெற்றிருக்கக் கூடுமே யல்லாமல், உன்னை யாரும் எதிர்த்து அழித்திருக்க முடியாது'' என்று பாடுகின்றார். அப்படி அந்தக் காலத்து மன்னர்கள், புலவர்கள் என்றால் தங்களுடைய உயிரையும் கொடுக்கக் கூடிய அளவிற்குத் தமிழின்பால், தமிழ்ப் பாடலின்பால், அந்தப் பாடல்களை இயற்றுகின்ற கவிகளின்பால், புலவர்களின்பால் பேரன்பு கொண்டிருந்தார்கள். அந்தக் காரணத்தினாலேதான் அதியமான் நெடுமான் அஞ்சி என்கின்ற, இன்றைக்குத் தருமபுரி மாவட்டம் என்று அழைக்கப்படுகின்ற தகடூரை ஆண்டுகொண்டிருந்த அந்த மன்னன், ஔவையாருக்கு நீண்ட நாள் வாழக் கூடிய ஒரு நெல்லிக் கனி தனக்குக் கிடைத்திருந்தும் கூட, மன்னனாகிய நாம் நீண்ட நாள் வாழ்ந்து என்ன பயன்? நல்ல தமிழுக்கு அருமையான பாடல்களைத் தரக் கூடிய ஔவைப் பிராட்டியார் போன்றவர்களல்லவா வாழ வேண்டும்? என்று தனக்குக் கிடைத்த நெல்லிக் கனியை, நீண்ட நாள் வாழக் கூடிய-மகிமை தரக் கூடிய நெல்லிக்கனியை, ஔவைப் பிராட்டியாருக்குத் தந்தான் என்று, அந்தக் காலத்திலே இலக்கியங்கள் எழுதப்பட்டு, நாம் அவைகளைப் படிக்கின்றோம்.

இப்படி மாமன்னர்கள் சேரனாயினும், சோழனாயினும் பாண்டியனாயினும் தங்களுடைய தமிழ்ப் பற்றினையும், தமிழ் உணர்வினையும், புலவர்களைச் சீராட்டிப் பாராட்டியதின் மூலம், பல நேரங்களிலே வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். அந்த வகையிலேதான் இங்கு என்னை ஒரு அமைச்சன் என்கின்ற அளவிலே, அருமையான தமிழின் மீது அடங்காத அன்பு கொண்ட ஒருவன் என்கின்ற வகையில், அருமையான தமிழ்ப் பனுவல்களான சிலப்பதிகாரம், பட்டினப்பாலை, மணிமேகலை ஆகிய நூல்களை மூவேந்தர்களை விட்டு வழங்கச் சொல்லி இருக்கின்றார்கள். இந்த மூவேந்தர்கள் நம்முடைய தமிழகத்தில் அவர்கள் கட்டிய ஆலயங்களின்வாயிலாகத்தான் இன்றைக்குச் சரித்திரக் குறிப்புக்கள்



மாண்புமிகு
டாக்டர். கலைஞர்
முதல்வர்

எழுதியிருக்கின்றார்கள். அவர்கள் இந்தத் தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கான அரிய காரியங்களைச் செய்திருக்கிறார்கள். என்றாலும் அவர்களால் எழுப்பப்பட்ட கோயில்கள், மண்டபங்கள் அவைகளிலே நாட்டப்பெற்ற கல்வெட்டுக்கள், அந்தக் கல்வெட்டுக்கள் மூலமாகக் கிடைக்கின்ற பழைய காலச் சரித்திர ஆதாரங்கள் இவைகளெல்லாம் இன்றைக்கு நமக்குப் பயன்படுகின்றன. சில திறப்பு விழாக்களிலும், அடிக்கல் நாட்டு விழாக்களிலும் கல்வெட்டுக்களில் நம்முடைய பெயர்கள் பொறிக்கப்பட்டு அவைகள் பதிக்கப்படுகிற நேரத்தில் சிலர் கருதலாம், இவைகளெல்லாம் விளம்பரத்திற்காகச் செய்யப்படுகிறது என்று சொல்லலாம். உண்மை கூட, நான் அதை ஒத்துக் கொள்கின்றேன். ஏனென்றால் இன்னும் நூறாண்டு காலத்துக்குப் பிறகு ஆயிரம் ஆண்டு காலத்திற்குப் பிறகு சரித்திரக் குறிப்புக்கள் தமிழகத்திற்குத் தேவைப்படுகிற நேரத்தில் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

இன்றைக்கு நாம் பல்வேறு கல்வெட்டுக்களை ஒப்பிட்டுப் பார்த்து இது யார் யாருடைய காலமாக இருக்க முடியும் என்றெல்லாம் நிர்ணயிக்கின்றோம். அந்த வகையிலேதான் நின்ற சீர்நெடுமாறன் என்கின்ற பாண்டிய மன்னன் ஏழாம் நூற்றாண்டில் இந்த ஆலயத்தைக் கட்டினான் என்றும், இது மதுரையில் இருக்கின்ற ஆலயத்தைவிட நாலு ஏக்கரா பரப்பளவிலே அதிகமானது என்றும், அறங்காவலர் துறையினுடைய தலைவர் நம்முடைய நண்பர் இலக்குமணன் அவர்கள் பெருமைப்பட்டுக் கொண்டார். எப்பொழுதுமே அவரவர்களுடைய ஊர்தான் அவரவர்களுக்குப் பெரிது. விட்டுக் கொடுக்க மாட்டார்கள். நம்முடைய நண்பர் மன்னை நாராயணசாமி இருக்கிறார்களே உணவு அமைச்சர், அவரும் நானும் திருவாரூருக்குப் போனால் திருவாரூரிலே பெரிய குளம் இருக்கிறது. கமலாலயம் என்று பெயர். திருக்குளம். இது 5 வேலி அதாவது முப்பது ஏக்கரா விஸ்தீரணம் கொண்டது என்று நான் சொல்லுவேன். உடனே அவர் எங்கள் மன்னார்குடியில் இருப்பது இன்னும் இரண்டு ஏக்கர் அதிகம் விஸ்தீரணம் என்று சொல்லுவார். இப்படி ஊர்ப்பற்று, மாவட்டப்பற்று, வட்டப்பற்று என்கின்ற அளவில் இது மதுரையைவிடப் பெரிய கோவில், இது அதைவிட அதிக சரித்திரப் பிரசித்தி பெற்ற கோயில், இங்கு இருக்கிற சிற்பங்கள் எல்லாம் எப்படிப்பட்டவை என்பதை யெல்லாம் இலக்குமணன் அவர்கள் தன்னுடைய வரவேற்புரையிலே எடுத்துச் சொன்னார்கள். இங்கே மூக்கை இழந்த அல்லியும், அந்த மூக்கைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கின்ற பவளக் கொடியும் சிலை வடிவாக சமைக்கப்பட்டிருப்பதை அவர்கள் எடுத்துக் காட்டினார்கள். இது ஒரு சக்களத்திப் போராட்டத்தினுடைய அடையாளம் என்றும் சொன்னார்கள். நான் சிலைகளைப் பார்த்தேன். பவளக் கொடியினுடைய கையிலே ஏதோ ஒன்று இருக்கிறது. நான் சிலையைப் பார்க்கவில்லை. படத்தைத்தான் பார்த்தேன். இதை அவர்கள் காட்டினார்கள். ஆனால் மூக்கை இழந்த அல்லி எந்தவிதக் கவலையுமில்லாமல் நின்று கொண்டிருக்கிற வடிவில்தான் சிலை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அல்லிக்குத் தன்னுடைய மூக்கை இழந்தாலும் பரவாயில்லை., பவளக் கொடி தனியாயிருக்கிறாள்; நாம் அர்ச்சுனனோடு இருக்கிறோம் என்கின்ற அந்த ஒரே ஒரு மகிழ்ச்சி. அவளுக்குப் போதும் என்கின்ற அளவில், அந்தச் சிலை அமைக்கப்பட்டிருப்பதாகக் கவிஞர்கள் கற்பனையைப் பெருக்கிக் கொண்டே போகலாம்.

அதைப் போலவே குடும்பக் கட்டுப்பாட்டிற்காக இங்கு அமைக்கப்பட்டிருக்கின்ற குரங்கினுடைய சிலையின் படத்தையும் காட்டினார்கள். பெண் குரங்கு இரண்டு குழந்தைக் குரங்குகளை வைத்துக் கொண்டு ''போதும் இனிமேல் வேண்டாம்'' என்பதைப் போலக் கையை காட்டுவதைப் போலவும், இன்னொரு தூணிலே தனியாக ஒரு ஆண் குரங்கு செதுக்கி வைத்திருப்பதைப் போலவும் சிலை இருப்பதைச் சொன்னார். இந்தக் குரங்குகளுக்கு இருக்கிற புத்தியானது மனிதர்களுக்கு வர வேண்டுமே என்கின்ற அந்த கவலைதான் இன்றைக்கு நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. குரங்கு கூட குடும்பக் கட்டுப்பாடு செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறது. நாம் பெருமையாகச் சொல்லிக் கொள்ளுகிறோம். டார்வின் சித்தாந்தத்தை, குரங்கிலிருந்து வந்தவன் தான்மனிதன் என்று சொல்லிக் கொள்கின்றோம். ஆனால் நம்முடைய ஆரம்பச் சந்ததியினர் கூட, குடும்பக் கட்டுப்பாட்டிலே இவ்வளவு அக்கரையாக இருக்கிற நேரத்தில், அந்தச் சந்ததிக்குப் பிறகு பல்வேறு நாகரிகங்களை வளர்த்து வருகிற நாம் குடும்பக்கட்டுப்பாட்டிலே சாக்கிரதையாக இல்லாமலிருப்பது நாட்டிற்கு ஆபத்தை விளைவிக்கும்.

இன்றைக்கு இந்த ஆலயத்தில் என்னுடைய பிறந்த நாள் விழாவையொட்டி 51 அனாதைக் குழந்தைகள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விபரம் எல்லாம் இங்கு எடுத்துக் காட்டப்பட்டது. அது மாத்திரம் அல்ல. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நேரத்தில் கடலூரில் பாதிக்கப்பட்ட மூன்று குழந்தைகளை இந்த ஆலயத்தில் இருக்கின்ற அனாதை விடுதியில் சேர்த்து அவர்களையும் காப்பாற்றுங்கள் என்று நான் எடுத்துச் சொன்னேன். நண்பர் கண்ணப்பன் அவர்கள் உடனடியாக முயற்சி எடுத்துஅதிகாரியின் வாயிலாக இந்த ஆலயத்தின் நிர்வாகப் பொறுப்பிலிருக்கிற அறங்காவலர் துறையினர் அந்தக் குழந்தைகளையும் இன்றைக்கு இந்த ஆலயத்தின் சார்பில் காப்பாற்றுகின்றார்கள். ஆகவே ஆலயமிருப்பது பக்தர்கள் வணங்குவதற்காக என்பது மாத்திரமல்ல, அந்த ஆலயத்தின் சார்பில் ஏழை எளியவர்கள் வாழ்ந்திட வேண்டும்.

அந்தக் காலத்திலே ஆலயங்கள் நல்ல கல்விச் சாலைகளாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆலயங்கள் நல்ல அறநெறி நிலையங்களாக அந்தக் காலத்திலே விளங்கியிருக்கின்றன. முதன் முதல் தமிழகத்திலே கற்றளி எடுத்தவன் அதாவது கல்லால் கோவிலைக் கட்டியவன் என்கின்ற பெருமை வாய்ந்தவன், கோச்செங்கணான் என்ற சோழன் ஆவான். அவனு

டைய காலத்திலேதான் ஆலயங்களுக்குக் கற்றளி எடுத்தல் என்கின்ற முறை தொடங்கியது. அதற்குப் பிறகு ஆயிரக்கணக்கான ஆலயங்கள் இன்று தமிழகத்திலே இருக்கின்றன. அந்த ஆலயங்கள் ஆண்டவனை வழிபடுகின்ற இடமாக, கேட்டார்க்குக் கேட்ட வரம் தருவார் என்று எண்ணி மன நிம்மதியோடு பக்தர்கள் செல்லுகின்ற இடமாக இருப்பதைப் பற்றி நான் எந்த விதமான கருத்து மாறுபாடும் கொண்டிடவில்லை. இந்த அரசைப் பொறுத்த வரையில் அவரவர்களுடைய கொள்கையை அவரவர்கள் பின்பற்றுவதற்கு, யாருடைய உள்ளத்திலும் இந்த அரசுக்கென்றிருக்கின்ற கொள்கையை இந்த அரசை நடத்துகின்ற கட்சிக் கென்று இருக்கின்ற சமுதாய சீர்த்திருத்தக் கொள்கையை இவைகளை யாருடைய உள்ளத்தையும் புண்படுத்துகின்ற அளவிற்கு நுழைக்க வேண்டுமென்கின்ற எண்ணம் கிஞ்சிற்றேனும் கிடையாது. ஆகவே புண்படுத்தி ஒரு கொள்கையை ஏற்றுக் கொள்ளச் செய்வதை விட அவர்களுடைய உள்ளத்தைப் பண்படுத்தி அந்தக் கொள்கைக்கு மெருகு கொடுப்பதுதான் சரியான முறையாகும் என்பதைத்தான் எங்களுடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் எங்களுக்குக் கற்றுத் தந்தார்கள். அந்த வகையில் தான் இன்றைக்கு இந்த ஆட்சி யாருடைய மனத்தையும் புண்படுத்தாத அளவிற்கு அவர்களுடைய இஷ்டத்திற்குச் சில காரியங்கள் நடத்தி வருகிறது. ஆனால் மனதைப் புண்படுத்தக்கூடாது என்பதில் அது ஒருவழிப் பாதையாக இருக்கக் கூடாது. அது ஒருவழிப் பாதையாக இருக்குமேயானால் சரிப்பட்டு வராது. நான் ஒன்றைச் சொல்லுவேன். இன்றைக்கு இராமரை வணங்குகின்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் வணங்குகின்ற நேரத்தில் அதில் குறுக்கிட்டால் அது தவறு. வணங்காதே என்று சொல்வதும் தவறு. அதுபோல் இராவணனை மாவீரன் என்றும், தமிழ்ச் சமுதாயத்தினுடைய பெருமன்னன் என்றும் கருதுகின்றவர்கள் இருக்கின்றார்கள். அதிலும் குறுக்கிடுவது தவறு. எப்படி இராமர் சிலையை உடைப்பது தவறோ இராமருக்கு இழிவு தேடுவது தவறோ, அதைப் போலவே இராவணனை தென்னகத்தினுடைய மன்னனாக ஐயிரண்டு திசை பத்தும் தன் புகழ் வைத்தோன் என்கின்ற அளவிற்குப் புகழப்பட்டவனாய் இருக்கின்ற அந்த இராவணனையும் மற்றவர்கள் இகழக் கூடாது. இராவணனை விரும்புகின்றவர்கள் இராவணனை விரும்பலாம். இராமனை ஏற்றுக் கொள்பவர்கள் இராமனை ஏற்றுக்கொள்ளலாம். அதற்காக இராவணனைக் கெட்டவன் என்று அவனை இழிவு படுத்துவதும், அந்த இராவணன் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றவர்கள் மனதைப் புண்படுத்துகின்ற காரியமாகும். அதைப் போலவே இராமனை வணங்குகின்றவர்கள் நாட்டிலே ஏராளமாயிருக்கிறார்கள். ஆக இராமருக்கு இழிவு உண்டாக்கி இராமர் சிலையை உடைத்து அந்த இராம பக்தருடைய உள்ளத்தைப் புண்படுத்துவதும் ஏற்றுக் கொள்ளக் கூடிய காரியமல்ல. அவரவர் வழியில் அவரவர்கள் தங்களுடைய காரியங்களை நடத்திக் கொள்ள வேண்டுமே அல்லாமல் இன்னொருவர் காரியத்தில் குறுக்கிடுவதும் அவர்கள் போற்றிப் புகழ்கின்ற ஒரு மனிதனையோ ஒரு தெய்வத்தையோ மற்றவரை இழிவுபடுத்துவது தகாத காரியமாகும். அந்த வகையிலே யாரையும் புண்படுத்தாமல் எவரையும் புண்படுத்தாமல், அவரவர்களுடைய அடிப்படையில்தான் இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழக அரசு காரியங்களைச் செய்து வருகிறது.

நம்முடைய நண்பர் இலக்குமணன் அவர்கள் இந்தக் கோயிலினுடைய அறங்காவலர் துறைத் தலைவராக இருக்கிறார் என்றால் என்ன எண்ணினார்கள். 67-ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் அண்ணா ஆட்சிக்கு வந்தால் தி.மு.க. ஆட்சிக்கு வந்தால் கோயில்களை எல்லாம் இடித்து விடுவார்கள் என்று சொன்னார்கள். உண்மைதான். இடித்தோம்! எதற்காக? ஜீரணோத்தாரண மகா கும்பாபிஷேகம் செய்வதற்காக. அதற்காகத்தான் இடிக்கப்பட்டதே தவிர எந்தக் கோயிலையும் இடித்து வயல் களாக்கிவிடவில்லை. எந்தக் கோயிலையும் இடித்துத் தரைமட்டமாக்கிவிடவில்லை. காங்கிரஸ் ஆட்சி காலத்திலே இதே நெல்லையப்பர் கோயிலுக்கு இரண்டு முறை குடமுழுக்குச் செய்ய திருப்பணிகளைத் தொடங்க அந்தக் காலத்திலே முயற்சிக்கப்பட்டு, ‘58-லே ஒரு முறை, 63-லே ஒரு முறை, அந்த முயற்சி கைவிடப்பட்டது. ஆனால் நாஸ்திகர்கள் என்று சொல்லப்படுகிற எங்களுடைய ஆட்சியில் நாங்கள் வந்தால் கோயிலை இடித்துவிடுவோம், குளத்தைத் தூர்த்துவிடுவோம், ஆண்டவனையெல்லாம் அயல்நாட்டுக்கு அனுப்பிவிடுவோம் என்று சொன்னார்களே! அப்படிப்பட்ட ஆட்சியிலே இன்றைக்குக் காங்கிரஸ் காலத்திலேகூட நடைபெறாத திருப்பணி எங்கள் காலத்திலே நடைபெற்று நம்முடைய நண்பர் இலக்குமணன் அவர்கள் இந்த அறங்காவலர் குழுத் தலைவராக வந்தால் என்ன ஆகுமோ? பூமி வெடிக்குமோ? நெல்லை மாநகரம் பிளக்குமோ? நெல்லையப்பர் கோயிலைவிட்டுப் போய்விடுவாரோ! என்றெல்லாம் அஞ்சிய அச்சத்திற்கு எந்தவித இடமும் இல்லை என்கின்ற வகையில், கிட்டத்தட்ட ஏழு இலட்ச ரூபாய் செலவிலே, இந்தக் கோயில் திருப்பணி நடைபெற்று முடிந்தது. அதனுடைய குடமுழுக்கும் கடந்த சில மாதங்களுக்கு முன்பு நிறைவேறி இருக்கின்றது என்றால், நாங்கள் யாருடைய கொள்கையிலும் தலையிடாதவர்கள், அதே நேரத்தில் அந்தக் கொள்கைகளுக்காக யார் யார் தங்களுடைய மனத்தைப் பறிகொடுத்து வசதி வாய்ப்பு தேவை என்று கேட்கின்றார்களோ, ஒரு அரசாங்கம் தன்னுடைய நிலையிலிருந்து எதைச் செய்ய வேண்டுமோ அவைகள் அத்தனையும் செய்து கொடுத்திருக்கிறது.

நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த உடனேதான் எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு கும்பகோணத்தில் மாமாங்கம் நடைபெற்றது. கும்பகோணத்தில் சட்ட மன்ற உறுப்பினர் காசிராமன் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர், அவரேசட்டசபையிலே பாராட்டிப் பேசினார். அது மாத்திரம் அல்ல, நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு கும்பகோணத்திலே

மாமாங்கக் குளத்திலே மூழ்கினால் தொத்து நோயினால் ஒரு நூறு பேராவது சாவார்கள். 200 பேராவது பணத்தைப் பறிகொடுப்பார்கள். ஆனால் இன்று நாங்கள் ஆட்சிக்கு வந்த பிறகு நடைபெற்ற மாமாங்கத் திருநாளில், அந்த மாமாங்கத்திற்குச் செல்வதற்காக கும்பகோணத்தைச் சுற்றி 4 இலட்ச ரூபாய் செலவில் சிறப்பான சாலைகள் போட்டுத் தரப்பட்டு, சிறப்பாக பேருந்து வண்டி விடப்பட்டு, மாமாங்கத்தில் யாருக்கும் தொத்துநோய் வராமல் சாக்கிரதையாக கவனித்து ஒரு பிக்பாக்கெட் கூட நடைபெறவில்லை என்கின்ற அளவிற்குப் போலீஸ் பாதுகாப்போடு அந்த விழாவை நடத்திக் கொடுத்தோம்.

ஓடாத திருவாரூர் தேரை ஓட்டிக் காட்டினோம். 20 ஆண்டு காலம் ஓடவில்லை. சட்டசபையில் ஒருவர் கேட்டார். கருணாநிதி இளைஞராக இருக்கும்பொழுது அவருடைய முரசொலி வாரப் பத்திரிகையில் ''ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் ஏன் உனக்குத் தியாகராஜா?'' என்று கேட்டாரே, அவர் இப்போது தேரோட்டலாமா? என்று கேட்டார். நான் சொன்னேன். நான் எழுதிய பாட்டைக் கவனமாகப் படியுங்கள். என்ன எழுதியிருக்கிறேன். ''ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கையிலே தேரோட்டம் ஏன் உனக்குத் தியாகராஜா'' என்று கேட்டேன். 20 ஆண்டு காலமாக ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவித்தார்கள். இப்போது ஏரோட்டும் மக்கள் ஏங்கித் தவிக்கவில்லை. ஆகவே தேரோட்டத்தை அனுமதித்திருக்கிறோம் என்று நான் சட்டசபையிலே பதில் சொன்னேன். ஆகவே இது கடவுள் காரியங்களைப் பொருத்த வரையில் மதக் காரியங்களைப் பொறுத்தவரையிலே, யாருடைய நம்பிக்கையிலும் தலையிடாமல் அவர்களுக்கு ஏற்ற வசதி வாய்ப்புக்களைச் செய்து வரும் அரசு.

நண்பர் கண்ணப்பன் இங்கு எடுத்துக் காட்டியதுபோல் கடந்த இரண்டு மூன்று ஆண்டு காலத்தில் தமிழகத்தில் அறங்காவல் துறைக்கு வராத பல ஆலயங்களைக் கிட்டத்தட்ட 48 ஆயிரம் ஆலயங்கள் அறங்காவல் துறைக்குத் தப்பித்துக் கொண்டு, தாங்கள் வைத்ததுதான் சட்டம் என்கின்ற அளவிற்குத் தனிப்பட்டவர்கள் தங்களுடைய பெயரால் கோயிலுக்கு இருக்கிற சொத்துக்களையெல்லாம் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் அந்தக் கடவுள் கேட்டாரா என்பது எனக்குத் தெரியாது. அனுபவித்துக் கொண்டிருந்தார்கள். தஞ்சை மாவட்டத்தில் கூட ஒரு கதை சொன்னார்கள். தஞ்சை மாவட்டத்தில் மருங்கைப்பள்ளம் என்ற ஊரில் அந்தக் கோயிலின் தர்மகர்த்தா அந்தக் கோயில் அம்மனுடைய பெயரைத் தன்னுடைய மகளுக்கு வைத்து அந்த நிலத்தையெல்லாம் தன்னுடைய மகள் பெயராலேயே மாற்றிப் பட்டா செய்து கொடுத்துவிட்டார். எப்படி கடவுளை ஏமாற்றியிருக்கிறார்கள் பாருங்கள். அதற்கெல்லாம் இப்பொழுது கோர்ட்டிலே வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. 48 ஆயிரம் கோயில்களில் ஏறத்தாழ 15 ஆயிரம் கோயில்களை இன்று நம்முடைய கையிலேயில்லாமல் நம்முடைய மேற்பார்வையிலே இல்லாமல் இருந்த கோயில்களையெல்லாம் இரண்டு மூன்று ஆண்டு காலத்திலே 15 ஆயிரம் கோயில்களை அறங்காவல் துறையின் கீழ் கொண்டு வந்தோம். ஆண்டவனுக்கு ஒழுங்காகச் சாப்பாடு போட, ஆறுகால பூசை நடைபெற, அதனுடைய உற்சவங்கள் விழாக்கள் வைபவங்கள் இவைகளெல்லாம் ஒழுங்காக நடைபெற அந்த ஆலயத்தில் பணி புரிகின்ற ஆலயத்தினுடைய தொழிலாளர்களுடைய வயிற்றிலே அடிக்காமல், அவர்களுக்குச் சம்பளத்தை ஒழுங்காக உயர்த்தித் தர, இவ்வளவு காரியங்களும் இந்த ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறது என்பதை எடுத்துக் காட்டி இங்கு அமைய இருக்கிற கலைக்கூடம் நான் ஏற்கனவே சொன்னது போல், தமிழகத்தினுடைய வரலாற்றுப் பெட்டகமாக அமைந்திடும் என்ற நம்பிக்கையோடு இந்தக் கலைக்கூடத்தினுடைய கால்கோள்விழாவை நிறைவேற்றிவிட்டு விடைபெறுகின்றேன். வணக்கம்.

[திருநெல்வேலி நெல்லையப்பர் காந்திமதி அம்மன் ஆலயத்தின் ஆயிரம் கால்மண்டபத்தில் அமைக்கப்பட இருக்கும் கலைக்கூடத்திற்குக் கால்கோள் விழா சிறப்பாக நடைபெற்றது. ஆணையர் திரு. கே. எஸ். நரசிம்மன், பி.ஏ., பி.எல்., ஐ.ஏ.எஸ்., மேற்பார்வைப் பொறியாளர் திரு. கிருஷ்ணமூர்த்தி, பி.இ., நிர்வாக அதிகாரி திரு. வி.டி.ஏ. சேவுகபாண்டியன் ஆகியோர் விழாவைச் சிறப்பாக்கி அமைச்சர்களை வரவேற்றனர். அறங்காவலர் குழுத் தலைவர் திரு. ப. இலக்குமணன், வரவேற்புரையாற்றி முதல்வருக்கு வரவேற்புப் பேழையை அளித்தார். அறநிலையத்துறை அமைச்சருக்கும் இந்த விழாவில் வரவேற்புப் பேழையும், வெள்ளியால் செய்த கோபுரமும் அளிக்கப்பட்டது.

அறங்காவலர் குழு உறுப்பினர் திரு. கல்யாணசுந்தரம் முதல்வருக்கு வெள்ளியால் செய்யப்பட்ட செங்கோலை அளித்தார். மூவேந்தர்கள்போல வேடம் தரித்த மூன்று மாணவியர்கள் கரிகாற்சோழன் சார்பிலும், சேரன் செங்குட்டுவன் சார்பிலும், நெடுஞ்செழியப் பாண்டியன் சார்பிலும், முதல்வருக்கு முறையே பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை, ஆகிய புத்தகங்களை மூவேந்தர்கள் அளித்தார்கள். விழாவுக்கு அறநிலையத் துறை அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் தலைமை தாங்கினார். விழாவில் கதிரவன், எம். எல். ஏ., பத்மநாபன், எம். எல். ஏ., அழகியநம்பி, ஏ. எல். சுப்பிரமணியம், எஸ். டி. ஆதித்தன், சூரியநாராயணன் (நகர மன்றத் தலைவர்)., ஏ. ஆர். சுப்பையா, எம். எல். ஏ., ஆகியோர் கலந்துகொண்டு பேசினர். முதல்வர் இறுதியில் அடிக்கல் நாட்டு விழாச் செய்து சிறப்புரையாற்றினார்கள்.

—ஆசிரியர்.]

# இறைவனின் நீதிமன்றங்கள்

கண்ணதாசன்

## 3. பெஞ்ச் கோர்ட் நீதிபதிகள்

பாண்டிய மண்டலத்தில் கிராம தேவதைகளுக்குத் திருவிழா நடைபெறும்போது, 'புரவி எடுத்தல்' என்றொரு விழா நடைபெறும்.

மண்ணாலே குதிரை செய்து கோவிலுக்கு அருகில் நிறுத்திவிடும் பழக்கமே அது.

அவரவர்களுடைய சக்திக்குத் தகுந்தபடி குதிரை பெரியதாகவோ, சிறியதாகவோ இருக்கும்.

ஒரு காலத்தில் குதிரை வீரர்களைக் கௌரவிப்பதற்காக வந்த இப் பழக்கம், நாளடைவில் எல்லாச் சிறு தேவதைகளுக்கும் எடுக்கின்ற பழக்கமாகிவிட்டது.

முத்தன், முனியன், காட்டேரி என்கின்ற சிறு தேவதைப் பெயர்களெல்லாம், வீரனாக வாழ்ந்திருந்த யாரோ ஒருவரைக் குறிக்கும் பெயர்களே.

பாண்டிய நாட்டிலுள்ள ஐயனார் கோவில்களில் இந்தப் 'புரவி எடுக்கும்' பழக்கம் அதிகம்.

பாண்டிய நாட்டில் ஒரு கிராமத்திலிருந்து மறு கிராமத்திற்குப் போகிறவன் வழியில் இத்தகைய மண் புரவிகளை ஏராளமாகச் சந்திப்பான்.

இது ஒரு வகையான வீர வணக்கம்.

எங்கள் ஊரிலே 'மலையரசி அம்மன்' கோவில் என்று ஒன்று உண்டு. 'பூமலைச்சி அம்மன்' கோவில் ஒன்றும் உண்டு.

பக்கத்து ஊர்களில், 'பொன்னழகி அம்மன்' என்ற பெயரிலும் வேறு பெயர்களிலும் அம்மன் கோவில்கள் உண்டு.

இந்த அம்மன்களெல்லாம் ஒரு காலத்தில் வாழ்ந்தவர்கள் என்றும், சகோதரிகள் என்றும் கூறுகிறார்கள்.

இவற்றில் 'மலையரசி அம்மன்' மீது எனக்கு ஈடுபாடுண்டு.

அந்தக் கோவிலில் போய் சத்தியம் செய்தால், யாருமே அதை மீற மாட்டார்கள்.

யாரிடமாவது கடன் கொடுத்து ஏமாந்தவர்கள் கோர்ட்டுக்குப் போக வழி இல்லாவிட்டால் அந்தக் கடன் பத்திரத்துக்கு ஒரு காப்பி எடுத்து, மலையரசியின் கோவிலில் வைத்து விடுவார்கள். கடனை ஏமாற்றியவன் குடும்பம் அழிந்தே போய்விடும்.

நான் கண் முன்னாலேயே இதனைக் கண்டிருக்கிறேன்.

அங்கே மலையரசி, நீதிபதியாகவே வாழ்கிறாள்.

எங்கள் குடும்பத்தைச் சேர்ந்த ஒருமூதாட்டியினுடைய மாங்கல்யத்தை அடகு பிடித்திருந்தார் ஒருவர். பணத்தோடு போய்க் கேட்டபோது ''தாலி வட்டியோடு மூழ்கிவிட்டது'' என்று கூறி அதைத் தர மறுத்து விட்டார்.

''உன் குடும்பம் சந்ததி இல்லாமல் போய் விடும்'' என்று திட்டிவிட்டு, வந்துவிட்டார் அந்த மூதாட்டி.

என்ன ஆச்சரியம்!

அந்தக் குடும்பம் ஆண் வாரிசு இல்லாமல் அழிந்துபோய்விட்டது.

நமது மூதாதையர் நம்பி உரைத்த எதையுமே பொய்யல்ல என்பதே நான் கண் முன்னாலேயே கண்டிருக்கிறேன்.

ஏழைப் பெண் ஒருத்திக்குத் திருமணம் பேசிக் கொண்டிருந்தார்கள். அவள் அழகாக இருந்ததால் பெரிய இடத்துச் சம்மந்தம் கிடைக்கும் போலிருந்தது. பொறாமைக்காரர்கள் சிலர் அந்தப் பெண்ணைப் பற்றி அவதூறு கூறி திருமணத்தைத் தடுத்துவிட்டார்கள்.

அந்தப் பெண் காலையில் குளித்துவிட்டு, ஈரப் புடவையோடு இருபத்தியொரு நாட்கள் அம்மன் கோவிலை வலம் வந்தாள்.

அவதூறு கூறியவர்கள் குடும்பம் சின்னா பின்னமாகிவிட்டது.

பெஞ்ச் கோர்ட் நீதிபதிகளைப் போன்ற கிராம தேவதைகள் தன்னை நம்பினோரைக் காக்கிறார்கள். அவர்கள் எதிரிகளைக் கருவறுக்கிறார்கள்.

முத்தாளம்மன், முத்துமாரியம்மன் போன்ற அம்மன்கள் எல்லாம் சக்திவாய்ந்தவை என்பதைக் குறிக்க ஏராளமான கதைகள் உள்ளன.

ஏதாவதொரு வகையில் அவற்றின் சக்தி வெளிப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் ஆலையம்மன், எல்லையம்மன், படவேட்டம்மன் என்று பல அம்மன்கள் இருக்கின்றன.

படவேட்டம்மன் என்பது, 'படைவீட்டு அம்மன்' என்பதின் மரூஉ ஆகும்.

இன்றையச் சென்னை நகரம் பல கிராமங்களின் தொகுப்பாகும்.

மயிலாப்பூர், திருவல்லிக்கேணி, அடையாறு, வண்ணாரப்பேட்டை என்று பல கிராமங்கள் அக்காலத்தில் விளங்கின.

இவை ஒன்றுக்கு ஒன்று தொடர்பில்லாத கிராமங்கள். இடையிலே பெரும் காடுகள் இருந்திருக்கின்றன. இந்தக் கிராமங்களின் எல்லைகளில் சிறு தேவதைக் கோயில்கள் இருந்திருக்கின்றன.

1945-ல் நான் சென்னை நகருக்கு வந்து இருந்தபோது கோடம்பாக்கம் பகுதி பெரும் காடாக இருந்தது. அங்கே மிகப் பெரிய தோட்டம், 'நவாப் தோட்டம்' என்பது.

சினிமாவுக்கு, 'அவுட் டோர்' சூட்டிங் போகிறவர்கள் கோடம்பாக்கத்துக்குத்தான் போவார்கள்.

ஆற்காடு நவாப் குதிரைகளைக் கட்டுகிற இடமாக அது இருந்ததால், 'கோடா பாக்' என்று அதற்குப் பெயர் வைத்தார்.

'கோடா' என்றால், உருது மொழியில் குதிரை என்று அர்த்தம்.

ஆற்காடு நவாப்பை முன்னிட்டுத்தான் அந்த ரோடும் 'ஆற்காடு ரோடு' என்று பெயர் பெற்றது.

1945-ல் காடாக இருந்த கோடம்பாக்கத்தில் மூன்று சிறு தேவதைக் கோவில்கள் இருந்தன. அவை இன்றும் இருக்கின்றன.

வடபழனி ஆண்டவர் கோவிலும் அவற்றில் ஒன்று.

அந்தக் கோவிலில் ஒரு சாமியார் இருந்தார். முள்ளாலே செய்யப்பட்ட பாதரட்சையைத்தான் அவர் அணிவார். முட்படுக்கையில் தூங்குவார். அவர்தான் வடபழனி கோவிலுக்குப் பூஜை புணஸ்க்காரங்கள் செய்து கொண்டிருந்தார்.

முதலில் சிறு தேவதைக் கோவிலாக இருந்த அதுதான் பிற்பாடு முருகன் கோவிலாயிற்று.

இந்தச் சிறு தேவதைகளின் சக்திகளைப் பற்றி சென்னை நகரில் ஏராளமான கதைகள் உண்டு.

பாண்டி நாட்டு அளவுக்கு தொண்டை மண்டலத்திலும் இந்தச் சிறு தேவதைகள் ஆதிக்கம் புரிந்து வருகின்றன.

'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்ற பழமொழியை, இந்தச் சிறு தேவதைகள்தான் உறுதி செய்கின்றன.

எங்கள் ஊருக்குப் பக்கத்தில் பள்ளத்தூர் என்ற ஊரில், 'சோலை ஆண்டவர் கோவில்' என்றொரு கோவில் உண்டு.

அந்தக் கோவிலுள்ள தெய்வம் சக்தி வாய்ந்தது என்று ஊரார் நம்புகின்றனர்.

திருட்டுப்போன தாலி திரும்பி வந்ததாகவும், வண்டிச் சக்கரத்தில் நசுக்கப்பட்ட குழந்தை உயிர் பெற்றதாகவும், பல கதைகளை அங்கே கூறுகிறார்கள்.

மொத்தத்தில் இந்துக்களின் சிறு தேவதை வழிபாடு, நல்ல நம்பிக்கையின் அடிப்படையில் எழுந்ததே தவிர, மூடநம்பிக்கையில் எழுந்தது அல்ல.

கீழ்க்குலத்து மக்களால் மட்டுமே மதித்து வணங்கப்பட்ட சிறு தேவதைகள், இப்போது எல்லோராலும் மதிக்கப்படுகின்றன.

அவை செய்யும் சாகசங்களை அறிந்தவர்கள், அவற்றை, 'பெஞ்ச் கோர்ட் நீதிபதிகள்' என்றழைப்பதில் என்ன தவறு?

அந்தச் சிறு தேவதை ஆதர்ஸம் எனக்கும் உண்டு.

எனக்கு வழிகாட்டியவள் எங்கள் ஊர் மலையரசி அம்மன்தான் என்று நான் இன்னமும் நம்புகிறேன்.

தொடரும்

# அருள்திரு சுவர்ணதாபனேஸ்வர சுவாமி திருக்கோயில்

திருச்சிற்றேமம் : : சித்தாய்மூர்

அப்பர், ஞானசம்பந்தரால் பாடப்பெற்ற தலம். சித்தர்கள் இறைவனை வழிபட காலதாமதம் ஆகிவந்ததால், திருக்கதவு திருக்காப்பிடப்பட்டு இருந்ததால், தேன் வண்டு ரூபத்தில் இறைவனை வழிபட்டதாக வரலாறு கூறுகிறது. அதன்படி இன்னும் அர்த்தமண்டபத்தில் கல்சாளரத்தில் நெடுங்காலமாக அமைந்துள்ள தேன்அடை பார்க்க வேண்டியது. மேலும் வணிகப் பெண்ணின் கற்பின் மேன்மையை உலகிற்கு உணர்த்த வைகாசித் திங்களில் விசாகத்திற்கு முதல்நாள் இரவு அகாலத்தில் அகாலதரிசனம் தந்து உய்வித்த இடம். இத்தலம் ஆலத்தம்பாடி புகைவண்டி நிலையத்தில் இருந்து 4 கல் தொலைவிலும், ஆலத்தம்பாடி பேருந்து நிலையத்திலிருந்து 3 கல் தொலைவிலும் அமைந்துள்ளது.

**எஸ். சிவவடிவேல்,**
அறங்காவலர் குழுத்தலைவர்.

**எம். கிருஷ்ணசாமி,**
செயல் அலுவலர்.

**வெ. நாகராசன், இலா. முத்து,**
அறங் காவலர்கள்.

# அருள்திரு முத்துமாரியம்மன் ஆலயம்

**கரம்பயம் :-: பட்டுக்கோட்டைவட்டம்**

பட்டுக்கோட்டை தஞ்சை நெடுஞ்சாலையில் 8 கி.மீ. தொலைவில் கரம்பயம் கிராமத்தில் குடிகொண்டிருக்கும் அருள்திரு முத்துமாரியம்மன் கருணையினால் யாதவர் ஒல்வரின் அம்மை நோய் நீங்கியதால் பக்தர்கள் யாவரும் அப்பிணியினின்றும் காத்தருள அம்மனை வணங்கி காணிக்கை செலுத்துகின்றனர்.

பங்குனிப் பெருவிழா இவ்வாலயச் சிறப்பு. தேரோட்டம் கண்கொள்ளாக் காட்சி.

அம்மனின் அருள்பெற்றுய்ய அன்புடன் அழைக்கின்றோம்.

**ஆலய நிர்வாகிகள்.**

# சேது புராணம்

ந.ரா.முருகவேள், M.A., M.O.L.,

''பூந்தவிசின் இருந்தபிரான் முதலோர் காணப்
புண்டரிக மகள்கொழுநன் புகழ் இலங்கை
வேந்தன்உயிர்ப் பழிகழுவும் முகத்தால் யார்க்கும்
விடையவனே யுடையவனும் வேத வாய்மை
ஆந்தரங்கம் வெளிசெய்வான் அனைவ ரோடும்
அணைந்துகந்த மாதனத்தில் அருச்சித் தேத்தும்
ஏந்துபுனற் சடிலமுடி இராம நாதன்
இணையடிச்செந் தாமரைகள் இறைஞ்சி வாழ்
வாம்!'' (1)

''தண்ணெனவும் வெச்செனவும் தந்து சாயாத்
தகைபயின்று விடம்நீக்கித் தலைவற் கென்றும்
உண்ணமுதம் தனையுதவி இமைய மேரு
உயர்சிகர மந்தரத்தை ஒருவிச் சேர்ந்தும்,
கண்ணுதலை விளர்ப்புறலால் கயிலை எள்ளிக்
கவுணியர்க்குத் தமிழ்சுரக்கும் காட்சி யாலே
வண்ணமுலை மலயமலை மானும் கன்னி
மலைவளர்கா தலிமலர்த்தாள் மனத்துள் வைப்
பாம்!''(2)

—சேதுபுராணம்

**முன்னுரை:**

அமிழ்தினும் இனிய நமது தமிழ் மொழியின்கண் உள்ள இலக்கியங்கள் பல வகைப்பட்டன. அவைகளுள், தல புராணங்கள், என்பனவும் ஒரு பகுதியாகச் சிறப்பிடம் பெற்றுத் திகழ்கின்றன. தல புராணங்கள் மிகப் பல, சைவ வைணவத் தலங்கள் குறித்துச் சிறந்த முறையில் செவ்விய நடையில், சொற்சுவை பொருட் சுவை நலங்கள் பொதுள, அழகுறப் பாடப் பெற்றிருக்கின்றன. இத்தகைய தல புராணங்களுள், திருவிளையாடற் புராணம் (மதுரை), கோயிற் புராணம் (சிதம்பரம்), காஞ்சிப் புராணம், தணிகைப் புராணம், காளத்திப் புராணம், திருக்குற்றாலப் புராணம் என்பனவற்றைப் போல, இராமேசுவரம் பற்றிய சேது புராணம் என்பதும் கவிதைச் சிறப்பில் மிக்குக் கவினுற்று விளங்குவதொன்று ஆகும்.

**நிரம்ப அழகிய தேசிகர்:**

இராமேசுவரம் என்னும் இணையிலாத் தலத்தின் சிறப்புக்களை யெல்லாம் எடுத்து விளக்கிக் கூறும் சேது புராணம், கி.பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருந்த நிரம்ப அழகிய தேசிகர் என்னும் பெருங் கவிஞரால் பாடப்பெற்றதாகும். அவர் வேதாரண்யம் என்னும் திருமறைக்காட்டில், சைவ வேளாளர் குலத்தில், அபிஷிக்தர் மரபில் தோன்றியவர்.

''நித்த மணாளர் நிரம்பிய அழகியர்
சித்தத் திருப்பரால் அன்னே என்னும்...''

எனவரும் திருவாசகச் செய்யுள் தொடரை நினைத்து, இவருக்கு இவர்தம் தந்தையர் பெயரிட்டு வழங்கினர் என்பது வரலாறு.

கமலை ஞானப்பிரகாசர் அவர்களை ஞானாசிரியராகக் கொண்ட நிரம்பிய அழகியதேசிகர், ஒரு பெருங்கவிஞராகச் சிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல், ஓர் உயர்ந்த உரையாசிரியராகவும் விளங்கினர், சிவஞான சித்தியார், திருவருட் பயன் என்னும் சைவ சித்தாந்த நூல்களுக்கு உரை எழுதிய பெருமையும் இவருக்கு உண்டு. வெற்றிவேற்கை, நைடதம் முதலிய பல நூல்களை இயற்றிய அழகன்பெருமான் என்னும் அதிவீரராம பாண்டியர் (கி.பி. 1565), இவருக்குச் சம காலத்தவராய், இவரிடம் பயின்றவர் என்று தெரிகின்றது. (Dr. Caldwell's Comparative Grammar, p. 145) இங்ஙனமே திருவாரூர்ப்புராணம் பாடிய, சம்பந்த முனிவர் (கி.பி. 1592) இவரிடம் பயின்ற மாணவர்களுள் ஒருவர் என்பது, திருவாரூர்ப்புராணப் பாயிரச் செய்யுள்களால் விளங்குகின்றது. திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவர் இவர்தம் சம காலத்தவரும், உடன் பயின்றவருமாக விளங்கினர் என்பர். இராம நாத முனிவர் என்பவர், இவரால் பெரிதும் மதித்துப் போற்றப் பெற்றுள்ளார். அவர் சிவாகமங்களிலும், சைவ சித்தாந்த சாத்திரங்களிலும் நல்ல பயிற்சியும் புலமையும் பெற்றிருந்தார். இராமேசுவரம் திருக்கோயிலில் உள்ள ஆடல்மண்டபம் என்பதனைச் சகஆண்டு 1520 (கி.பி. 1598)-ஆம் ஆண்டில், கட்டிமுடித்தவர் இவ் இராமநாத முனிவரேயாவர். (Dr. Burgess's Archaeological Survey of Touthern India, p. 145) இவரையே, சேதுபுராணத்தில் இறுதி வாழ்த்துப் பாடலில் ''இராமநாத மாமுனிவன் நீடூழி வாழ்க மாதோ'' என நிரம்பிய அழகிய தேசிகர் புகழ்ந்து போற்றி வாழ்த்தியுள்ளார். இம் முனிவரின் அன்பிற்கும் வேண்டுகோட்கும் இணங்கியே, இவர் சேது புராணம் பாடினர் போலும்! சேது புராணம் மட்டுமேயன்றி, திருப்பரங்கிரிப் புராணம் என்பதும், இவரால் இயற்றப் பெற்றுள்ளது.

**சேது புராணம்:**

சேது புராணம், 51 சருக்கங்களாக, 3,448 பாடல்களால் இயற்றப் பெற்றுள்ளது. இந்நூலின் கடவுள் வாழ்த்துப் பகுதியும், அவையடக்கப் பகுதியும், இவ்வாசிரியரின் இணையற்ற பக்தியுணர்வையும், செருக்கற்ற இனிய நல்ல சிறந்த பண்பு நலங்களையும், செவ்விதில் புலப்படுத்துவனவாகத் திகழ்கின்றன. 'திருநாட்டுச் சிறப்பு' என்னும் பகுதியின் தொடக்கத்தில்,

பாண்டிய நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற சிவத் தலங்களாகப் பாங்குற அமைந்து விளங்கும் திருவாலவாய் (மதுரை), திருவாப்பனூர், திருவேடகம், திருக்கொடுங்குன்றம், திருப்புத்தூர், திருவாடானை, திருப்புனவாயில், திருக்கானப்பேர், திருப்பூவணம், திருச்சுழியல், திருப்பரங்குன்றம், திருக்குற்றாலம், திருக்குறும்பலா, திருநெல்வேலி என்னும் பதினன்கு தலங்களையும் பற்றிய பாடல்கள் மிகவும் சிறப்புடையனவாகத் திகழ்கின்றன. இராமேசுவரத்தின்கண் இருபத்துநான்கு (24) புண்ணிய தீர்த்தங்கள் அமைந்து இலங்குகின்றன.

''பரிதி, அலகை வரதமுடன்,
பாவ நாசம், சீதைமடு,
பெருமங் கலமே, ஆரமுதம்,
பிரமன், அனுமன் பெயர்க்குண்டம்,
இருள்தீர் மலய முனிஅலந்தை,
இராமன் இலஞ்சி, இலக்குமன் பேர்ப்
பொருவில் ஓடை, சடாதீர்த்தம்,
புண்ட ரீக மகள்பொய்கை'' (1)

''அங்கி தீர்த்தம், அவற்றினும்ஓர்
ஆழி தீர்த்தம், சிவதீர்த்தம்,
சங்க தீர்த்தம், தாழ்யமுனை
தளிநீர்க் கங்கை தயங்குகயைப்
பொங்கு தீர்த்தம், புனற்கோடி,
புணர்சாத் தியமே, மானதமாம்
துங்க தீர்த்தம், தனுக்கோடி,
தொகைநீர் நாமம் இவையாமே'' (2)

—சேதுபுராணம்.

## இலக்கியச் சிறப்பு:

இவ்விருபத்துநான்கு தீர்த்தங்களின் பெருமைகளும், இவற்றில் நீராடி, இராமநாதப் பெருமானை அன்புடன் வழிபட்டு வரம் பெற்று உய்ந்தோர் வரலாறுகளும் பிறவும், சுவை துளும்பும் கதைப் போக்கில்* அமையவும், இலக்கிய நயஞ் செறியவும், நிரம்ப அழகிய தேசிகரால் சிறந்த முறையில் பாடப்பெற்று உள்ளன. ஆங்காங்கு இடையிடையே அமைந்து வரும் இயற்கை வருணனைப் பகுதிகளும், கற்பவர் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் நிலையில் அற்புதமாக அமைந்திருக்கின்றன. பாண்டி நாட்டில் நெற்பயிர் வளரும் திறத்தினையும், மாட்சியினையும்,

''உவந்தெதிர்ந்த மொழிப்போரில்
உற்றபொருள் உரைசெய்யும்
தவம்திரிந்த பொதிமங்கைச்
சாக்கியர்போல் தலைநிறுவி,
அவந்தருசொல் லவர்வாதில்
அழிந்ததற்பின் தமிழ்விரகர்
சிவந்தகழல் பணிந்தமைபோற்
செந்நெல்விளை கதிர்விளைந்த!''

''போதுபயில் களைகளைந்து
போக்குதலும் புணர்ந்தபெரும்
பாதகம்போய் அகன்றவழிப்
பயனுதவும் நல்வினைபோற்
கோதில்பசுஞ் சுருள்விரித்துக்
கொண்டகரு வெளிப்படுத்தி
ஏதமில்சீர் வயற்பைங்கூழ்
ஈன்றசெழுங் கதிர்ஈட்டம்''

—சேதுபுராணம்

எனவரும் சுவை மிக்க பாடல்களால் நூலாசிரியர் விளக்கிச் சென்றிருக்கும் திறன் பெரிதும் போற்றி மகிழ்தற்குரியது. பாண்டி நாடாகிய தென்னாடு தந்தையைப் போலவும் தாயைப் போலவும், அரசனைப் போலவும், குருவைப் போலவும் விளங்குகின்றது.

''தரும்பயம் ஆற்ற லாலே
தந்தையை நிகர்க்கும்; தம்பால்
இருந்தனம் ஈகை யாலே
ஈன்றவள் ஏய்க்கும்; எண்ணில்
வரும்படி அளித்த லாலே
மன்னவன் மானும்; மாட்சித்
திருந்து வீடு உதவ லாலே
தேசிகனும் தென்னன் நாடு''

## இராமேசுவரம், கந்தமாதனம்:

இங்ஙனமே இராமேசுவரத்தின்கண் உள்ள கந்தமாதனம் என்னும் குன்று, சிவபெருமான் திருமால் பிரமன் விநாயகர் முருகன் இந்திரன் மலைமகள் திருமகள் கலைமகள் என்பவர்களைப் போலவும், கயிலை மலை, கனக மலை, மந்தர மலை போலவும் விளங்குகின்றது எனத் தம் கற்பனைத் திறம் தோன்ற ஒப்புவமைகள் பல காட்டித் தனித் தனியே விதந்தெடுத்துப் பாடியிருக்கும் சிலேடையணிச் செய்யுட்கள், நம்மனோர் வியந்து நயந்து போற்றி மகிழத்தக்கனவாகும்.

''மாதர் ஓதி புனைவது மாலையே;
மாலை நல்க வருவது மாலையே;
கோதை மார்இடை ஒப்பது நூலையே;
கூறு கின்றது முத்தமிழ் நூலையே;
வேத வேள்வி புரிகடன் வேலையே;
வீண் இழைப்பதின் மூயிடும் வேலையே;
காதல் அர்க்கியம் ஈவது காலையே;
கருது கின்றது கண்ணுதல் காலையே'' (1)

''மான் அனார்முலை வாரண கும்பமே;
வாயில் மேயது பூரண கும்பமே;
தானம் யாவையும் நந்த வனங்களே;
தணிவர் வந்தவர் தந்த வனங்களே;
பானம் மேயது வாச நளினமே
பயிலும் மானவர் பேசல் நளினமே;
ஆன கேணி யுறும்உற் பலங்களே
அன்பர் கூட்டம் பெறும்முற் பலங்களே''

—சேதுபுராணம் (2)

[ஓதி—கூந்தல். மாலை—பூமாலை, மாலைக் காலம், மயக்கம். வேலை—கடல், தொழில். காலை—காலை நேரம், திருவடியை.

வாரணகும்பம் — யானையின் மத்தகம். வாயில்—வாயிற்படி. தானம்—இடம். தவனங்கள்—வெப்பம், துன்பம். பானம்—நீர், நீர் நிலை. நளினம்—தாமரை, மென்மை. உற்பலங்கள்—குவளை மலர்கள். மானவர்—மனிதர்கள். முற்பலங்கள்—முற்பிறவியிற் செய்த நல்வினையின் பயன்கள்].

என்பன போல வரும் சொற்பொருட் சுவை நலஞ் சான்ற அற்புதக் கவிதைகள் சேது புராணத்தின் கண் மிகப் பல உள்ளன. அவைகள் அனைத்தையும் பற்றி இங்கு விளக்கப் புகுதல் எளிதின் இயல்வது ஒன்றன்று.

நிரம்ப அழகிய தேசிகர் பல திறப் புலமை நலங்களும் கைவரப் பெற்றவர். சிறப்பாக அவர் இலக்கணப் புலமையிலும், ஒரு பெரும் கலைக் குரிசிலாக ஒப்புயர்வற்று விளங்கியிருந் திருக்கின்ருர். அதனுல் தமது இலக்கணப் புலமை நலம் தோன்றச் சேது புராணத்தின் கண், அவர் ஆங்காங்கே பல அரிய இனிய செய் யுட்களை அமைத்திருக்கின்ருர். அவற்றில் இரண்டொன்றைப் பற்றி மட்டும், ஈண்டு இக் கட்டுரையில் சிறிது கண்டு அமைவோம்.

**''இல்லம் என் கிளவி'':**

பாண்டி நாடு செல்வ வளம் கொழித்துச் செழித்துத் திகழ்கின்றது. மக்கள் எல்லோரும் மிக்க பெரும் செல்வர்களாகத் திகழ்கின்றனர். அங்கே வறியவர் ஒருவரும் இலர். வறுமை என்பது அங்கு மருந்துக்கும் இல்லை. எல்லோரும் செல்வ நிலையில் செழித்து இன்புற்று வாழ்ந்து வருகின்றனர், என்று சொல்ல வருகின்ருர் ஆசிரியர்!

''இல்லம்என் கிளவி அந்நாட்
டிருப்பவர் இசைக்குங் காலை
வெல்லருங் கேள்வி மேலோர்
விதித்திடும் இலக்க ணத்துள்
சொல்லிடும் பெயரே, ஏனைத்
தொழிற்குறிப்பு இரண்டி னுள்ளும்,
நல்லதோர் பெயரே யன்றி
நவின்றிட, நாடி டாரே''

பாண்டி நாட்டில் வறுமையே இல்லை என்பது இப்பாடலின் கருத்து. ''இல்லம்'' என்னும் சொல்லைப் பெயராகவும், வினைக் குறிப்பாகவும், இலக்கண முறைப்படி கொள்ள லாம். பெயராயின் 'வீடு' எனவும், வினைக் குறிப்பாயின், **'இல்லாத நிலையில் உள்ளோம்'** எனவும் பொருள்படும். எனவே பாண்டி நாட் டார் அச்சொல்லை வழங்குவதாயின், பெயராக மட்டும் வழங்குவரேயன்றி, வினைக்குறிப்பாக அமைய வழங்கவே மாட்டார்கள். அதற்குக் காரணம், அங்குள்ள யாவரும் செல்வம் மிக்க வர்களாகத் திகழ்தலேயாம்'' என்பது இதன் பொருள். நாட்டு வளம் பாடுமிடத்தும் தமது நல்லிசைப் புலமை நலம் தோன்ற, நிரம்ப அழகிய தேசிகர் இங்ஙனம் இலக்கணத் துறை யிற் கற்பனை அமைத்துப் பாடியருளியமை, நிரம்ப அழகுடையதாய்க் கற்பார் எவர்க்கும் கழிபெருஞ்சுவை பயப்பதாகும்.

**விட்ட இலக்கணை:**

ஒரு மொழியின்கண் உள்ள சொற்களை யெல்லாம் வாசகம் இலட்சகம் வியஞ்சகம் எனத் தருக்க நூலார் மூவகையாகப் பிரிப்பர். இவற்றையே அலங்கார நூலார் அபிதை, இலக் கணை, வியஞ்சன விருத்தி என வேறு பெயர் களால் வழங்குவர் எனப் பிரயாக விவேகம் என்னும் இலக்கண நூல் கூறும். நன்னூல் விருத்தியுரையுள் ''வடநூலார் சொற்பொருளை வாச்சியம் வியங்கியம் இலக்கணை என மூன்று எனவும், இலக்கணையை வியங்கியத்துள் அடக்கி இரண்டெனவும் கூறுப. இவற்றுள் வாச்சியம் என்பது வெளிப்படை. வியங்கியம் என்பது குறிப்பு. இலக்கணை என்பது ஒரு பொருளினது இலக்கணத்தை மற்றெரு பொருட்குத் தந்து உரைப்பது'' என வருதலுங் காணலாம். ஆசிரி யர் பரிமேலழகர் 'சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்'' என்புழி ''சொல்லின் தொகை எனவே, செஞ்சொல் இலக்கணைச் சொல் குறிப்புச் சொல் என்னும் மூவகைச் சொல்லும் அடங்கின'' என எழுதியிருத்தலும் கருதற் பாலது.

இலக்கணையாவது, பெயராகவோ வினை யாகவோ நிற்கும் சொற்கள் தத்தம் பொருளை உணர்த்தாமல், பொருளின் சம்பந்தப் பொருளை யும் தாற்பரியப் பொருளையும் அறிவித்து நிற் றல். அது விட்ட இலக்கணை, விடாத இலக் கணை, விட்டும் விடாத இலக்கணை என மூன்று வகைப்படும். ''வைகலும் பூங்கழிவாய் வந்து மேயுங் குருகினங்காள் கைகள் கூப்பிச் சொல் லீர்'' என்புழிக் குருகுகளும், கூப்பிச் சொல்லும் தன்மையும் இன்மையின், அது விட்ட இலக் கணை எனப்படும். ''கங்கையின் கண் இடைச் சேரி'' என்புழி, இடைச்சேரி கங்கைக் கரையின் கண் இருத்தல் பெறப்படுதலின், அது விடாத இலக்கணையாகும். ''பாயிருள் பருகிப் பகல் கான்று எழுதரும் பல்கதிர்ப் பருதி'' என்புழி இருளைப் பருகுதலும். பகலைக் காலுதலும் பருதிக்கு இல்லையாயினும், இருளைப் போக்கிப் பகலைத் தருதல் பருதிக்கு இயல்பாகலின், அது விட்டும் விடாத இலக்கணை என்பர். இவற்றுள் விட்ட இலக்கணை என்னும் இலக்கணக் குறி யீட்டினைப் பின்வரும் சேது புராணச் செய்யு ளில், நிரம்ப அழகிய தேசிகர் வழங்கியிருத்தல் மனம் கொளற்பாலது.

''கட்டவிழ்ந்து பொலிகமலம் என்னஎரி
காமர் வேள்வியழல் முன்னரே
வட்டமா நிலம்வகுத்த தாதைஎன
மன்னும் மாதவர்கள் மலரின்மேல்
எட்டுவாள் விழிவிரிஞ்சன் வைகியிடும்
என்றிடும் பொருளை மன்றவே
விட்ட லக்கணையினுல் உணர்த்திடுவர்
வேறு கூறுவதென் மேன்மையே''

நைமிசாரணியத்தில் நிகழும் வேள்விகளின் சிறப்பையும், அவற்றை இயற்றும் முனிவர் களின் சிறப்பையும் உணர்த்துவது இச்செய்யுள். தாமரை மலரில் நான்முகன் அமர்ந்திருத்தலை, வேள்வித் தீயின் முன்னர் அமர்ந்திருக்கும் முனிவர்கள் உணர்த்தும் இயல்பினராக உள்ள னர் என்பதில் தீயோடு தாமரைக்கும், நான் முகனெடு முனிவர்க்கும் ஏதோ பெரிதும் இயை புளது போலக் கூறப்பட்டிருப்பினும், உண்மை யான் நோக்குழி அத்தகைய இயைபேதும் இலா மையின், இது விட்ட இலக்கணை ஆயிற்று.

**முடிவுரை:**

இங்ஙனம், நுட்பமான அரிய இலக்கணக் கருத்துக்களையும், குறியீடுகளையும் கூடக் கருவி யாகக் கொண்டு, அழகிய கற்பனைகள் பல

அமையுமாறு சேது புராணத்தின்கண் நிரம்ப அழகிய தேசிகர் திறம்படப் பாடியிருக்கும் செய்யுட்கள் பல உண்டு. அவைகளை யெல்லாம் விரிக்கிற் பெருகும், தொகுப்பின் எஞ்சும். அவை களெல்லாம் அறிஞர் பெருமக்களுக்கு ஆராப் பெரு விருந்தாகும்! கவிதைச் சுவைக்கும், இலக்கிய நயத்திற்கும், சேது புராணம் ஒரு சிறந்த கருவூலம் ஆகத் திகழ்கின்றது. தமிழன்பர்கள் அனைவரும் இந்நூலைப் பயின்று போற்றி மகிழும் கடப்பாடுடையவர்கள் ஆவர்!


*[அண்மையில் (5—2—75) நடைபெற இருக்கும் இராமேசுவரம் அருள்திரு இராமநாத சுவாமி திருக்கோயில், திருக்குட நன்னீராட்டு விழாவை முன்னிட்டு எழுதப்பெற்ற கட்டுரை.]*

* In these stories and anecdotes there is doubtless a large mixture of fable; but they are not on that account unworthy of being recorded; for it is both an authentic and an important fact that such tales, whether false or true, were heard by our ancestor's with eagerness and faith."

**—Lord Macaulay,**
*in The History of England.*

"Indian mathology is richer, vaster- vers beautiful, and full of meaning. I have often wondered what manner of men and women they were who gave shape to these brightest dreams and lovely fancies, and of what gold mine of thought and imagination they dug them."

**—Jawaharlal Nehru,**
*The Discovery of India.*



திருச்செந்தூர் அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் சார்பில ஐந்து இலட்ச ரூபாய் செலவில் கட்டப்பட இருக்கும் மகப்பேறு, கண் மருத்துவமனையின் கால்கோள் விழா 19-10-74 அன்று நடைபெற்றது. விழாவில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்கள் உரை நிகழ்த்துகிறார்கள்.

# அருள்திரு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில்

## எண்கண், நன்னிலம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்

இத்தலம் தஞ்சாவூர் மாவட்டத்தில் திருவாரூருக்கு மேற்கே எட்டு கல் தொலைவில் அமைந்துள்ளது. திருவாரூரிலிருந்து இத்திருத்தலத்தை அடைய நகரப் பேருந்து வசதி உண்டு.

தமிழரின் முழுமுதற் கடவுளாகிய அருள்திரு முருகப்பெருமான் சிறு பிராயத்தில் இருக்கும்போது சிருஷ்டிகர்த்தா பிரமாவுக்கு ''ஓம்'' என்னும் பிரணவ மந்திரம் தெரியாததால் சிருஷ்டித் தொழிலையும் வாங்கிக் கொண்டு சிறையில் அடைத்துவிட்டார். சிவபிரானுக்கே மந்திரம் போதித்து தகப்பன் சுவாமியானார். தனது கருணை விழியால் பிரமாவை விடுதலை செய்தார். பிரமா சிருஷ்டித் தொழில் கிடைக்க வேண்டி தவம் செய்ய இவ்வூரில் சகல ஆன்மாக்களும் உய்யும்பொருட்டு வந்த எம்பிரான் பிரமாவுக்கு சிருஷ்டித் தொழிலளித்து பிரமபுரீசுவரர் ஆனார். சிக்கலில் கட்டை விரலையும், எட்டுக் குடியில் கண்ணையும் இழந்த சிற்பி, கண்கள், கட்டை விரல்கள் இல்லாது இருப்பினும், மயில் மேல் ஏறும் வேலவனுக்கு மயிற்காலே ஆதாரமாகக் கொண்டு எண்ணமே கண்ணாகக் கொண்டு முருகப் பெருமானுக்கு சிலை வடித்ததால் ''எண்கண்'' என்ற திருப்பெயர் பெற்று சிறப்புற்றது. மேலும், அச்சிற்பி, வேலவனுக்கு சிலை வடித்து முடியும் தருவாயில் அருகில் உதவி செய்த பெண்மணியின் கையில் உளிபட்டு ரத்தம் பீறிட்டது. பீறிட்ட ரத்தம் சிற்பியின் கண்களில் பட்டு பளீரென திறந்து பார்க்கும் சக்தியைப் பெற்றது. உடனே ''எண்கண் கொடுத்த வேலனே'' எனச் சிற்பி பாடவே ''எண்கண்'' எனப் பெயர் பெற்று சிறப்புற்றது. இந்தத் தலம் அருணகிரிநாதரால் பாடல் பெற்ற தலம்.

இத்தலத்தில் ஆண்டுதோறும் ஐப்பசித் திங்களில் கந்த சஷ்டி விழாவும், மாசிக் கார்த்திகை, தை மாதத்தில் நடைபெறும் தைப்பூசம் பெருவிழா முதலியனவும் அதி விமரிசையாக நடைபெற்று வருகின்றன. சிற்பிக்கு கண்களைக் கொடுத்து காட்சி அருளிய ''எண்கண்'' வேலவனை ஒரு முறையாவது தரிசித்து ஆண்டவனின் அருளுக்குப் பாத்திரராக வாரீர்! வாரீர்!!

திரு. முனிசாமி, பி.எஸ்சி.,
செயல் அலுவலர்.

# அருள்திரு முல்லைவனேசுவரர் திருக்கோயில்

# முல்லைவாசல்

## மன்னார்குடி வட்டம், தஞ்சை மாவட்டம்

ஸ்ரீகற்பகவல்லி சமேத ஸ்ரீமுல்லைவனேசுவரராக பரமேசுவரன் விளங்கும் இத்தலம் ''தென்திருமுல்லைவாசல்'' என வழங்கப்படுகிறது. இத்தலம் நீடாமங்கலம் ரயில்வே நிலையத்துக்குக் கிழக்கே 3 கி.மீ. தூரத்தில் உள்ளது. முல்லைவாசல் ஸ்ரீ வெங்கட்டராம அய்யர் அவர்களின் பாரம்பரியத்தில், சிவ அய்யர் என்கிற ஸ்ரீ சிவசுப்பிரமணிய அய்யர் அவர்களின் வம்சத்தார்களால் பரிபாலனம் நடத்தப்பட்டு வருகிறது. கோவில் நிதியிலிருந்து ரூ. 48,000-க்கு திருப்பணி செய்யப்பட்டும், மேலும் ரூ. 40,000-க்கு அங்கீகாரம் பெறப்பட்டும் வேலைகள் நடத்தப்பட்டு வருகின்றன. சமீபத்தில் கும்பாபிஷேகம் நடைபெற முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளது.

### தல வரலாறு

ஸ்ரீமகாவிஷ்ணுவுக்கு இரண்ய சம்ஹாரத்தினால் ஏற்பட்ட பிரமஹத்தி தோஷம் நீங்க, சிவபெருமான் தன் கையில் இருக்கும் மானைக் கொண்டு ''மிருக பாத தீர்த்தம்'' என்ற தடாகத்தை உண்டாக்கி அதில் ஸ்ரீமகாவிஷ்ணு நீராடி, ஈஸ்வரனை பூஜை செய்து சாப நிவர்த்தி செய்து கொண்டதாக ஐதீகம். மேற்படி தடாகத்தில் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக் கிழமைகளில் நீராடி ஈஸ்வரனை வணங்கினால் சகல தோஷ நிவர்த்தி ஏற்படும்.

பக்தர்கள் மேற்படி ஸ்தலத்திற்கு விஜயம் செய்து இறைவன் அருளுக்குப் பாத்திரர்களாகும்படி வேண்டுகிறேன்.

முல்லைவாசல்.

ஆர். நீலகண்ட அய்யர்,
பரம்பரை தர்மகர்த்தர்.

# கந்த புராணம்

திருமுருக கிருபானந்தவாரியார்.



முன்னுரை :

கந்தன் என்ற சொல்லுக்கு மூன்று பொருள்கள் உள :

(1) ''சத்ருன் சோஷயதீதி ஸ்கந்த'' என்று அமரசிம்மம் என்ற வடமொழி நிகண்டு கூறுகின்றது. பகைவருடைய ஆற்றலை வற்றச் செய்பவன் கந்தன். இராமாயணம், பாரதம், பாகவதம் முதலிய நூல்களில் பகைவர்களைக் கொன்றதாகத்தான் வரலாறுகள் பேசுகின்றன. கந்த புராணத்தில் முருகவேள் பகைவனுகிய சூரபன்மனை வதைத்து விட்டதாக வரலாறு இல்லை. அவன் மயிலும் சேவலுமாகி வாழ்வு பெற்றுன்.

தீயவை புரிந்தா ரேனும்
முருகவேள் திருமுன் உற்ருல்
தூயவ ராகி மேலைத்
தொல்கதி யடைபவர்; என்கை
ஆயவும் வேண்டுங் கொல்லோ?
அடுசமர் அந்நாள் செய்த
மாயையின் மகனு மன்றே?
வரம்பிலா அருள்பெற் றுய்ந்தான்

—கந்தபுராணம்

சிங்கமுகன்—அம்பிகைக்குச் சிம்ம வாகனமாகப் போந்தான்.

தாரகன்—ஐயனுருக்கு யானைவாகனமாகப் போந்தான்.

(2) ஆறு திருமேனிகளும் ஒன்ருகப் பொருந்தினவன் என்பது மற்றொரு பொருள்.

(3) கந்து—யானை கட்டுந் தறி.

கந்து என்ற பகுதியோடு அன் என்ற ஆண்பால் விகுதி புணரக் கந்தன் என்று ஆயிற்று. ஆன்மாக்களுக்குப் பற்றுக் கோடாக இருப்பவன் கந்தன்.

புராணம் என்ற சொல் பழமை என்று பொருள்படும். புராதனம் என்ற சொல் புராணம் என்று மருவியது.

புராணம் ஏன்?

வைரத்தைச் சோதிப்பானுக்குப் பூதக் கண்ணுடி இன்றியமையாது வேண்டப்பெறுவது போல், வேதத்தில் உள்ள நுண்ணிய பொருள்களை விரித்துக் காட்டுவது புராணம் எனவுணர்க.

''சத்யம்வத'' என்ற வேத வாக்கியத்தை விரித்துக் கூறுவது அரிச்சந்திர புராணமாகும். நன்றி கொன்றவன் விரைந்து அழிவான் என்ற ஒரு பெரிய தருமத்தை விரித்து உணர்த்துவது கந்த புராணம் எனவுணர்க.

சூரபன்மனுக்கு 1,008 அண்டங்களையும், 108 யுகங்கள் அரசு புரியும் ஆட்சியும், வச்சிர யாக்கையின் மாட்சியும் வேறு பல வரங்களையும் அள்ளி அள்ளி வழங்கிய வள்ளலாகிய சிவமூர்த்தியின் திருக் குமாரராகிய முருகப் பெருமானை எதிர்த்து அமரனுனன். அவன் கொன்ற நன்றியே அவனைக் கொன்று விட்டது.

ஒன்றொரு பயன்தனை உதவி னேர்மனம்
கன்றிய ஒருவினை கருதிச் செய்வரேல்
புன்றொழி லவர்க்குமுன் புரிந்த நன்றியே
கொன்றிடும் அல்லது கூற்றும் வேண்டுமோ?

—கந்தபுராணம்

நன்றி மறத்தல் ஒன்று. நன்றி கோறல் ஒன்று. இந்த இரு பாவங்களும் உய்வு இல்லாத துயரத்தை நல்கும். நன்றி கொன்றவனுக்கு உய்வு இல்லை என்பதனை விரித்துக் கூறுவதே கந்த புராணம் எனவுணர்க.

புராணங்கள் 18 :

1. பிரம புராணம்
2. பதும புராணம்
3. வைணவ புராணம்
4. சைவ புராணம்
5. பாகவத புராணம்
6. பவுடிய புராணம்
7. நாரதீய புராணம்
8. மார்க்கண்டேய புராணம்
9. ஆக்கினேய புராணம்
10. பிரமகைவர்த்த புராணம்

11. இலிங்க புராணம்
12. வராக புராணம்
13. கந்த புராணம்
14. வாமன புராணம்
15. மற்ச புராணம்
16. கூர்ம புராணம்
17. காருட புராணம்
18. பிரமாண்ட புராணம்

இவற்றுள் சைவ புராணங்கள் 10

1. சைவ புராணம்
2. பவுடிய புராணம்
3. மார்க்கண்டேய புராணம்
4. இலிங்க புராணம்
5. கந்த புராணம்
6. வராக புராணம்
7. வாமன புராணம்
8. மற்ச புராணம்
9. கூர்ம புராணம்
10. பிரமாண்ட புராணம்

என்ற 10-ம் சிவ புராணங்களாகும்.

விஷ்ணு புராணம் 4

காருட புராணம், நாரதீய புராணம், வைணவ புராணம், பாகவத புராணம் என்ற இந்த நான்கும் விஷ்ணு புராணங்களாகும்.

இனி பிரம் புராணம், பதும புராணம் என்ற இரண்டும் பிரம புராணங்கள்.

ஆக்கினேயம்—அக்கினி புராணம்.

பிரமகைவர்த்தம்—சூரிய புராணம்.

சிவ புராணங்கள் பத்தும் சாத்துவிகங்களாம். சத்துவ குணம்—வெண்ணிறமுடையதாய், சுகத்துக்கும் ஞானத்துக்கும் இடமாம்.

விஷ்ணு புராணங்கள் நான்கும் தாமசங்களாகும்.

பிரம புராணம் இரண்டும் இராசசங்களாம்.

அக்கினி புராணமும், சூரிய புராணமும் முக்குணச் சேர்க்கையுடையனவாம். ஆதலால் சிவ புராணங்கள் மிகவும் மேன்மையுடையனவாம்.

இந்தப் பதினெண் புராணங்களைப் பாடியவர் வியாச முனிவராகும். பதினெண் புராணங்களின் கிரந்த எண் நான்கு லட்சம் ஆகும். இதில் கந்த புராணம் மட்டும் ஒரு லட்சம் கிரந்தங்கள்; ஏனைய பதினேழு புராணங்களின் கிரந்த எண் மூன்று லட்சங்களாகும். எனவே மகிமையால் மட்டுமன்றி அளவாலும் சிறந்தது கந்த புராணம் ஆகும் எனலாம்.

இது ஆறு சங்கிதைகள் கொண்டது.

கந்த புராணம்,
சனற்குமார சங்கிதை
சூத சங்கிதை
பிரம சங்கிதை
விட்டுணு சங்கிதை
சங்கர சங்கிதை
சூர சங்கிதை

என ஆறு சங்கிதைகளை உடையதாகும்.

| | | |
|---|---|---|
| 1. | சனற்குமார சங்கிதை எண் | 55,000 |
| 2. | சூத சங்கிதை கிரந்த எண் | 6,000 |
| 3. | பிரம சங்கிதை கிரந்த எண் | 3,000 |
| 4. | விட்டுணு சங்கிதை கிரந்த எண் | 5,000 |
| 5. | சங்கர சங்கிதை கிரந்த எண் | 30,000 |
| 6. | சூர சங்கிதை கிரந்த எண் | 1,000 |
| | | 1,00,000 |

இவற்றுள் சங்கர சங்கிதை பன்னிரு காண்டங்களை உடையது. இவற்றுள் முற்பட்டது சிவரகசிய காண்டம். இது 13 ஆயிரம் கிரந்தங்களை யுடையது.

1. சம்பவ காண்டம்
2. அசுர காண்டம்
3. மகேந்திர காண்டம்
4. யுத்த காண்டம்
5. தேவ காண்டம்
6. தட்ச காண்டம்
7. உபதேச காண்டம்

என்ற ஏழு காண்டங்களை உடையது.

இவற்றுள் முதல் ஆறு காண்டங்களையும் கச்சியப்ப சிவாச்சாரிய சுவாமிகள் தமிழில் 10,345 செய்யுளாகச் செய்தருளினர்.

உபதேச காண்டம் என்ற ஏழாவது காண்டத்தைக் குகனேரியப்ப முதலியார் தமிழில் அருளிச் செய்தார். ஞானவரோதயரும் இதனை அருளிச் செய்தார்.

கந்த புராணம் புராண நாயகமாகும். கடிய கொடிய இருளை ஞாயிறு எளிதில் அகற்றுவது போல், கந்தப் பெருமானுடைய கீர்த்தி ஒன்றே கலியில் வரும் பாவங்களைப் போக்க வல்லது என்று உணர்க.

''ஸ்கந்தஸ் கீர்த்திம் அதுலாம்
கலிலே மவு நாசினீம்''

என்ற திருவாக்கால் அறிக.

பன்னிரு கரங்களாலும் அள்ளி அள்ளி வழங்கும் வள்ளலாகிய கந்தப் பெருமானுடைய புராணத்தைப் படித்தோர்கள், கேட்டோர்கள் அனைவரும், இந்த உலகில் இந்திரனைப் போல்

இனிது இன்பமுடன் வாழ்வார்கள். எண்ணிய எண்ணங்கள் யாவும் நிறைவேறப் பெற்று, இறுதியில் அழியாத சிவகதி சேருவார்கள்.

இந்திரராகிப் பார்மேல் இன்பமுற் றினிது மேவிச்
சிந்தையில் நினைந்த முற்றிச் சிவகதி யதனில்சேர்வர்
அந்தமில் அவுணர் தங்கள் அடல்கெட முனிந்த
செவ்வேற்
கந்தவேள் புராணந்தன்னைக் காதலித் தோது
வோரே

கந்த புராணத்தில் உலகில் உள்ள சமய வுண்மைகள், மதக் கொள்கைகள், யாவும் அடங்கியுள்ளன. அதனுல் ''கந்த புராணத்தில் உள்ள பொருள் வேறு எந்த புராணத்திலும் இல்லை'' என்ற பழமொழி வழங்கலாயிற்று. இதனைக் மாற்றிக் கந்த புராணத்தில் உள்ள புளுகு எந்தப் புராணத்திலும் இல்லை எனச் சிலர் கூறித் தீவாய் நரகிடைச் சேருவர்.

இது முதல்வன் புராணம் எனப் பெறும். இதனை அன்புடன் நாள்தோறும் பாராயணம் புரிவோர் இகபர நலன்களை எளிதிற் பெறுவர். இப் புராணத்தில் ஞான வாசனை வீசுகின்றது.

ஆணவ மலம்—சூரபன்மன்
கன்ம மலம்—சிங்கமுகன்
மாயா மலம்—தாரகன்
ஞானம்—வேல்

ஞான பண்டிதன் மும்மலங்களைச் செற்று ஆன்மாக்களாகிய தேவர்களைப் பந்தத் தினின்றும் விடுவித்தார் என்பதே கந்த புராணத்தின் உட்பொருள்.

இலங்கை வாழ் சைவர்கள் கந்தபுராணத்தை 10 விதிப் படி பாராயணஞ் செய்து பிணியினின்றும் தணியப் பெறும் வழக்கம் இன்றும் மேற் கொள்ளுகின்றூர்கள்.

முருகப் பெருமானுடைய அவதாரத்தைப் பற்றிப் பல நூல்களில் பலவாறு கூறப்பட்டிருக்கின்றன. அவைகள் பலப்பல யுக பேதங்களால் ஏற்பட்டவை. கந்த புராணத்தில் வரும் வரலாறே சிறப்புடையதாகும்.

ஞாலமெல்லாம் போற்றும் கந்த புராணம் காலத்தாலும் சீலத்தாலும் முற்பட்டதாகும். இதனை அன்புடன் ஓதுவோர் தீது தீர்வர். கந்தவேள் கருணையைப் பெற்று, நோயின்றி நீண்ட நாள் வாழ்வர்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள்
வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



செப்டம்பர் 27, 28, 29 தேதிகளில் திருவிடைமருதூரில் திருமுறை விழாவிலும், திருமுறைக் கருத்தரங்கத்திலும் கலந்து கொண்டு திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் உரைநிகழ்த்துகிறூர்கள்.



செப்டம்பர் 27, 28, 29 தேதிகளில் திருவிடைமருதூரில் நடைபெற்ற திருமுறை விழாவிலும் திருமுறைக் கருத்தரங்கத்திலும் கலந்துகொண்டு திருக்கோயில் ஆசிரியர் திரு. ந. ரா. முருகவேள் அவர்கள் உரையாற்றுகிறூர்கள்.




'மனிதன் உணவால் மட்டுமே வாழ்பவன் அல்ல'.

வாழ்வில் வரும் துயர்களைப் போக்கிட, வரும் இன்பங்களைத் தாங்கிட இறைவனது நினைவாலும் வாழ்கிறான்.

நினைப்பதெல்லாம் நடப்பதில்லை.

நினைப்பது நடந்துவிட்டால் இறைவனை நினைப்பதில்லை.

இறைவனை நினைக்கிறோம். இதயத்தில் உள்ள எண்ணங்களை நிறைவேற்றித் தந்திட அவனிடத்தில் வேண்டுகிறோம்!

வேண்டும்போது அடியார்க்கு அருள்செய்பவன் இறைவன். வேண்டுவதெல்லாம் இறைவன் அளிப்பதில்லை. யார் யாருக்கு எதையெதைத் தர வேண்டுமோ அவரவர்க்கு அதையதைத் தருகிறான்.

தருவதைப் பெற்று மகிழ்ச்சியால் இறைவனை வாழ்த்துகின்றனர். ஏற்றிப் போற்றுகின்றனர்.

இதைத்தான் பெரியவர்கள் முன்வினைப் பயன் என்றும், முற்பகலில் செய்ததெல்லாம் பிற்பகலில் தெரியும் என்றும் கூறுகின்றனர்.

நாம் செய்த நல்வினைகள் நம்மை மேன்மைப்படுத்துகின்றது. செய்த தீவினைகள் நம்மைத் துன்பச் சுழலில் தவிக்க விடுகிறது.

துன்பச் சுழலில் சிக்கித் தவிக்கும்போது இறைவனிடம் முறையிடுகிறோம். எப்பிறப்பில் எந்த வித வினை செய்திருப்பினும் பொறுத்து இப்பிறப்பில் நல்ல வாழ்வைக் கொடு என்று யாசிக்கின்றோம்.

உள்ளம் அவனை நினைந்து உருகுகிறது. தூய்மையான ஆத்மாவைப் பற்றிய எண்ணம் உண்டாகிறது.

ஆத்மா கவலையை மறந்து அவனது அடிகளைப் பாடுகிறது.

''கொடிய என் நெஞ்சம் அவரென்றே கிடக்கும்'' என்றும், ''நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே'' என்றும், ''மாசில் வீணையும் மாலை மதியமும் வீசுதென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசன் எந்தை இணையடி நிழலே'' என்றும் துன்பமும் இன்பமுமாகப் பாடுகிறது.

காடு திருத்தப்படுகிறது.

களை எடுக்கப்படுகிறது.

மண் வளப்படுத்தப்படுகிறது.

சோலை உருவாக்கப்படுகிறது.

ஒரு சோலை உருவாக எத்தகைய உழைப்புத் தேவைப்படுகிறது. அதுபோல ஆண்டவனின் மெய் அன்புக்குப் பாத்திரமாக,

மனம் திருத்தப்பட வேண்டும்.

அதிலே இருக்கும் பொறாமை நீங்கிட வேண்டும்.

பொல்லாங்கு, பொய்ம்மை அடியோடு அழிந்திட வேண்டும்.

இவைகள் அழிபடுமானால் மனத்திலே எஞ்சியிருப்பது அன்பு மட்டுமே.

அன்புதான் ஆண்டவனின் சந்நிதானம்.

பிறருக்குச் செய்கின்ற நன்மை தான் ஆண்டவனுக்கு அர்ச்சிக்கின்ற மலர்.

அவர்கள் மீது செலுத்துகின்ற அன்புதான் ஆண்டவனுக்குச் செய்கின்ற பாலபிஷேகம்.

ஆசையும் அன்பும் இணைந்து இருப்பது தான் முழுமையான வாழ்க்கை.

ஆசைக்கும் அன்புக்கும் எழுகின்ற போட்டி நிலையில் ஒவ்வில்லையானால் அவனது வாழ்க்கையில் சுகம் இல்லாமற் போய்விடுகிறது.

சுகமில்லாத வாழ்வு சுவையில்லாத உணவைவிட மோசமானது.

உலகத்திலுள்ள பொருள் மீது சிந்தனை செய்கின்றவனுக்கு அவற்றின் மீது ஆசை உண்டாகிறது. ஆசையோடு பார்த்த பொருள் கிடைக்கத் தடை யுண்டாகும் போது கோபம் உண்டாகிறது. கோபம் உண்டாகும்போது அறிவின்மை உண்டாகிறது. அறியாமையிலிருந்து நினைவின்மை உண்டாகிறது.

எதைச்செய்கிறோம், என்னசொல்கிறோம். என்ற சிந்தனைக்கு இடம் கொடுக்காமல் செயல் படத் தூண்டுகிறது. புத்தி பேதலிக்கிறது.

புத்தி பேதலிப்பைத் தடுத்திட வேண்டும் அப்படியானால் அடிப்படையையே மாற்றிக் கொள்ள வேண்டும். பொருள் மீது ஆசை ஏற்படுவது இயற்கை. அந்தப் பொருளை ஆண்டு அனுபவிக்க எண்ணுவது பேதைமை.

கொடி மரம் நாடிச் செல்வது போல,

மனம் ஆசையை நாடிச் செல்கிறது.

கொடி படர மரம் உதவுகிறது.

ஆசை வளர மனம் தூண்டுகிறது.

தூண்டப்படுவது இயற்கை. அந்த இயற்கையைத் தன்னடக்கத்தால் கட்டிக் காத்து அந்த மனத்தை இறைவனை வழிபடத் திருப்ப வேண்டும்.

நெஞ்சமே ஆலயம். அதை இயக்குகின்ற வகையில் வெற்றி கொள்ள வேண்டும்.

‘‘ஒழுக்காறுக் கொள்க ஒருவன்றன் நெஞ்சத்
தழுக்கா றிலாத இயல்பு’’

என்ற வள்ளுவரின் வாய்மொழியை மனத்தில் கொண்டு நெஞ்சத்து அழுக்ககற்றி ஒழுக்கத்தோடு வாழ்வதே இறைவனது அடிகளை வணங்குவதாகும். அவனது அருளைப் பெறுவதற்கு இதுவே அடிகோலும். மரம்நாடிச் செல்லும் கொடிபோல இறைவன் அருள்நாடிச் செல்வோம். அவனது அருள் பெற்று வாழ்வோம்.



சேலம் கோட்டை அருள்மிகு பெரிய மாரியம்மன் திருக்கோயில் ஆடிப் பெருவிழாவில் நடைபெற்ற இசைச் சித்தர் திரு. C. S. ஜெயராமனின் இசை நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் க. ராசாராம் பி.ஏ., அவர்கள் தலைமையுரையாற்றுகின்றார்.

தொலைபேசி : 4954

# அருள்திரு சுகவனேஸ்வர சுவாமி திருக்கோயில்

## சேலம்—1

அன்புடையீர்,

சேலம் அருள்திரு சுகவனேஸ்வரர் திருக்கோயில், ஒளவையார், அருணகிரிநாதர், சுந்தரர், நக்கீரர் மற்றும் சுகமுனிவர் போன்ற பல சித்தர்களால் பாடல் பெற்ற புண்ணியத் தலம். புராணச் சிறப்பும் வரலாற்றுச் சிறப்பும் தன்னகத்தே கொண்டு சேல மாநகரில் நடுநாயகமாகத் திகழ்கின்றது. இத்திருக்கோயிலில், யானை மண்டபம், யானை நீராடும் தொட்டி, சிப்பந்திகள் குடியிருப்பு வீடுகள், நாகதேவதை சன்னதி, திருக்கோயில் நந்த வனம் திருப்பணி, சொர்ணாம்பிகையம்மன் மகா மண்டபம், புதிய மடப்பள்ளி, திருக்கோயில் வாயில் அலங்கார கோபுர மண்டபம், அலங்கார மின்விளக்கு வசதிகள், சேவார்த்திகள் நலனை உத்தேசித்து ஆண் பெண் கழிப்பிடங்கள், குடி தண்ணீர் வசதி, சிப்பந்திகள் வீடுகளுக்கு குடி தண்ணீர், மின்விளக்கு வசதி மற்றும் வேண்டிய வசதிகள், சத்துணவு திட்டத்தின் கீழ் தினமும் காலை மாலை இரு வேளைகளில் 50 ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் பால் வழங்கல், இலவசத் திருமணங்கள் முதலானவைகள் செவ்வனே குறுகிய காலத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தற்போது பல ஆண்டுகளாகப் பாழ்பட்டு கிடந்த திருக்கோயில் திருக்குளம் திருப்பணி மற்றும் ஆலய வருமானத்தைப் பெருக்கக் கடைகள், மேலும் ஆலய சிப்பந்திகளுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டுதல் முதலிய வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

திருக்கோயிலில் கல்யாண மண்டபம் கட்டுதல், சுகவன சுப்பிரமணியர் சுவாமிக்கு வெள்ளித் தேர், வெள்ளி மயில், ராஜ கணபதிக்கு வெள்ளி மூசிக வாகனம் செய்யவும் மற்றும் எல்லாவற்றிற்கும் முக்கியமாக திருக்கோயில் கோபுரங்கள் திருப்பணி செய்து, அஷ்டபந்தன, சொர்ணபந்தன கும்பாபிஷேகம் செய்திட பூர்வாங்க ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது என மகிழ்வுடன் அறிவித்துக் கொள்கின்றோம்.

ஆகவே இதனைக் கண்ணுறும் மெய்யன்பர்கள் அனைவரும், திருப்பணிக்கு வாரி வழங்கி வள்ளல் தன்மை எய்தி திருக்கோயில் வரலாற்றில் உங்கள் பெயரை நிலைநாட்டிக் கொள்ள வேண்டுகின்றோம்.

நன்கொடைகளை திருக்கோயில் நிர்வாக அதிகாரிக்கு அனுப்ப வேண்டுகின்றோம்.

**திரு. பி.எஸ். மாணிக்கம், எம்.சி.,**
அறங்காவலர் குழுத்தலைவர்.

**கே. ஆறுமுகம், பி.ஏ.,**
நிர்வாக அதிகாரி,
அருள்திரு சுகவனேசுவரர் திருக்கோயில்,
சேலம்—1.

திரு. வி. என்.ஓ. தம்மண்ண செட்டி,
திரு. கு. சுப்ரமணியம்,
திரு. ஒய்.என். ரங்கராஜு,
திரு. கே. ஜெயராமன்,
அறங்காவலர்கள்.

# மார்கழியின் மாண்பு

கவிஞர் அரங்க முத்துமணி

### வெண்பா

திங்கள்கள் பன்னிரண்டில் தேர்ந்திட்ட மார்கழியே
நங்கள்சீர்க் கண்ணபிரான் நாடியதாய்த்—தங்குபுகழ்க்
கீதைப் பெருநூல் கிளத்தும்;நம் வாழ்க்கைக்குப்
பாதைதனைக் காட்டுகிற்கும் பார்!

மாதிருக்கும் பாதியனார் மன்றத்தில் காட்சிதரும்
ஆதிரைப் பொன்னாள் அலர்ந்திடுமே!—கோதில்சீர்
ஆழ்வார்கள் போற்றும் அரங்கத்தில் வைகுந்தம்
சூழ்ந்திடுமே இம்மாதம் தோய்ந்து.

பாவைக் களம்அமைத்துப் பாவையர் தம்வாயான்
நாவை யசைத்து நயமுடனே—மேவும்
இருபாவை பாடும் எழில்மார் கழியின்
பெருமைக் கிணையோ? பிறிது.

ஏசுபிரான் தோன்றியநல் இன்பத் திருநாளில்
மாசற்ற பக்ரீத் மலர்ந்ததே!—வீசுபுகழ்
ஏகா தசியும்கண் டின்புற்றோம்; இவ்வாண்டு
வாகையுடன் மூன்றுமுடன் வாய்த்து.

வான்கலந்த மாணிக்க வாசகரும், ஆண்டாளும்
தேன்கலந்த பாவைநூல் தேர்ந்தளித்தார்—ஏன்தானோ
பீடுடைய மார்கழியைப் பீடையதாம் என்றுசிலர்
சாடுகின்றார்? அந்தோ! சலித்து.

# திருமழிசையாழ்வார் திருநெறி

டாக்டர் ந. சுப்புரெட்டியார். M.A., Ph.D.,

உலகம் தோன்றிய நாள் முதல் மக்களிடையே 'சமயம்' என்ற ஒன்று நிலவி வருகின்றது. பகலவனையும் கதிர்களையும் வெவ்வேருகப் பிரித்தற்கியலாதது போலவே, சமயத்தையும் மக்களையும் தனித்தனியாகப் பிரித்தல் இயலாது. அவர்கள் உயிரோடும் உடலோடும் ஒன்றி நிற்பது சமயமாகும். அவர்களும் சமயத்தைப் புறக்கணித்துவிட்டுத் தனித்து வாழ இயலாத நிலையிலுள்ளனர். சமயம் என்பது யாது? 'சமயம்' என்பதற்கு 'நெறி' 'கொள்கை' என்ற பொருள்கள் உள்ளன. நாடோறும் வாழ்க்கையை ஒழுங்குபெற நடத்துவதற்கு வகுத்துக் கொள்ளப்பெற்ற நெறிகளின் திரளே சமயம் ஆகும். இங்ஙனம் மக்கள் வாழ்க்கையுடன் தொடர்புற்றிருக்கும் சமயங்கள் பலவாகும்.

## வைணவ நெறி

திருமாலை முழுமுதற் கடவுளாகக்கொண்ட சமயமே திருமால் திருநெறி என்பது. இஃது இன்றைய வழக்கில் 'வைணவம்' என்ற பெயரால் வழங்கி வருகின்றது. 'விஷ்ணு' என்பதற்கு எங்கும் நிறைந்தது என்பது பொருள். எனவே ஒவ்வொரு பொருளின் உள்ளும் புறமும் நிறைந்து அதனைக் காத்துக் கொண்டுள்ள பொருளுக்கே 'விஷ்ணு' என்ற திருநாமம் இட்டு வழங்கினர் நம் பண்டையோர். விஷ்ணுவை முதற் கடவுளாக்கிக் கொண்டவர்கள் வைணவர்கள். வைணவர்களின் சமயக் குரவர்கள் 'ஆழ்வார்கள்' என வழங்கப் பெறுவர். இவர்கள் பன்னிருவர். இறையனுபவத்தில் ஆழங்கால் பட்டு நிற்பதால் இவர்கள் 'ஆழ்வார்கள்' என வழங்கப் பெற்றனர். ஆழ்வார்களின் தலைவர் நம்மாழ்வார். அவர் கொண்ட நெறியையே ஏனையவர்களும் கொண்டனர். பக்திசாரர் என்று வழங்கப்பெறும் திருமழிசையாழ்வார் ஆழ்வார்களுள் ஒருவராதலின் அவர்கொண்ட நெறியும் 'வைணவ நெறியே' ஆகும். எனவே, வைணவ நெறியை விளக்குவது அவர் நெறியை விளக்குவதாகும். இக்கட்டுரையில் அவருடைய அருளிச் செயல்களாகிய 'திருச்சந்த விருத்தம்' 'நான்முகன் திருவந்தாதி' என்ற இரு பிரபந்தங்களின் துணைகொண்டு அந்நெறி விளக்கப் பெறுகின்றது. இந்த ஆழ்வார் பல சமயங்களில் புகுந்து ஒவ்வொன்றிலும் ஆழங்கால்பட்டும், அதிலுள்ள ஒருசில குறைபாடுகளைக் கண்டு வேறொரு சமயத்தைத் தழுவியும் வாழ்ந்தவர். இறுதியில் திருமால் திருநெறியே சிறந்தது எனத் தேறியவர். இவரைத் திருத்திப் பணி கொண்டவர் பேயாழ்வார் என்பார்.

## முழுமுதற் கடவுள்

வைணவ தத்துவங்கள் மூன்று. அவை சித்து அசித்து ஈசுவரன் என்பவை. சித்து என்பது சீவான்மாவைக் குறிப்பது. அசித்து என்பதில் உயிரற்ற பொருள்கள் அனைத்தும் அடங்கும். ஈசுவரன் என்பவன் இறைவன். ஈண்டு இறைவன் இயல்பும், அவனை அடையும் வழிகளும் விளக்கப் பெறும்.

திருமால் நெறியில் ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற் கடவுள். இவன் எப்பொழுதும் மாறுபடாத தன்மையுடையவன். ஞான வடிவானவன்; இங்குத்தான் உள்ளான் என்று தேயத்தால் அளவிட்டுக்கூற முடியாதவன். இப்பொழுதுதான் உள்ளான் என்று காலத்தாலும் கணிக்க முடியாதவன். இன்ன பொருளில்தான் உள்ளான் என்று பொருளாலும் எல்லையிட்டுப் பேச முடியாதவன். சித்து, அசித்து ஆகிய இரண்டும் இவனுடைய உடலாய்த் திகழும். இதனை ஆழ்வார்.

''நீயே உலகெல்லாம்; நின்னருளே நிற்பனவும்;
நீயே தவத்தேவ தேவனும்; நீயே
எரிசுடரும் மால்வரையும் எண்திசையும் அண்டத்து
இருசுடரும் ஆய இவை''

என்று விளக்குவர். இவனே முழுமுதற் கடவுள் என்பதை,

''தேருங்கால் தேவன் ஒருவனே என்றுரைப்பர்;
ஆரும் அறியார் அவன்பெருமை-ஒரும்
பொருள்முடிவும் இத்தனையே எத்தவம் செய்தார்க்கும்
அருள்முடிவது ஆழியான் பால்''

என்ற பாடலால் புலப்படுத்துவர். இந்தப் பிரபந்தம் முழுவதிலும், திருச்சந்த விருத்தத்திலும் அவனுடைய பரத்துவத்தை நன்கு விளக்கி இறுதியாக,

''இனி அறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனிஅறிந்தேன் எம்பெருமான்! உன்னைஇனி அறிந்தேன்;
காரணன்நீ; கற்றவைநீ; கற்பவைநீ, நல்கிரிசை
நாரணன்நீ; நன்கு அறிந்தேன் நான்''

என்ற பாடலால் அதனை நிலைநாட்டித் தலைக்கட்டுவர்.

இந்த இறைவனின் திருமேனி பரத்துவம், வியூகம், விபவம், அந்தர்யாமித்துவம், அர்ச்சை என்று ஐந்து வகையாகப் பேசப்பெறும். வைகுந்

தத்தில் எழுந்தருளியிருக்கும் இருப்பே பரத்துவம் என்பது. வியூகம் என்பது வாசுதேவன், சங்கர்ஷணன், பிரத்யும்நன், அநிருத்தன் என்ற நான்கு நிலைகள். அவதாரங்கள் விபவம் என வழங்கப்பெறும். எல்லோருடைய இதயக் கமலத்தில் எழுந்தருளியிருக்கும் இருப்பே அந்தர்யாமித்துவம் ஆகும். திவ்விய தேசங்களில் திருமேனி கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலையும், அடியார்களின் வேண்டுகோளின்படி அவரவர் விருப்பத்திற்கேற்றவாறு திருமேனி கொண்டு நிற்கும்நிலையும் அர்ச்சாவதாரம் என வழங்கப் பெறும். எல்லா நிலைகளிலும் பெரிய பிராட்டியாராகிய இலக்குமி இறைவனை விட்டு ஒருக்கணமும் பிரிவதில்லை. ஆகவே அவள் ஈசுவரதத்துவத்தில் சேர்ந்தவள் ஆகின்றாள்.

திருமழிசையாழ்வார் இந்த இறைவனையே முழுமுதற் கடவுளாக வழிபடுவர். இதனை,

''என்றும் மறந்தறியேன் என்நெஞ்சத் தேவைத்து
நின்றும் இருந்தும் நெடுமாலை-என்றும்
திருஇருந்த மார்பன் சிரீதரனுக் (கு) ஆளாய்க்
கருஇருந்த நாள்முதலாக் காப்பு''

என்ற பாசுரத்தால் அறியலாம். இன்னொரு பாசுரத்திலும்,

''நான்உன்னை அன்றிஇலேன் கண்டாய் நாரணனே!
நீஎன்னை அன்றி இலை''

என்று இக்கருத்தையே மீண்டும் வற்புறுத்துவதைக் காணலாம். இந்த இறைவனை அடைதலையே 'வீடுபேறு' என்று வழங்குவர் வைணவப் பெருமக்கள். வைணவ தத்துவப்படி இறைவனே தன்னை அடைவதற்கு வழியாகவும் அமைவான்; பலனாகவும் இருக்கின்றான். இதனை.

மெய்ப்பொருள்தான் வேத முதற்பொருள்தான்
விண்ணவர்க்கு
நற்பொருள்தான் நாரா யணன்''

என்ற பாசுரப் பகுதியால் தெளியலாம். பலன் 'புருஷார்த்தம்' என்று வழங்கப் பெறும்.

### இறைவனை அடையும் வழிகள்

இறைவனை அடையும் வழி 'இதம்' என்று வழங்கப்பெறும். வீடு பேற்றிற்குச் சாதனமாக அநுட்டிக்கப்பெறும் வழி என்பது இதன் பொருள். இந்த வழி இருவகையாக அநுட்டிக்கப்பெறும்.

### பக்தியோகம்

இது பலவகைப்படும். வீடுபேறு எய்தும் வரை இதனை அநுட்டித்துக்கொண்டே இருத்தல் வேண்டும். பலன்பெற நெடுங்காலம் கழிய வேண்டும். திருமழிசையாழ்வார் 'பக்திசாரர்' என்ற தம் பெயருக்கேற்பப் பக்தியே வடிவெடுத்த பரமயோகி.

''தொழில்எனக்குத் தொல்லைமால் தன்நாமம்
ஏத்தல்,
பொழுதுஎனக்கு மற்றுஅதுவே போதும்''

என்றும்,

''வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும்
பூசித்தும் போக்கினேன் போது''

என்றும் கூறியிருத்தலால் இதனை நன்கறியலாம். இந்த ஆழ்வார் கொண்டிருந்த பக்தியின் உறைப்பினை,

''வெற்புஎன்று வேங்கடம் பாடினேன் வீடுஆக்கி
நிற்கின்றேன் நின்று நினைக்கின்றேன்-கற்கின்ற
நூல்வலையில் பட்டிருந்த நூலாட்டி கேள்வனார்
கால்வலையில் பட்டிருந்தேன் காண்''

என்ற பாசுரத்தால் நன்கு அறியலாம். என்றும் பக்தி நெறியையே நாடி நின்றவர் இந்த ஆழ்வார் என்பதை.

''பெறற்கரிய நின்னபாத
பக்தியான பாசனம்
பெறற்கரிய மாயனே
எனக்குநல்க வேண்டுமே''

என்ற பாசுரப்பகுதியால் தெளியலாம். திருவடியை நாடி நிற்கும் பக்தியாகிய மரக்கலத்தைத் தந்தருள வேண்டும் என்று வேண்டுகின்றார் ஆழ்வார். அதுவே பிறவிப் பெருங்கடல் நீந்துவதற்கேற்ற புணையாகும் என்பது அவருடைய அசைக்க முடியாத நம்பிக்கை. அவன் தாளை வணங்குவதற்கு அவன் அருள் வேண்டும் என்பதை நன்கு உணர்ந்தவர் ஆழ்வார். எனவே

''பரந்தசிந்தை ஒன்றிநின்று
நின்னபாத பங்கயம்
நிரந்தரம் நினைப்பதாக
நீநினைக்க வேண்டுமே''

என்று வேண்டுகின்றார் ஆழ்வார். இக்கருத்தினையே,

''கிடந்து இருந்து நின்றியங்கு
போதும்நின்ன பொற்கழல்
தொடர்ந்துவீள் விலாததோர்
தொடர்ச்சிநல்க வேண்டுமே''

என்ற இன்னொரு பாசுரப் பகுதியில் வற்புறுத்துவதைக் காணலாம்.

### பிரபத்தி

இதனைச் சரணாகதி என்றும் வழங்குவர். பக்தியோகத்தை அநுட்டிக்க இயலாதவர்கள் இந்த வழியை மேற்கொள்ளுவர். இதுவே ஆழ்வார்கள் அனைவரும் மேற்கொண்டவழி. நம்மாழ்வார் திருவேங்கடமுடையானைச் சரண் புகுந்ததாக அமைந்த திருவாய்மொழியை அனைவரும் நன்கறிவர்.

''எல்லார்க்கும் எளிதான ஏற்றத் தாலும்
இனிஉரைக்க மிகையான இரக்கத் தாலும்
சொல்லார்க்கும் அளவாலும் அமைத லாலும்
துணிவுஅரிதாய்த் துணைதுறக்கும் சுகரத்
தாலும்
கல்லார்க்கும் கற்றார்சொல் கவர்த லாலும்
கண்ணன்உரை முடிசூடி முடித்த லாலும்
நல்லார்க்கும் தீயார்க்கும் இதுவே நன்றாம்
நாரணற்கே அடைக்கலமாய் நணுகு வீரே''

என்ற பாசுரத்தால் வேதாந்த தேசிகரும் இதன் சிறப்பையும் அநுட்டிக்கும் எளிமையையும் எடுத்துரைப்பர். திருமழிசை யாழ்வார் பிர பத்தி முறையையும் அநுட்டித்தார் என்பதை,

''அடைக்கலம் புகுந்தஎன்னை
'அஞ்சல்' என்ன வேண்டுமே''

என்ற பாசுரப் பகுதியால் அறியலாம். மேலும் இதனை,


..........''புனித! நின்
இலங்குபாதம் அன்றிமற்றோர்
பற்றிலேன்எம் ஈசனே''

என்ற பாசுரப் பகுதியாலும் வற்புறுத்துவர். நான்முகன் திருவந்தாதியிலும் ''ஏன்றேன் அடிமை, இழிந்தேன் பிறப்பு இடும்பை'' என்றும், ''கிளர்ஒளி என கேடுஇன்றி, ஆள்வாய்க்கு அடியேன்நான் ஆள்'' என்றும் இதனை மேலும் வற்புறுத்துவதனைக் காணலாம்.

இறுதியாக ஒன்று கூறி இக்கட்டுரையை முடிப்பேன். இந்த ஆழ்வாரின் இதயம் எம் பெருமானுடைய திருவடி இணைகளையே எல்லாக் காலங்களிலும் அணைந்து அவற்றிலேயே பிடிபட்டுப் போயிற்று. ஆழ்வாரே இதனை,

''சொல்லினும் தொழிற்கணும்
தொடக்கருத அன்பினும்
அல்லுநன் பகலினோடு
ஆனமாலை காலையும்
வல்லநான் மலர்க்கிழத்தி
நாத! பாத போதினை
புல்லியுள்ளம் வீள்வுஇலாது
பூண்டுமீண்ட தில்லையே''

என்ற பாசுரத்தில் வெளியிடுகின்றார். அடுத்த இரண்டு பாசுரங்களில், தன் ஆன்மா எம்பெருமானுடைய திருவடித் தாமரையில் வண்டாகப் படிந்து அவனுடைய மன்னுசோதியில் கலந்து வினைகள் யாவும் வேருடன் களையப்பெற்று வீடு பெற்றதாக வற்புறுத்திக் கூறுவர். எனவே ஸ்ரீமந் நாராயணனே முழுமுதற்கடவுள் என்பதும், அவனைப் பக்தி, பிரபத்தி ஆகிய இரண்டு வழிகளிலும் அடையலாம் என்பதும், திருமழிசையாழ்வார் கண்ட திருநெறியாகும்.



12-10-74ஆம் நாளன்று திருச்செந்தூரில் நடைபெற்ற மகப்பேறு, கண் மருத்துவமனைக் கால்கோள் விழாவில், திரைப்பட அதிபர் திரு எம்.எம்.ஏ. சின்னப்பா தேவர் அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் பொன்னாடை போர்த்தி சிறப்பிக்கின்றார்கள். இவ்விழாவில் அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களும் கலந்துகொண்டார்கள்.

தொலைபேசி: 2421

# அருள்திரு
# கொங்களம்மன் திருக்கோயில்

ஈரோடு : : கோவை மாவட்டம்

சீர்திகழும் ஈரோட்டுச் செல்வியுமை கொங்களம்மன்
பார்புகழும் பாதம் பணியவே—தேர்மகிழும்
அந்தரி சௌந்தரி மாதங்கி யானந்தியருட்
சந்தமும் வந்து தவுதான்.

## முக்கிய விஷேசங்கள்

1. ஆடி வெள்ளிக்கிழமைகள்
2. நவராத்திரி உற்சவம்
3. தைப்பூசம் ரதோற்சவம் (தை மாதம்)

ஈரோடு மாநகர் வரும் பக்த கோடிகள் மேற்படி ஆலயத்திற்கு வருகை தந்து அம்மையின் அருளாசி பெற வேண்டுகிறேன்.

**சி. எஸ். சுப்பிரமணியம்,**
செயல் அலுவலர்.

# பாண்டிமாதேவி

முதற்பரிசு பெற்ற பொற்கிழிக் கவிதை

மீனாட்சிமைந்தன்

## 4. மணிமுடி புனைந்த காதை

பழங்காலம் முதலாகச் சைவம் காத்த
பாண்டியரின் வழிவந்த பண்பு மிக்கான்
கலங்காத நெடுமாறன்; கல்வி கேள்வி
கலைகளிலே துறைபோன கருணை யாளன்
வழங்காத பொருளில்லை, புலவோர் நாவில்
வாழாத நாளில்லை, சோழ நாட்டின்
நலங்காணப் பிறந்தவளாம் மங்கை யாரை
நாயகியாய்ப் பெற்றதனுல் நாடே போற்றும்.

வளவனுக்குப் பெண்ணுகிப் பாண்டி நாட்டில்
வளமனையில் புகுந்ததனுல் சைவச் சோற்றை
உளமகிழத் தமிழுடனே ஊட்டித் தந்த
உத்தமியாம் மங்கையவள் கடைக்கண் வீச்சில்
குளநீராய் நெடுமாறன் அடிமை யாகிக்
குவளைக்கண் அசைவுக்குத் தாள மாகி
வளமான பல்லின்பம் துய்த்து வாழ்ந்தான்
வையையிலும் சோலையிலும் ஆடி வாழ்ந்தான்.

(வேறு)

கூடலும் ஊடலும் தானும்
கூடலின் அரசி கொள்ள
ஆடலும் பாட லாலும்
அரசியை மகிழ்ச்சி ஊட்டி
மாடமே சூழ்ந்த பாண்டி
மண்டலம் போற்ற இன்பம்
கூடலே வாழ்க்கை யாகச்
சுதந்திரப் பறவை யானுன்

(வேறு)

தந்தைக்குப் பின்னுலே பாண்டி நாட்டின்
தலைவனென நெடுமாறன் மௌலி சூடிச்
சிந்தையெல்லாம் நாட்டுக்கே அர்ப்ப ணித்தான்
சிவனையுமே சிலசமயம் மறந்து விட்டான்
மந்தையிலே ஒருமாடு தவற லாகும்
மன்னவனே தவறுவதோ என்று மங்கை
சிந்தையிலே எண்ணியதால் கணவ னுக்குச்
சிவநெறியைச் சிலசமயம் எடுத்துச் சொன்னுள்.

''செந்தூரின் அலைகூடச் சிவமே என்னும்
செழுந்தென்றல் ஒலிகூடச் சிவனே என்னும்
சிந்தூறும் தமிழ்வானம் பாடி கூடச்
சிவநாமம் பாடுவது பாண்டி நாடு
செந்தூரம் குழைக்கின்ற மருந்துக் கையும்
சிவனுக்குச் சந்தனமாய்க் கருதும் நாடே!
எந்தூர்க்குப் போனுலும் பாண்டி மன்னர்
இதயத்தில் எழுந்தருளும் சொக்க லிங்கம்

அண்ணலுடன் மீனுட்சி அன்னை தாளை
அரைநொடியும் மறப்பதுவோ? அகிலம் போற்ற
முன்னவர்கள் காத்தபெரும் சைவக் கோட்டை
முறிவதுவோ? பாண்டியர்கள் போட்ட பாதை

911,858
475.17.4
158599

பின்னவர்கள் காலத்தில் பிறழ்வ தென்றால்
பெரும்பாண்டி மண்டலத்தின் பெருமை என்னே?
கண்ணீரில் சைவநெறி காப்ப தற்கே
கண்மணியாம் அரசியவள் முனைந்து நின்றாள்

தடுமாறும் மன்னன்முன் கனக நந்தி
தமிழ்பாடும் வாயாலே சமணம் பாட
நெடுமாறன் என்னாவான்? மனைவி முன்னே
நெடுநேரம் வீழ்ந்தாலும், கனக நந்தி
நடும்போது பயிராகி விளைய லானான்;
நலம்கெட்ட விதியாலே சேற்றில் நின்றான்
நெடுங்காலம் பயிரான சைவ நாற்றில்
நிணநீரைப் பாய்ச்சிடவும் நினைத்து விட்டான்.

### சமணக் காண்டம்

## 5. மன்னவன் சமணம் புக்க காதை

புதியதொரு சமணத்தின் தலைவ னை
புகழ்நந்தி மதுரையிலே மடங்கள் கட்டி
அதிசயமாய் வாழ்ந்திட்டான் தமிழைப் பாடி
அரங்கெல்லாம் கொடிகட்டி ஆர்ப்ப ரித்தான்
பதியாத இதயங்கள் அவனின் சொந்தம்
பாடலொலி கேட்டோர்கள் அவனின் கூட்டம்
மதியாத மங்கையரின் அரசி நீக்கி
மக்களெல்லாம் அவன்பின்னே அணிவ குத்தார்.

நகைமுகமாய்ப் பேசிடுவான் அறிஞர் முன்னே
நல்லவனாய்ப் பேசிடுவான்; தமிழை ஏந்திப்
பகைமுடிக்கப் புறப்பட்டான்; பாண்டி மன்னன்
பகடைக்காய் ஆனதனால் அடிமை செய்தான்
குகைவிடுத்துப் புறப்பட்ட கனக நந்தி,
குளிர்விட்டுப் புறப்பட்ட பாண்டி மன்னன்
முகைவிரித்துப் புறப்பட்டோர் சமணம் மூட்ட!
முடைநாற்றம் வீசியதே பாண்டி நாட்டில்!!

குலம்காத்த சைவத்தை வளைத்த மன்னன்
கூன்பாண்டி மன்னனெனப் பட்டம் கொண்டான்
நலம்காத்த கண்ணகிபோல் சைவ மங்கை
நாயகனைக் காக்கவெனத் திட்டம் பூண்டாள்
பலம்காத்த சமணகுரு கனக நந்தி
படைகாத்த தளபதியின் துணையி னோடு
புலம்காத்த பாண்டியரின் சைவம் சாய்க்கப்
புறப்பட்டான்; போராட்டம், சூழ்ச்சி வேட்டை!

அரியணையின் மதம்இனிமேல் சமணம் என்றே
அரசனவன் முரசறைந்தான்; ஆல வாயான்
புரியாமல் வீற்றிருந்தான்; மக்கள் கூட்டம்
புற்றீசல் போல் எழுந்தார்; சமணம் ஏற்றார்
கரிகூட நீறேற்ற நாட்டில் இன்று
கடவுளுக்கும் நீறில்லை; தீப மில்லை;
நரியான கூட்டத்தைப் பரியாய் மாற்ற
நாயகனே மண்மீது நடக்க வேண்டும்.

பாமாலை பாடியதோர் கோயிலுக்குள்
பாஇல்லை; மக்களது பாதம் இல்லை;
பூமாலை ஏந்திவரும் கரங்கள் இல்லை;
புகழ்மாலை பாடிவரும் புலவர் இல்லை;
காமாலைக் கண்ணுடையான், கனக நந்தி
கடைமாலை விற்பனையைத் தடுத்து விட்டான்
பூமாலை அரசியவள் சாற்றும் மாலை,
புதுமாலை வேறில்லை புனித னுக்கே!

கோயிலுக்குப் போவோரை ஒற்றர் எல்லாம்
கொலைகளவு செய்தோர்போல் கொடுமை செய்தார்
தாயினையே மறக்கின்ற பிள்ளை போலத்
தமிழ்ப்பாண்டி மண்டலத்தார் சிவன்நா மத்தை
வாயினிலே வாராமல் தடுத்து விட்டார்;
வயிற்றுக்கே போராடி வாழ்ந்து கெட்டார்
பாயிருக்கும் இடத்தினிலே படுத்து றங்கிப்
பழஞ்சைவம் மறந்தார்சை வப்ப ழங்கள்!

அன்றொருநாள் மன்னவன் ஆணை என்றே
ஆணையின்மேல் முரசறைந்தான், வீரன், கேட்பீர்!
இன்றுமுதல் சிவபூசை செய்தல் சாமி
எழுந்தருளல், சிவலிங்கம் பேணல், நீறு
குன்றிமணி அளவேனும் பூசல் சைவம்
குற்றமென எண்ணுங்கள், மீறு வோரைக்
கொன்றொழிக்க அரசாணை! ஆணை!! என்றே
கூறியதை மக்களெல்லாம் குனிந்து கேட்டார்

ஊருக்கூர் சிவபூசை செய்வோர் இல்லை
ஒருவீட்டில் சிவலிங்கம் உருவம் இல்லை
தேருக்குச் சிவபெருமான் வரவே இல்லை
தெருவினிலே தமிழ்மாந்தர் செலவே இல்லை
நீறுக்கோ நானென்னும் நெற்றி இல்லை
நெடுஞ்சாணாய் வணங்க—ஒரு பக்தன் இல்லை
போருக்குப் புறப்பட்டார் அடியார் எல்லாம்
புதையுண்டார் சிறைக்குள்ளே வதைக ளுண்டார்

மணிஎடுத்த கையெல்லாம் சமண ருக்கு
மாலையினை எடுத்ததுவோ கால மாற்றம்!
பணிமுடித்த காலெல்லாம் சைவம் கெட்டுப்
பகைவருக்குக் குற்றேவல் விதியின் மாற்றம்
அணிகொடுத்த மனமெல்லாம் சிவனுக் கீந்தாள்
அடிகொடுக்கும் சமணர்க்குத் தூபம் போடும்!
இனிஎடுப்பார் சைவத்தை எவரோ என்றே
ஏங்குகையில் அரசியவள் எழுச்சி கொண்டாள்!

## 6. அமைச்சர் குலச்சிறையார் ஆலோசனை கூறிய காதை

புகழ்மிக்க பாண்டியரின் அரசவையில்
குலச்சிறையார் புனித மான
அகழ்வாரைத் தாங்குநிலப் பொறுமையுடன்
அமைச்சரெனப் பணிகள் ஆற்றி
இகழ்வாரா முன்னாலே எடுத்தியம்பி
அரசியலை இனிது காத்தார்
''துகள்வந்து மோதுவதோ? சைவத்தைத்
தூரோடு சாய்ப்ப துண்டோ?''

என்றெல்லாம் எண்ணுகையில் நாடெல்லாம்
சமணநெறி இயைந்த தாலே
குன்றாக இருந்தாலும் குலவிளக்காம்
அரசியவள் கோட்டை நோக்கி
அன்றொருநாள் நடந்திட்டார்; ''சைவத்தைக்
காப்பா''யென் றாணை இட்டார்
கன்றாக இருந்தாலும் மங்கையரின்
அரசியவள் காக்க வந்தாள்!

அண்ணலுடன் மீனாட்சி இருவரையும்
தனதந்தப் புரத்தில் வைத்தாள்
கன்னலெனும் மொழியாலே அர்ச்சித்துக்
கனகமணி யபிஷே கித்தாள்
மன்னவனும் அறியாமல் நீறணிந்து
சைவத்தை மங்கை காத்தாள்
தென்னவனின் நாடின்றும் வாழுதெனில்
காரணம்அத் தெய்வப் பெண்ணே

(வேறு)

''பாடலைப் பாடி மட்டும்
பரமனைத் தொழுவ தில்லை
கூடலில் கோட்டான் கூட்டம்!
கொலையினால் அஞ்சும் நாட்டார்!
வேடமே புனைய வேண்டும்
வீரமே அகத்தில் வேண்டும்
பாடலை நீத்து, வீரர்
படையினைச் சேர்க்க வேண்டும்.

என்றெல்லாம் அமைச்சர் சொன்னார்;
எழுந்தனள் மங்கை நல்லாள்
குன்றென நிமிர்ந்து நின்றாள்!
குலச்சிறை பணிந்து நின்றார்!
''மன்றெலாம் நானே பேசி
மக்களைத் திரட்டு கின்றேன்;
வென்றிடும் வழியைச் சொன்னீர்!
வெற்றியும் நமதே'' என்றாள்.

நெற்றியில் நீறு பூசி
நிமலனை நெஞ்சில் வைத்து
வெற்றியில் அச்ச மின்றி
விளங்கிழை மதுரை மண்ணில்
சுற்றியே வந்து பேசிச்
சொல்லினால் வீரம் ஊட்டிப்
பற்றினால் சைவம் காக்கப்
படையிலே வீரர் சேர்த்தாள்.

(வேறு)

சூலப் படையெனும் பேராலே
சுதந்திர வீரப் படைகண்டாள்
காலன் நடுங்கிடும் இளைஞரெலாம்
கத்தி எடுத்தார் போராட!
சீலம் எடுத்த அரசியவள்
சிந்தை எடுத்தாள் பகைமுடிக்க;
ஓலம் எடுத்தார் பகைவீரர்!
ஓட்டம் எடுத்தார் ஒற்றரெலாம்!

சூலப் படையின் தலைவியவள்
சுதந்திர மங்கை யர்க்கரசி
சூலப் படையின் தளபதியோ
சூழ்ச்சி படைத்த புகழனடா
ஆலம் அருந்திய சைவத்தை
அரசை அருந்திய சமணத்தார்
மூலம் அழிக்க முனைந்ததனால்
முற்றும் அழித்தாள் மங்கையடா!

தொடரும்

# அருள்திரு
# மதனகோபாலசுவாமி
# திருக்கோயில்

## மதுரை

மதுரை மேலமாசி வீதியில் அமைந்திருக்கும் இத்திருக்கோயில் 1965-ம் ஆண்டில் திருக்குட முழுக்கு விழா சிறப்பாக நடைபெற்றுள்ளது. இங்கு மூலவர் சிலாரூபத்தில் ''வேணுகோபாலன்'', ''ருக்மணி'', ''சத்யபாமா''வுடன் எழுந்தருளியிருக்கிறார். ஸ்ரீ ஆண்டாளுக்கு ''மதனகோபாலனுக'' காட்சி தந்தருளியுள்ளார். இங்கு நடைபெறும் உற்சவங்களுள் முக்கியமானவை : கிருஷ்ணன் பிறப்பு, நவராத்திரி, திருக்கார்த்திகை, பகல் பத்து, இராப்பத்து உற்சவம், தை மாத புறப்பாடு, பங்குனி உத்திரம், திருக்கலியாணம், வஸந்த உற்சவம் மற்றும் திரு ஆடிப்பூரத் திருநாள்.

சற்றேரக் குறைய அரை நூற்றுண்டுகளுக்கு முன் இத்திருக்கோயிலை சுத்திகரிக்கும் பொழுது கற்தூண்களை ஏலம் எடுத்து பிலடெல்டியா (அமெரிக்கா)விற்கு கொண்டு சென்று அங்கு நம் கோயில் மண்டபங்கள் போல் நிர்மாணித்துள்ளனர் எனச் செய்திகள் கூறுகின்றன.

தற்சமயம் இத்திருக்கோயிலில் இவ்வருடம் ஆகஸ்டு மாதம் முதல் 108 திருவிளக்கு பூஜையும் லட்சார்ச்சனையும் ஆரம்பிக்கப்பட்டு பிரதி மாதம் கடைசி வெள்ளிக்கிழமையன்று தொடர்ந்து நடைபெற்று வருகிறது. செப்டம்பர் மாதம் கோகுலாஷ்டமி தினத்திலிருந்து ஏழைச்சிறுகுழந்தைகளுக்குத் தினந்தோறும் காலையில் இலவசமாக பால் வழங்கு திட்டமும் ஆரம்பிக்கப்பட்டு அனைவரும் போற்றும் முறையில் நடந்து வருகிறது. மேலும் பல நல்ல திருப்பணிகள் இத்திருக்கோயிலில் நடக்க இருக்கிறது. பக்த கோடிகள் இத்திருக்கோயிலுக்கு வந்திருந்து அருள்திரு மதனகோபாலனின் இன்னருளைப் பெறுமாறு வேண்டுகிறோம்.

**ஆ. இராமநாதக்கோனார்,**
அறங்காவலர் குழுத் தலைவர்.

**டி. சிதம்பரம், பி.எஸ்சி., பி.எல்.,**
செயல் அலுவலர்.

ஆர். சுப்பிரமணிய பிள்ளை,
ஆர். பாண்டியன்,
டி. காட்டையா,
எம். ஆர். ஜி. கோபால்சுவாமி,
அறங்காவலர்கள்.

# உபநிடதங்களில் உயிரியல் உண்மைகள்

திரு. சு. கோவிந்தசாமி

1. ஆன்மா ஆண் பெண் அலி அல்லன் :

''ஆன்மாவாவது பெண்ணும் அன்று, ஆணும் அன்று, அலியும் அன்று. எந்தெந்த சரீரத்தை எடுக்கின்ருனே அததனேடு சேர்கின்ருன்.''

—சுவேதாசுவதரம் 5—10

2. ஆன்மா சார்ந்ததன் வண்ணமாதல் :

''இந்த ஆன்மா அறிவு ரூபன், மநோமயன், பிராணமயன், சட்சுமயன், சோத்திரமயன், பிருதிவிமயன், அப்புமயன், வாயுமயன், ஆகாயமயன், தேயுமயன், அதேயுமயன், காமமயன், அகாமமயன், கோபமயன், அகோபமயன், புண்ணியமயன், பாவமயன், எல்லாமயன்.''

—பிருகதாரணியம்,4-4,5

(மயன்—சார்ந்ததன் வண்ணமாய் நிற்பவன்).

3. ஆன்ம வடிவம் :

''(ஓர்) மயிர் நுனியை நூருகக் கூறிட்டு, அதின் ஓர் பாகத்தை நூறு பாகஞ் செய்யின் அதில் ஓர் பாகம் ஆன்மா (சீவன்). மேலும் ஆன்மா அநேகம் என்று கூறப்படுகிறது''

—சுவேதாசுவதரம் 5—9

4. ஆன்மா அழிவதில்லை :

''இந்த அறிஞனுகிய (சீவ ஆன்மா) பிறப்பதில்லை, இறப்பதில்லை, அவன் ஒன்றினின்று பிறக்கவில்லை; அவனின்று ஒன்று பிறக்கவுமில்லை, அவன் பிறவாதவன், நித்தியன், சாசுவதன், பழையோன், தேகம் வெட்டுண்ட போதினும் அவன் வெட்டுண்ணுன்.''

—கடம் 2—18

5. ஆன்மா அசங்கன் :

''அவன் அங்கே (சுழுப்தியில்) எதனைக் கண்டானே, அதனுல் அவன் தொடக்குண்ணுன்; இந்தப் புருடன் அசங்கன் (தொடக்குண்ணுன்) அன்ருே''.

—பிருகாதாரணியம், 4-3-15

6. ஆன்மா முக்குணவயத்தன் :

''எவன் குணங்களோடியைந்தவனுகியும், பலன்களையுடைய கன்மங்களைச் செய்பவனுயும், அங்ஙனம் செய்யப்பட்ட பயனைத் துய்ப்பவனுயும் இருக்கின்ருனே, அவன் விசுவரூபனுய் முக்குணமுடையனுய் மும்மார்க்கமுடையனுய் பிராணுதிபனுய்த் தன் கன்மங்களோடு சஞ்சரிப்பவனுகின்ருன்.''

—சுவேதாசுவதரம், 5—7

7. ஆன்மாவின் சொப்பன, சகலாவத்தைகள்:

''எங்ஙனம் ஓர் பெரிய மீனனது ஆற்றின் வலப்புறத்திலும் இடப்புறத்திலுமுள்ள இரு கரைகளிலுஞ் சஞ்சரித்துக் கொண்டிருக்குமோ, அங்ஙனமே இந்தப் புருடன் (சீவான்மா) சொப்பனுவத்தை, சகலாவத்தை என்னும் இரு அவத்தைகளிலும் சஞ்சரிக்கின்ருன்.

—பிருகதாரணியம், 4—3: 18.

''மீன்கள் (நதியின்) இருகரைகளிலும் (போய்வருவது போல) (ஆன்மாவானவன் கேவலாவத்தை சகலாவத்தை என்பவைகளிலே) மோட்சபரியந்தம் திரிகின்ருன்.''

—உபதேச காண்டம், 88—18.

8. ஆன்மாவின் சுழுத்தியவத்தை :

''ஓர் பருந்தேனும் மற்ருேர் அழகிய பறவையேனும் ஆகாயத்திலே சுற்றித் திரிந்தபின்னர்த் தன் இறகுகளை ஒடுக்கிக் கொண்டு எங்ஙனம் இளைப்புற்றுக் கூட்டை அடைகின்றதோ, அங்ஙனம் ஒருவன் துயிலும்போது காணும் எந்தப் போகப் பொருள்களை விரும்பாமலும், கனவு காணுமலும் இருக்கற்பாலதாகிய (சுழுத்தி) அவத்தையை அடைகின்ருன்.''

—பிருகதாரணியம், 4, 3-19

9. ஆன்மா புண்ணியன்; பாபி :

''ஒருவன் எங்ஙனஞ் செய்கின்ருனே, எங்ஙனம் ஒழுகுகின்ருனே அங்ஙனம் ஆகின்ருன். நன்மை செய்பவன் நல்லவனுகின்ருன். பாவஞ் செய்பவன் பாபியாகின்ருன். புண்ணியஞ் செய்கையினுற் புண்ணியனுயும், பாவஞ்செய்கையினுற் பாபியாயும் ஆகின்ருன்.''

—பிருகதாரணியம், 4—4.5

10. ஆன்மாவின் ஆசைப் பிரகாரமே பயன் :

''இந்தப் புருஷனை ஆசைமயன் என்று சொல்கிருர்கள் ; (அவனது) ஆசை எவ்வாருே, அவ்வாறே அவன் கருத்தாகும்; கருத்து எப்படியோ, அப்படியோ கன்மஞ் செய்கின்ருன்; கன்மம் எப்படியோ, அப்படியே பயனைப் பெறுகின்ருன்.''

—பிருகதாரணியம், 4—4.5

11. ஆன்மா சரீரமெடுத்தல்:

''ஓர் புழுவானது புல்லின் நுனியிலேபோய் மற்ருென்றை நணுகச் செய்து, அதனைப் பற்றுதற்குத் தன்னை ஒடுக்குமாறுபோல, சீவான்மாவானது இந்தச் சரீரத்தை விடுத்து, அஞ்ஞானத்தைத் துறந்து, மற்ருேர் சரீரம் அணுக அதனை நோக்கித் தன்னை ஒடுக்குகின்றது.''

—பிருகாதாரணியம், 4—4.3

12. ஆன்மாவின் கருத்துப் பிரகாரமே மறுமையினுமாதல் :

''புருடன் அறிவுடையவன் ;எங்ஙனம் இவ்வுலகில் அவன் கருத்து நிகழ்கின்றதோ அங்ஙனமே இவ்வுலகத்தைத் துறந்து பின்னரும் ஆவன்.''

—சாந்தோக்கியம், 3—14—1

''பிரம்மனே! இந்தச் சென்மத்தில் எங்ஙனமாயினும் தாண்டவேசுவர நிருத்தத்தைக் காணுதொழிவேனுயின் (இந்தஅவாவே வித்தாக) அடுத்த சென்மத்திற் சந்தேகமின்றியே காண்பேன்.''

—சிதம்பரமான்மியம், 15—47.

13. ஆன்மா கன்மப் பிரகாரம் வடிவெடுத்தல்:

''சில சீவர்கள் கன்மத்துக்குத் தக்கவாறும், அறிவுக்குத் தக்கவாறும், சரீரத்தின் பொருட்டு மானுடம் முதலிய பிறவியை அடைகின்றன; மற்றுள்ள சில சீவர்கள் தாவர சரீரத்தை யடைகின்றன.''

—கடம். 5.7.

''ஆன்மாக்கள் பூமியை அடைந்து பின்னர்ப் பல வகையாகிய புல், செடி, முதலிய தாவரங்களாய்த் தோன்றித் துன்பம் அநுபவித்து பின் புழு (முதலிய) பிறவிகளிலே பிறக்கின்றன.''

—சிவதருமோத்தரம்.

14. ஆன்மா கன்மப் பிரகாரம் பற்பல வடிவம் எடுத்தல் :

''சரீரமானது அன்னபானங்களால் வளர்தல்போல, சங்கற்பத்தினுலும், பரிசத்தினுலும், பார்வையினுலும், மோகத்தினுலும், ஆன்மாவானது கன்மங்களுக்கு இயைந்த முறையாலே (பற்பல) இடங்களில் (பற்பல) வடிவங்களை அடைகின்றது.''

—சுவேதாசுவதரம். 5—11

''ஆன்மாவானது பெரியனவாயும் சிறியனவாயுமுள்ள அநேக பேதங்களைத் தனது (கன்மாநு) குணமாகத் தெரிந்து கொள்கின்றது. தான் அவற்ருேடு கூடுதல் காரணமாகக் கன்மாநு குணமாகவும் சரீர குணமாகவும் ஆன்மாவும் காணப்படுகின்ருன்.''

—சுவேதாசுவதரம், 5.12.

''தட்டான் ஒருவன் பொற்றுண்டொன்றை எடுத்து அதனை மிகப் புதிதாகவும், மிகச் சிறந்த வடிவமாகவும் ஆக்குமாறுபோல, சீவான்மா இந்தச் சரீரத்தை விடுத்து அஞ்ஞானந்தவிர்ந்து, பிதிரர்க்கேனும், கந்தருவர்க்கேனும், தேவர்க்கேனும், பிரஜாபதிக்கேனும், பிரமத்துக்கேனும், மற்றெந்தச் செந்துவுக்கேனும் உரிய மிகப் புதியதும் மிகச் சிறந்ததுமாகிய சரீரத்தை எடுக்கின்ருன்.''

—பிருகதாரணியம், 4—4.4.

15. ஆசையுடையானுக்குப் பரலோகம் புலப்படாது :

''சிறியனுயும் ஏமாந்தவனுயும், பணவாசையினுல் அறிவிழந்தவனுயும் உள்ளானுக்குப் பரலோகமானது புலப்படாது ; 'இவ்வுலகமே உள்ளது பிறிது உலகம் இல்லை' என்பவன் அடிக்கடி எனது (எமனது) வசப்பட்டவனுய் அடைகின்ருன்.''

—கடம். 2—6.

16. மூடர் செல்லும் நெறி :

''அஞ்ஞான போக மத்தியில் இருப்பவர்களாய்த் தங்களைத் தீரர்களென்றும், பண்டிதர்கள் என்றும், எண்ணிக் கொண்டிருக்கும் மூடர்கள் பல்வகைப் பிணிகளாற் பீடிக்கப்பட்டவர்களாய், குருடர் குருடரால் வழிகாட்டப்பட்டாற்போல, (அநேக மார்க்கங்களிற்) சுழல்வாராயினர்.

—கடம். 2.5.

17. ஆன்மா புறப்படும் வாயில்கள் :

''இந்த ஆன்மாவுக்கு (மரண காலத்தில்) இதயத் துவாரத்தில் ஒளி உண்டாகின்றது. இந்த ஒளிகொண்டு இந்த ஆன்மா கண் வாயிலாகவோ, தலை வாயிலாகவோ, சரீரத்து மற்ருேர் வாயிலாகவோ புறப்படுகின்ருன். (இங்ஙனம்) புறப்படும் (அவனைத் தொடர்ந்து) (முக்கியப்) பிராணன் புறப்பட, மற்றெல்லாப் பிராணன்களும் (அதனைத்) தொடர்ந்து புறப்படுகின்றன ; அவன் அறிஞனுகவே இருக்கின்ருன். விஞ்ஞானத்தைத் தொடர்ந்து புறப்படுகின்ருன்.''

—பிருகதாரணியம், 4—4.2.

18. நரகலோகம் :

''திண்ணிய இருளினுல் மூடப்பட்ட சூரியனில்லா உலகங்கள் உள்ளன ; (சிவபிரானை அறியாமையினுலே) தம்மைக் கொன்றவர்கள் (இறந்த பின்) அவ்வுலகங்களைப் போய் அடைகின்ருர்கள்.

—ஈசாவாசியம், 3. பிருகதாரணியம் 4—4.11.

19. ஞானத்தையுடையோன் போகங்களை விரும்பான் :

''அவித்தை (அஞ்ஞானம்) என்றும், வித்தை (ஞானம்) என்றும் அறியப்பட்டன, ஒன்றுக்கொன்று வேருகித் தூரத்தனவாம். இவற்றுள் நசிகேதனுகிய உன்னை ஞானத்தில் விருப்புடையவனுக அறிகின்றேன். ஏனெனில் போகங்கள் அநேகமாக விருந்தும் அவை உன்னை அசைத்தில''

—கடம் 2.4, 2.5.

20. போகத்தினும் மோட்சமே சிறந்தமை :

''மோட்சமும் போகமும் மனிதனை அடைகின்றன ; திண்ணிய அறிஞன் அவைகளை நன்கு (பகுத்து) ஆலோசித்து விவேகிக்கின்ருன். அந்த அறிஞன் போகத்தினும் மோட்சமே சிறந்ததெனக் கொண்டு அம் மோட்சத்தை விரும்புகின்ருன். மந்த மதியுடையான் யோக சேமத்தினும் போகத்தையே சிறந்ததென விரும்புகின்ருன்.''

—கடம், 2.2.

GRAMS : "SAKTHI" PHONES : 2771, 2881 & 2991.

# Sri Sakthi Textiles Limited

**POST BOX No. 36,**

**POLLACHI-642001.**

**Texmark : 3642**

| | | |
|---|---|---|
| Total Ring Spindles installed | — | 25032 |
| Total Ring Spindles at work | — | 25032 |
| Total Doubling Spindles at work | — | 3208 |

**Manufacturing yarn in counts :**

| | | |
|---|---|---|
| Carded yarn in hanks | — | 60s |
| Combed yarn in hanks | — | 60s & 80s |
| Doubled yarn in hanks | — | 2/20s & 2/60s |
| Cone yarn in counts | — | 34s, 60s & 80s. |

# இரண்டாட்டம்

கி.வா.ஜகந்நாதன்

திருநாவுக்கரசர், சமய சமரசத்தைப் பற்றி ஒரு பாடல் பாடுகிருர். எந்தச் சமயமாக இருந்தாலும் சிவபெருமானுக்கு உடன்பாடு என்று சொல்கிருர். இப்போது உள்ள சமயங்கள் பல. வெவ்வேறு கொள்கை உடையவர்கள் தங்கள் தங்கள் கொள்கைக்கு ஏற்பச் சமய நெறிகளைக் கடைப்பிடித்து ஒழுகுகிருர்கள். எல்லா வகையான மன இயல்பை உடையவர்களுக்கும் ஏற்றபடி சமயங்கள் இருக்கின்றன. புதிய சமயம் ஏதும் தோன்ற வேண்டிய அவசியம் இல்லை.

இப்போது உள்ள சமய தத்துவங்களை ஆராய்ந்தால் புதிய ஒரு கொள்கைக்கு இடமே இராது. தம்முடைய புதிய கொள்கையை நிலைநிறுத்துவதற்கு ஒரு புதிய சமயத்தை ஒருவர் உண்டாக்க வேண்டுமென்று எண்ணலாம். ஆனல் இப்போதுள்ள சமயங்களின் கொள்கைகளைப் பொறுமையோடு ஆராய்ந்து பார்த்தால் அவருடைய கொள்கையைச் சொல்லும் பகுதி எங்காவது இருப்பதைக் காணலாம். அவ்வாறு விரிவாகப் பல்வேறு சமயங்கள் இருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து பார்க்கும் விரிவான மனப்பான்மை இல்லாதவர்கள் அவசரப்பட்டுத் தம் கொள்கையை நிறுவப் பார்ப்பார்கள். ஆகவே புதிய சமயம் தோன்றுவதற்கு ஒரு காரணம் விரிவான அறிவு இன்மை.

மற்ருெரு காரணமும் உண்டு. சமயத் தலைவராக இருந்தால் பெரிய மதிப்பு உண்டாகும். இப்போதுள்ள சமயத் தலைவர்களைக் கண்டு பொருமையுற்றும் கோபம் கொண்டும், ''நான் ஒரு சமயத்தை நிறுவப் போகிறேன்'' என்று புறப்படுகிறவர்கள் இருக்கிருர்கள். இந்தக் காலத்தில் புதிய புதிய அரசியல் கட்சிகள் தோன்றுவதைப் போன்ற செயல் அது. ஆகவே மன எரிச்சல் காரணமாக ஒரு புதிய சமயத்தை ஒருவர் தோற்றுவிக்கலாம்.

விரிவிலா அறிவினுலும், எரிவினுலும் புதிய சமயங்களைச் சிலர் தோற்றுவித்தாலும் அவற்றை இறைவன் ஏற்றுக் கொள்வானும். அவர்கள் சமய விரோதமான செயல்களில் புகாமல், சமயத்தைத் தோற்றுவிப்பதனல் அதிலும் ஒரு நெறி முறை இருக்கும். கோபத்தினல் முன் இருந்த குளத்தில் குப்பையைக் கொட்டித் தூர்க்காமல் நாமே புதிய குளம் வெட்டுவது போன்றது அது. ஆகவே, 'எப்படியோ போட்டி போட்டுக் கொண்டு உயிர்கள் உய்யப் புது வழி ஒன்றைத் தானே உண்டாக்குகிருன்' என்று இறைவன் திருவுளம் கொள்வானும்.

''விரிவிலாஅறிவி னேர்கள்
வேருெரு சமயம் செய்தே
எரிவினல் சொன்னு ரேனும்
எம்பிராற் கேற்ற தாகும்''

என்பது அப்பர் அடிகள் திருவாக்கு.

இறைவனுக்கு எந்தச் சமயமானுலும் ஏற்புடையதே என்ற கருத்தை இந்தத் திருப்பாடல் வெளியிடுகிறது.

அப்படியானல், சைன சமயத்தில் சேர்ந்த அப்பர் சுவாமிகளை இறைவன் எதற்காகச் சூலை நோய் உண்டாக்கிச் சைவ சமயத்துக்கு மீண்டும் வரச் செய்ய வேண்டும். இது ஆராய்ச்சிக்குரியது.

திருநாவுக்கரசர் காலத்தில் அரசன் சைனனுக இருந்தான். சைனர்களுடைய கை ஓங்கியிருந்தது. அரசியல் அதிகாரத்தோடு ஓர் இயக்கம் சேர்ந்தால் மற்ற இயக்கங்களை எளிதில் நசுக்கிவிடலாம். தம்முடைய விளம்பரங்களாலும், பேச்சுக்களாலும் சைனர்கள் தம் சமயத்தைப் பிரசாரம் செய்து வந்தார்கள். சைவர்கள் அடங்கியிருந்தார்கள். சிறந்த அறிவாற்றலையுடைய மருள் நீக்கியார்—திருநாவுக்கரசர்—அவர்களுடைய பிரசாரத்திலே ஈடுபட்டு, அவர்களுடைய கொள்கைகள் அறிவுக்குப் பொருத்தமாய் இருப்பதாக எண்ணி அந்தச் சமயத்தில் சேர்ந்தார்.

அவர் பிறப்பினல் சைவர்; பரம்பரைச் சைவர். அவருடைய தாய் தந்தையர் பழுத்த சைவர்கள். அவர்கள் காலமான பிறகே அவர் சைன சமயத்தில் சேர்ந்தார். அவருடைய தமக்கையாராகிய திலகவதியாரோ சிவனையன்றி வேறு பற்றுக் கோடில்லாமல் இருந்தவர். ஆதலின் நாவுக்கரசருடைய இரத்தத்திலேயே சைவம் கலந்திருந்தது. அவரை அறியாமலே அவருடைய அடி மனத்தில் சைவ உணர்வு ஒளிந்து கொண்டிருந்தது. அறிவு அவரைத் திசை திருப்பினலும், உணர்வு உள்ளிருந்து அவ்வப்போது தலை காட்டி வந்தது. தாம் செய்தது தவருே என்ற எண்ணம் அடிக்கடி தோன்றிக் கொண்டே இருந்தது.

திருநாவுக்கரசர் தருமசேனர் என்ற பெயரோடு திருப்பாதிரிப்புலியூரில் இருந்த சைன மடத்தில் ஆசிரியராக இருந்தார். அவ்வூரில் தோன்ருத் துணையப்பருடைய திருக்கோயில் இருக்கிறது. விடியற் காலையில் அங்கே திருப்பள்ளியெழுச்சிப் பூசை நடைபெறும். அப்போது மணி யோசை எழும். அது தருமசேனர் காதில்

விழும். 'இந்த நேரத்தில் நம் தந்தையார் எழுந்து கோயிலுக்குப் போயிருப்பார் முன்பு. இப்போது நம் தமக்கையார் திருவதிகைக் கோயிலில் இறைவனைத் தரிசித்துக் கொண்டு இருப்பார்' என்ற எண்ணம் உண்டாகும். உச்சிக் காலப் பூசையின்போதும் அத்தகைய நினைவு எழும். அவர் உள்ளத்தில் தம் தந்தையார் அபிடேகம் செய்வதும், அருச்சனை செய்வதும், தூபம் காட்டுவதும் ஆகிய காட்சிகள் ஓடும். உடனே, 'இத்தகைய எண்ணங்களை நாம் நினைக்கக் கூடாது' என்று தமக்குள்ளே சொல்லிக்கொண்டு மறக்க முயலுவார். 'மருந்து சாப்பிடும்போது குரங்கை நினைக்கக் கூடாது' என்று மருத்துவர் சொல்வதைஎண்ணி மருந்துண்டவனைப் போல, அந்த எண்ணங்கள் விடாமல் தொடர்ந்தன. இறைவன் நாமத்தைக் கூட அவர் வாய் அவரை அறியாமல் முணுமுணுத்தது. திடீரென்று ஏதாவது ஒன்று நேர்ந்தால் அவரை அறியாமலே, ''சிவ சிவ'' என்று அவர் வாய் சொல்லும். அதைச் சிரமப் பட்டு அடக்கிக் கொள்வார். இளமைப் பருவத்தில் தம் தந்தையார் செய்யும் பூசை முதலியவற்றில் ஈடுபட்டு, அதற்குத் துணை செய்த வாசனை எளிதில் நீங்குமா?

இப்படி இரண்டாட்ட வாழ்க்கை வாழ்ந்தவர் அவர். அகத்தே சைவ உணர்வு எழும்; புறத்தே சைன அறிவு அதை அடக்கப் பார்க்கும். இந்த இரண்டாட்டத்தில் அவருடைய உள்ளம் கிடந்து தடுமாறியது. அதனால் அவர் உண்ணும் உணவு செரிக்கவில்லை. மனத்தில் குழப்பம் உள்ளவர்களுக்கு உணவு செல்லாது. சென்றாலும் செரிக்காது. அவர் வயிறு கெடத் தொடங்கியது. மெல்ல மெல்ல வலி மிக்கது.

சைனர்களிடம், மணி, மந்திரம், மருந்து உண்டு. அவற்றுக்கெல்லாம் அந்த நோய் தீரவில்லை. உயிருக்கே மோசம் வந்துவிடும் என்று எண்ணம் உண்டாயிற்று. அப்போது தரும சேனருக்குத் தம்மோடு பிறந்த தமக்கையாரின் நினைவு வந்தது. அவர் ஏதேனும் செய்யக்கூடும் என்ற நம்பிக்கை உண்டாயிற்று. அந்தப் பெருமாட்டியாருக்குத் தெய்வத்தின் திருவருட்பலம் உண்டு என்ற எண்ணம் அவருக்கு இப்போது தெளிவாக ஏற்பட்டது. உடனே தமக்குச் சோறு சமைத்து ஊட்டும் சமையற்காரனை, தம் தமக்கையாரிடம் தாம் படும் இன்னலைச் சொல்லி விட்டு வரச்சொல்லி அனுப்பினார். யாரும் அறியாமல்தான் அனுப்பியிருக்க வேண்டும்.

தரும சேனருக்கு உணவு அளிக்கும் அவன் வெறும் சமையற்காரனாக இராமல் அவரிடத்தில் தாயைப் போன்ற அன்புடையவனாகத் தான் இருந்திருக்க வேண்டும். இல்லையானால், திலகவதியாரிடம் போகாமல் நேரே சைனசங்கத்தாரிடம் சென்று, ''இந்தத் துரோகி இப்படிச் செய்கிறார்'' என்றல்லவா அறிவிப்பான்?

ஊட்டுவான் திருவதிகை சென்று திலகவதியாரை அணுகிச் செய்தியைச் சொல்லவும், அப்பெருமாட்டியார், ''நான் அங்கு வாரேன்'' என்று சொல்லி அனுப்பினார். ''அவன் நாசமாய்ப்போகட்டும்! அவனுக்கும் எனக்கும் என்ன தொடர்பு?'' என்று சொல்லியிருக்கலாம். அப்படிச் சொல்லவில்லை. 'அனைத்துயிர்க்கும் அருள் தாங்கி யிருப்பவர்' அப்படிச் சொல்வாரா?

தமக்கையார் சொல்லியனுப்பியதைக் கேட்ட மருள்நீக்கியார் வருந்தவில்லை. 'நான் அங்கு வாரேன்' என்பதற்கு, 'நீ இங்கு வா' என்பதையே குறிப்புப் பொருளாகக் கொண்டார். அன்றிரவே ஒரு வெள்ளாடையைப் போர்த்திக்கொண்டு புறப்பட்டு விட்டார். 'வயிற்றோடு துடக்கி முடக்கியிடும்' வலியிருந்தாலும் அங்கே போனால் நலம் உண்டாகும் என்ற நம்பிக்கை அவருக்கு வலிமையைத் தந்தது. இத்தகைய இயல்பைத் தானே எண்ணிக் கொள்ளுதல் (Auto suggestion) என்று சொல்வார்கள்.

அவர் திருவதிகையை அடைந்தபோது அம்மையார் தம் திருமடத்திலிருந்து திருப்பள்ளியெழுச்சிப் பூசையைத் தரிசிக்கப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது மருள் நீக்கியார் அவர் காலில் விழுந்தார். திலகவதியார் நாள்தோறும் சிவபெருமானிடம் தம் இளவல் சிவநெறியைச் சேர வேண்டுமென்று வேண்டிக் கொண்டவராதலின் மனம் மகிழ்ந்தார். உடனே 'திருவாளன் திருநீறு' அளிக்க, அதை அவர் உடம்பு முழுதும் பூசிக் கொண்டார். வயிற்றுவலி நன்றாகக் குறைந்திருக்க வேண்டும்.

இருவரும் திருவதிகை வீரட்டானம் சென்றார்கள். விடிந்தது. மருணீக்கியார் மருள் நீங்கி வாழ்வினும் விடிவு உண்டாயிற்று. இறைவனைக் கண்டவுடன் உள்ளத்தின் ஆழத்தே புதைந்திருந்த உணர்ச்சி பீரிட்டு எழுந்தது.

''கூற்றாயின வாறு விலக்ககிலீர்;
கொடுமைபல செய்தன நானறியேன்;
ஏற்றாயடிக் கேயிர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்;
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேனடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை யம்மானே''

என்று அந்த உணர்ச்சி பாட்டாக வெளிவந்தது. மேலும் ஒன்பது பாடல்கள் பாடினார். இறைவன் அருளால் வயிற்றுவலி முற்றும் நீங்கியது. அப்போது இறைவன், ''நாவுக்கரசா!'' என்று அழைத்தான். அது முதல் அவர் திருநாவுக்கரசர் ஆனார்.

இந்தப் பதிகத்தை அவர் பாடத் தொடங்கியபோதே அவருக்கு வயிற்று வலி பெரும்பாலும் குறைந்திருக்க வேண்டும். ''கூற்றாக வந்த இந்த நோயைத் தீர்க்கும் காலகாலனிடம் வந்து விட்டோம்!'' என்ற மன எழுச்சியே அதற்குக் காரணம். வயிற்று வலிக்காரருக்கு முன்பு பாடம் செய்த பாட்டே சரியாக வராதே ; புதிய பாட்டும் அதற்கு ஏற்ற சொல்

வளம் முதலியனவும் எப்படி உண்டாகும்? ஆகவே வயிற்று வலியின் கொடுமை தீர்ந்து பெயரளவில் இருந்திருக்கும்.

பாட்டில் ''தோற்றுதென் வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட, ஆற்றேன்'' என்று புலம்புகிறார். கடுமை வலி இருந்ததனால்தான் அப்படிப் பாடுகிறார் என்று சொல்லலாம். ஒரு குழந்தை வீதியில் விழுந்து விடுகிறது. அப்போது பக்கத்தில் யாரும்இல்லை. அது சிறிதே முனகி உடம்பைத் துடைத்துக் கொள்ளும். வீட்டுக்குள் சென்று அன்னையைப் பார்க்கும்போது அவள், ''நீ கீழே விழுந் தாயா!'' என்று கேட்டால் உடனே விம்மி விம்மி அழும். விழுந்த இடத்தில் அழாமல், இங்கே கேட்பவர் இருப்பதால் அழத் தோன்று கிறது. அதுபோலவே கேட்கும் இறைவன் இருக்கும் இடமாதலின் இப்படிச் சொல்லிப் புலம்புகிறார் திருநாவுக்கரசர்.

இந்தப் பாட்டில், ''ஏற்றாய், அடிக்கே இரவும் பகலும் பிரியாது வணங்குவன்'' என்று சொல்கிறார். ''இதுவரையில் உன்னை வணங் காமல் இருந்தேன்; இனி எப்போதும் உன்னை வணங்குவேன்'' என்கிறார். அடுத்த பாட்டில்,

''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்
நினையா தொருபோ தும்இருந் தறியேன்'

என்கிறார். பின்னும் ஆறுவது பாட்டில்,

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்''

என்று பாடுகிறார். முதல் பாட்டில் ''இனிமேல் உன்னை வணங்குவேன்'' என்று எதிர்காலத்தால் சொல்கிறவர், பின்னே, ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்'' என்று இறந்த காலத்தில் வைத்துச் சொல்கிறார். இரண்டும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு அல்லவா?

இங்கேதான் நுட்பமான ஒரு வேறு பாட்டைக் கவனிக்க வேண்டும். திருநாவுக் கரசர் தருமசேனராக இருந்தபோது உடலால் சிவபிரானை வணங்கவில்லை. ஆனால் அவர் உள்ளம் பழைய வாசனையினால் சிவபெருமானை நினைந்து கொண்டிருந்தது. வாய் நாமத்தை முணு முணுத்தது. தம் தமக்கையார் திருமஞ்ச னமாட்டுவதையும் அருச்சனை செய்வதையும் தூபம் காட்டுவதையும் அவரால் மறக்கமுடிய வில்லை; நினைத்துக் கொண்டே இருந்தார். இந்த இரண்டாட்டத்தையே இந்தப் பாடல்கள் புலப் படுத்துகின்றன.

அவர் உடம்பால் வணங்கவில்லை. அதனால், ''இனிமேல் வணங்குவேன்'' என்றார். ஆனால் அவர் நெஞ்சில் சிவனை நினைத்திருந்தார். ''எம் பெருமானே, உன்னை இதுகாறும் வணங்க வில்லை; இனி வணங்குவேன்'' என்றவர், ''நீ உள்ளத்தில் உறைபவனாயிற்றே! உனக்குத் தெரியாதா இரகசியம்? நான் உன்னை நெஞ்சில் நினைத்திருந்தேனே; ஒருபோதும் மறக்க முடிய வில்லையே'' என்கிறார். ''நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன்; நினையாது ஒருபோதும் இருந்தறியேன்'' என்பது அந்தக் கருத்தையே புலப்படுத்துகிறது.

பின்னால், ''சலம்பூவோடு தூபம் மறந் தறியேன்'' என்கிறார். நான் நீரால் ஆட்டா விட்டாலும், பூவால் அருச்சனை புரியாவிட்டா லும், தீபம் காட்டாவிட்டாலும் அவற்றை மறக்க முடியாமல் நினைத்திருந்தேனே!'' என்று சொல்கிறார். ஆகவே அவர் உள்ளம் எல்லா வற்றையும் நினைத்தது. தமிழோடு இசைபாட லையும் நினைத்தது. நாவில் அவரை அறியாமல் 'சிவ சிவா!' என்று வந்தது. அதனால், ''தமி ழோடிசை பாடல் மறந்தறியேன், உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்'' என்கிறார்.

அவர் மனம் சிவபூசையை நினைத்துக் கொண்டே இருந்தது. அவர் நா அவ்வப்போது சிவ நாமத்தைச் சொல்லியது. ஆனால் அவர் உடம்போ போட்டுக் கொண்ட வேடத்திற் கேற்பச் சைனமாகச் செயல் புரிந்தது.

இந்த இரண்டாட்டமே அவருக்கு நோயை உண்டு பண்ணியது. சிவபெருமானுக்கு எல்லாச் சமயங்களும் ஏற்புடையனவே என்றாலும் இரண்டாட்டில் ஓட்டிய குட்டியாக வைத்தால் பயன் இல்லை என்பதை உள்ளங் கொண்டான். உள்ளத்தின் நினைப்பே வலிமையுடையதாதலின் உள்ளம் இருந்த பக்கத்தே வருமாறு செய்தான்.

ஆகவே திருநாவுக்கரசர் சூலை நோய் பெற்றதற்கு அவருடைய மனநிலையே காரணம். அவருடைய உணர்ச்சி எங்கே பதிந்து நின் றதோ அந்த இடத்துக்கே அவரை வரச்செய்து அருள் பாலித்தான் இறைவன்; அவருடைய இரண்டாட்டத்தை நீக்கி அமைதியை உண் டாக்கினான்.

ஞானங் காட்டுவர் நன்னெறி காட்டுவர்
தானங் காட்டுவர் தம்மடைந் தார்க்கெல்லாம்
தானங் காட்டித்தன் தாள்அடைந் தார்கட்கு
வானங் காட்டுவர் போல்வன்னி யூரரே.

— 'திருநாவுக்கரசர்'

# அருள்திரு வாழைத்தோட்டத்து அய்யன்கோயில்

**அய்யம்பாளையம், மங்கலம் (அஞ்சல்)**

**பல்லடம் வட்டம், கோவை மாவட்டம்,**

உலகினிற் பலவாம் கொடுவிடம் பல்லில் உடையதீங் குயிர்பல வுறினும்,
இலகிய நாக விடத்தினும் கொடிய தில்லையென் பார்உல கத்தோர்
குலவிய நாக மெதுகடித் திடினும் கூடும்நின்றன் திருப் பெயரைச்,
சொலவுறும் போதே அகலுமான் புடையாய் தோயும்வா ழைத்தோட்டத்தை
யாவே.

வாழை மரங்களுள் எல்லாம் சிறந்தது. மர வகைகளில் தலைமைப் பேறுடையது; தகுதி மிகுதியும் உடையது. ஒழுங்கியலின்பாற்பட்டு வளர்வது; முழுதும் பயன்படுவது. இத்தகு இயல்புகள் அனைத்தும் உடையவர் அய்யன். அய்யன் என்ற சொல் தலைவன் என்ற பொருளையே தரும்.

வாழைத் தோட்டத்து அய்யன் திருக்கோயில் அருள் நலம் கொழிக்கும் திருத்தலம். கொங்கு நாட்டு மக்களின் இதயத்துள் எழுந்தருளியிருக்கும் தெய்வம். வாழைத் தோட்டத்து அய்யன் கோயில் பழங்காலத் திருக்கோயில்களைப் போலவே ஆண்டவன் திருக்கோயிலாகவும் விளங்குகிறது. மக்கட் பணி மனையாகவும் விளங்குகிறது. சோமனூரிலிருந்தும், திருப்பூரிலிருந்தும் பேருந்துகள் உண்டு. கருவறை, இடைநாழி மண்டபம் ஆகிய திருப்பணிகள் செய்யப்பெற்று அண்மையில் பெருஞ் சாந்தி விழா முடிவு பெற்றுள்ளது.

இத்திருக்கோயில் நிதியிலிருந்து உயர்நிலைப் பள்ளி ஒன்றும், அனாதை மாணவர் இல்லம் ஒன்றும் தொடங்கப்பெற்று செயல்பட்டு வருகிறது. பக்தர்கள் தங்குவதற்கு விடுதிகள் உண்டு. அனைவரும் வருகை தந்து அருட்செல்வமும், பொருட் செல்வமும் பெற்று விளங்க வேண்டுகிறோம்.

எம். பழனியப்பன்,
செயல் அலுவலர்.

சோ. கு. பழனிசாமி,
அறங்காவலர் குழுத்தலைவர்.

எம். சின்னமாரப்ப கவுண்டர், எம். பழனிசாமி,
எம். சுப்பையன், கே. ராமசாமி
அறங்காவலர்கள்.

# திருமூலர் விளக்கும் யோகநெறி

ஜி. வரதராஜபிள்ளை B.A.,

யோகம் என்றால் சேர்க்கை என்று பொருள். சீவன் புறப்பொருளில் நாட்டம் கொண்டு புறப்பொருளோடு பொருந்துவதும் யோகந்தான். ஆனால் புறத்தே நாடாது அகத்தே நாடிச் சிவனை அடைவதே சிறந்த யோகமாம்.

சீவன் வாழ வேண்டிய அறவாழ்வைக் கூறிச் சிவனது இயல்பை எடுத்து இயம்பி அச் சிவனை அடைவதற்குரிய நெறியை யோகம் என்ற பகுதியில் விரிவாகப் பகர்கின்றார். தியான யோகம் மந்திர யோகம், ஞான யோகம் என்று திருமூலர் கூறும் முறை மிகச் சிறந்தது.

தியான யோகத்தில் கேசரி யோகம், பரியங்கி யோகம், சந்திர யோகம் ஆகியவை அடங்கும். சக்கரங்கள், மந்திரங்கள் ஆகியவை மந்திர யோகமாகும். ஞான யோகத்தில் தத்துவங்களைப் பற்றியும் ஆன்மாவின் இயல்பைப் பற்றியும் இறைவனை அடைவதற்குரிய முறையைப் பற்றியும் விரித்து உரைக்கப் பெறும். இறுதியில் பஞ்சாக்கரத்தில் பெருமையும் பயனும், அதனை உணர்ந்தோர் இயல்பும் கூறித் திருமந்திரமாகிய பெரு நூல் நிறைவு பெறுகிறது.

**அட்டாங்க யோகம் :**

யோகத்தைப் பற்றிக் கூற வந்த ஆசிரியர் முதலில் யோகத்துக்குரிய உறுப்புக்களை அல்லது அங்கங்களைக் கூறுகிறார். யோகத்துக்குரிய அங்கங்கள் எட்டாகும். அவை இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்பன. இவற்றுள் இயமம் நியமம் ஆதனம் என்பன புறத்துக்கும், பிராணாயாமம் பிரத்தியாகாரம் தாரணை தியானம் சமாதி என்பன அகத்துக்கும் உரியனவாகும். முன்னவை மூன்றும் உடலை வசப்படுத்துவதற்கும், பின்னவை ஐந்தும் மனத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் உரிய சாதனங்கள் என்று உணர்தல் வேண்டும்.

**1. இயமம்:**

இயமமாவது தீயனவற்றில் மனம் செல்லாது கட்டுப்படுத்துதல் என்பதாம். இதனைப் புலனடக்கம் என்பர். உலக வாழ்வில் மனிதன் தள்ளத் தக்கன இன்ன என்று தலையான தீய செயல்களை ஆசிரியர் முறைப்படுத்திக் கூறி அவை இல்லாதவனே இயமத்தனாவான் என்கிறார். ஓர் உயிரைக் கொல்லாதவனும் பொய் கூறாதவனும், திருடாதவனும், தெளிவுடையவனும், நல்லவனும், அடக்கமுடையவனும், நீதி வழுவாதவனும், பகுத்து உண்பவனும், குற்றமற்றவனும், கள், காமமாகிய தீய குணங்கள் இல்லாதவனும் ஆகியவனே யோக நெறியை மேற்கொள்ளத் தக்கவன்.

''கொல்லான்பொய் கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்க முடையான் நடுச்செய்ய
வல்லான் பகுந்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லா னியமத் திடைநின் றானே'' —மந். 554

கொலை களவு செய்பவனும், பொய் கூறுபவனும் மன அமைதியோடு இருக்க முடியாது. கள்ளுண்பவனும் காம வேட்கையுடையவனும் மன வெறியுடையவராதலின் அவரும் யோகம் புரியத் தகுதியில்லாதவராவர். ஆகவே ஆராய்ந்து தெளிந்தவனும், மன அடக்கமுடையவனும், ஈத்துவக்கும் இன்பமுடையவனும், மனத்துக்கண் மாசில்லாதவனுமே யோகத்துக்குரிய தகுதி பெற்றவனாவான் என்பது விளங்குகிறது.

**2. நியமம்:**

நியமமாவது, நன்னெறியில் நின்று ஒழுகுதல் என்பதாம். செய்யத் தகாதவற்றை இயமத்தில் கூறிச் செய்யத் தக்கனவற்றை நியமத்தில் கூறுகிறார். ஆதியாகிய சிவபெருமானை அம்மையப்பராக உணர்ந்து இருப்பவன் நியமத்தனாவான். அவன் தூய்மையுடையவனாய், அருளுடையவனாய், உண்டி சுருங்கியவனாய், பொறுமை யுடையவனாய், நேர்மையுடையவனாய், வாய்மையுடையவனாய், உறுதியுடையவனாய் இருத்தலோடு, காமம், கொலை, களவு ஆகியவற்றைத் தீமையெனக் கண்டு அஞ்சியவனாய் இருக்க வேண்டும். தூய்மை முதலிய நல்ல குணங்களை வளர்த்து களவு முதலிய தீய குணங்களை நீக்குதலே நியமிக்குரிய பண்பாகும்.

''தூய்மை அருளூண் சுருக்கம் பொறைசெவ்வை
வாய்மை நிலைமை வளர்த்தலே மற்றிவை
காமங் களவு கொலையெனக் காண்பவை
நேமியீ ரைந்து நியமத்த னாமே''
—மந். 556

அந்நியமத்தன் தனக்குற்ற துன்பத்தைப் பொறுத்துக்கொண்டு பிறர்க்குத் துன்பம் செய்யாதவனாய், திருவைந்தெழுத்து முதலிய மந்திரங்களை விதிப்படி எண்ணுபவராய், பெற்றதில் மகிழ்ச்சியுடையவனாய், ஆஸ்திக புத்தியுடையவனாய், ஈத்துவக்கும் இன்பமுடையவனாய், சிவராத்திரி போன்ற நாட்களில் விரதம் அனுஷ்டிப்பவனாய், சித்தாந்தப் பொருளை ஆராய்பவனாய், வேள்வி இயன்றுவனாய், சிவ பூசை

புரிபவனுய், சோதி தரிசனம் செய்வனபனுய் இருக்க வேண்டும். இவ்வாறு வாழ்விலே ஒழுகி வருபவனே சிறந்த நியமத்தனுவான்.

''தவஞ்செபஞ் சந்தோடம் ஆத்திகந் தானந்
சிவன்றன் விரதமே சித்தாந்தக் கேள்வி
மகஞ்சிவ பூசையொண்ண் மதிசொல்லீர் ஐந்து
நிவம்பல செய்யின் நியமத்த னுமே''

—மந். 557

### 3. ஆதனம்:

ஆதனம் என்பது இருக்கை. யோகம் செய்வதற்கு மன ஒட்டமும் உடல் அசைவும் இருக்கலாகா. மன அமைதி பெறுவதற்கு உடம்பு அசையாதிருக்க வேண்டும். அதற்குரிய சாதனம் இருக்கை அல்லது ஆதனம். இதனே ஆசனம் என்பர். ஆசன வகை நூற்று இருபத் தாறு என்றும் அவற்றுள் ஏழு ஆசனங்கள் மேன்மையானவை என்றும் ஆசிரியர் கூறுகிருர். அவையாவன : பத்திரம், கோமுகம், பங்கயம், கேசரி, சொத்திகம், வீரம், சுகாதனம் என்பன.

''பத்திரங் கோமுகம் பங்கயங் கேசரி
சொத்திகம் வீரஞ் சுகாதனம் ஓரேழும்
உத்தம மாமுது ஆசனம் எட்டெட்டுப்
பத்தொடு நூறு பலஆ சனமே''

—மந். 563

பத்திரம் என்ருல் இதழ் என்று பொருள். இவ்வாசனத்தில் அமர்ந்துள்ளபோது இதழ் போன்று தோன்றுதலின் இது பத்திராசனம் எனப் பெறும். பத்திராசனமாவது வலக்காலே இடப்பக்கத்திலுள்ள தொடையின்மேல்வைத்து முழந்தாள்களில் இரு கைகளேயும் நீட்டி உடம்பை நேராக நிமிர்த்தி இருத்தலாகும்.

ஆசனங்கள் இருந்தும் கிடந்தும் செய்வது உண்டு. ஆசிரியர் இருந்து செய்வதையே கூறு கிருர். கோமுகாசனம் என்று ஓர் ஆசன வகை. இவ்வாசனம் பசுவின் முகம் போன்று இருத் தலின் கோமுகாசனம் என்பர். கோமுகம் என்பது பின்புறம் இடப்பக்கத்தில் வலக்கால் பரட்டினேயும் வலப்பக்கத்தில் இடக்கால் பரட் டினேயும் மாறிச் சேர்த்து இருத்தல்.

இனி, வலப்புறமுள்ள தொடையின் மேல் இடக்காலேயும், இடப்புறமுள்ள தொடையின் மேல் வலக்காலேயும் நன்ருக வைத்து கைகளே மலர்த்தித் தொடையின் மேல் வைத்து அமர்ந் திருத்தல் பத்மாசனமாகும்.

கேசரி அல்லது சிங்காதனமாவது, பாத நுனிகளேப் பூமியில் ஊன்றி முழங்கால்களில் கைகளே நீட்டி, வாயைத் திறந்து கொண்டு மூக்கு நுனியைப் பார்த்திருப்பது. இவ்வாச னத்தில் இருக்கும்போது சிங்கம் போன்று தோன்றுதலின் இது கேசரியாதனம் என்று பெயர் பெற்றது.

சொத்திக (சுவத்திக) ஆசனமாவது, முழந் தாளுக்கும் தொடைக்கும் நடுவில் கீழே இரண்டு பாதங்களேயும் வைத்து உடல் நிமிர்ந்து உட் கார்ந்திருப்பது. இது சாதாரணமாக உட் கார்ந்திருப்பதையே குறித்தாலும் முதுகுத் தண்டு நேராக இருத்தல் வேண்டும். இது செய்வதற்கு மிகவும் எளிமையானது.

வீரம் என்பது ஒரு ஆசனம். வலப்பக்க முள்ள தொடையின் மேல் இடக்கால் பரட் டினேச் சேர்த்து கம்பீரமாக அமர்ந்திருத்தலே வீராசனமாகும்.

யார் யார் எவ்வாறு அமர்ந்திருந்தால் சிரமம் இருக்காதோ அவ்வாறுஅமர்ந்திருப்பதே சுகாசனமாம். ஆக உடல் அசைவின்றியிருத் தற்கு ஆசனம் இன்றியமையாததாகும்.

### 4. பிராணுயாமம்:

ஆசனப் பயிற்சியால் உடல் வலுப்பெற்று வளமாக இருக்கும். பிராணுயாமப் பயிற்சி யால் பிராணன் கட்டுப்பட்டு மனம் அசைவின்றி இருக்கும். பிராணன் ஆயாமம் பிராணுயாமம். பிராணுயாமம் என்பது, பிராணனேக் கட்டுப் படுத்தல் என்று பொருள்படும். பிராணன் வசப்படவே மனமும் வசப்படும்.

''மன்மனம் எங்குண்டு வாயும் அங்குண்டு,
மன்மனம் எங்கில்லே வாயுவும் அங்கில்லே''

என்பது மந்திரம்.

பிராணனேக் கட்டுப்படுத்துவதற்கு அப்பி யாசி மூச்சுக் காற்றைக் குருவருளால் கணக் கறிந்து உள்ளுக்கு இழுத்து, இழுத்த காற்றை உள்ளே இருத்தி, மெல்ல வெளியே விட வேண்டும். காற்றை உள்ளே இழுத்தற்குப் பூரகம் என்றும், தடுத்து நிறுத்தற்குக் கும்பகம் என்றும், வெளியே விடுவதற்கு இரேசகம் என்றும் பெயர். மூச்சுக் காற்று ''ஏறுதல் பூகரம்'', ''ஆறுதல் கும்பகம்'', ''ஊறுதல் இரேசகம்'' என்று ஆசிரியர் கூறுவார். இவ் வாறு நாடோறும் பூரக கும்பக இரேசகத்தைக் காலே மாலே பழகி வரின் மூச்சுக் காற்று வசப் படும்.

பிராணுயாம வகை நூற்றெட்டு என முன் ஞேர் கூறுவர். ஆசிரியர் திருமூலர் மூன்று வகைப் பிராணுயாமப் பயிற்சி கூறுகிருர். பதினறு மாத்திரை அளவு காற்றை இடநாசி வழியாக உள்ளே இழுத்து, அறுபத்திஞலு மாத்திரை அளவு கும்பித்து, முப்பத்திரண்டு மாத்திரை வெளியே வலநாசி வழியாக விட வேண்டும் என்பது முதல் வகை.

''ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்
ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதின்
ஊறுதல் முப்பத்தி ரண்டதி ரேசகம்
மாறுதல் ஒன்றின்கண் வஞ்சக மாமே''

—மந். 568

இதனல் மூலாதாரத்தில் சுருண்டு கிடந்த குண்டலினியை நிமிரச் செய்வது அமையும்.

இனி இட நாசி வல நாசி அல்லது இடை பிங்கலேயாகிய இரு வழியாலும் பூரித்தும் இரே சித்தும் கும்பகம் செய்யும் வழியை உலகவர்

அறியவில்லையே என்று இரங்குகிறார் ஆசிரியர். இக்கணக்கை அறிபவர் இயமனை உதைக்கும் ஆற்றலைப் பெறுவர் என்று கூறுகிறார்.

''ஏற்றி இறக்கி இருகாலும் பூரிக்குங்
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாரில்லை
காற்றைப் பிடிக்குங் கணக்கறி வாளர்க்குக்
கூற்றை யுதைங்குங் கறியது வாமே''

—மந். 571

''நன் மதியுள்ள புருடன் இரு மூக்குக ளாலும் காற்றை இழுத்துக் குண்டலியின் இரு பக்கங்களிலும் விடுவானாக. பிறகு வயிற்றில் காற்றைத் தடுத்து நிறுத்தி இட மூக்கால் வெளி யிடவேண்டும். இதன் பெயர் ''உஜ்ஜாயி கும்பகம்''. (இரு நாசித் துவாரங்கள் வழியாக வும் சுவாசித்தல்). இது நடக்கும்பொழுதும் நிற்கும்பொழுதும் செய்யத்தக்கது. இந்தக் கும்பகமானது கழுத்திலுள்ள கபம் முதலிய குற்றங்களைக் கெடுப்பதும், உடலிலுள்ள நெருப்பை வளர்ப்பதும், நாடிகளிலுள்ளநீரைப் பிரிப்பதும், ஏழு தாதுக்களிலுள்ள குற்றங்களை ஒழிப்பது மாகின்றது.''

இனி, மூன்றாவதாக மூச்சுக் காற்றை முன்னர் வெளியே விட்டு விடவேண்டும். பின்ன, உடம்பிலுள்ள தசநாடிகளும் பூரிக்கும் வண்ணம் உள்ளே இழுத்த பிராணவாயுவைக் கீழ்நோக்கிய அபானவாயுவோடு கலந்து கும்பித்து நிமிர்ந்திருக்க வேண்டும் என்று கூறு கிறார். இவ்வாறு காற்றை இரேசித்துப் பூரித்துக் கும்பிக்க எமபயம் இல்லையாம்.

''இட்ட தவ்வீ டிளகா திரேசித்துப்
புட்டிப் படத்தச நாடியும் பூரித்துக்
கொட்டிப் பிராணன் அபானனுங் கும்பித்து
நட்டம் இருக்க நமனில்லைத் தானே''

—மந். 574.

இம்முறையே வெளியே புறப்பட்டுப் போகின்ற வாயுவை நெறிப்பட உள்ளே நிறுத் தித் தூய்மை செய்தால் உடம்பு செம்மை நிறம் பெறும்; உரோமம் கருமையாக இருக்கும்; ஒளிக் கதிர்களையுடைய பெருமான் உடனாவ் விளங்கியருளுவான்.

இதைத் தவிர யோகசிகோ உபநிஷத்துப் போன்ற நூல்கள் வேறு சில பயிற்சிகளைக் கூறு கின்றன. விரிவை அங்குக் காண்க. இப் பிரா ணாயாம முறையைக் குரு முகமாகப் பயிற்சி பெறுதல் நன்று. பிராணாயாமப் பயிற்சியால் மன ஒருமைப்பாடு அடைகிறது என்பதாம்.


## அருள்திரு மாரியம்மன் திருக்கோயில்

## வீரசிங்கம்பேட்டை,

### தஞ்சை வட்டம், தஞ்சை மாவட்டம்

பொன்னி நதி பாயும் தஞ்சை நகரை ஆண்ட சோழ பரம்பரை அரசர்களுள் ஒருவ ரான வீரசோழ மன்னனால் நிர்மாணிக்கப்பெற்று வேண்டுவோர் வேண்டியவாறு அருளி, கண்கண்ட தெய்வமாய் விளங்கி, மதவேறுபாடற்ற தன்மையோடு சிறப்புப் பெற்று வருவதுமாகிய வீரசிங்கம்பேட்டை அருள்திரு மாரியம்மன் கோயில் திருப்பணி செய்து கும்பாபிஷேகம் செய்ய திருப்பணிக் குழு ஒன்று தஞ்சை உதவி ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப்பெற்றுள்ளது. அக்குழுவினரின் ஆலோசனைப்படி கோயில் முழுவதும் திருப் பணி செய்யவும், திருக்குளம், பயணிகள் விடுதி கட்டவும் மதிப்பீடுகள் ரூ. 1,57,100-க்கு தயாரிக்கப்பெற்று இந்து அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்களால் அங்கீகரிக்கப் பெற்றுள்ளது. இத்திருப்பணி தொடங்க தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையர் அவர்கள் அரசு மானியமாக ரூ. 3,000/- (ரூபாய். மூவாயிரம்) வழங்கியுள்ளார் கள். எஞ்சிய தொகை முழுதும் பொது மக்கள் நன்கொடை வசூல் நிதியைக் கொண்டே செய்ய வேண்டியிருப்பதால், அன்பர்களும், ஆலயங்கள் சார்பகாவும் நிதி உதவி அளித்து அன்னையின் அருளைப் பெற வேண்டுகிறோம்.

**வீரசிங்கம்பேட்டை,** இங்ஙனம்,

**திருப்பணி குழுவினர்.**

தொலைபேசி : 2421

# அருள்திரு பெரியமாரியம்மன் சின்னமாரியம்மன் திருக்கோயில்

## ஈரோடு, கோவை மாவட்டம்

ஈரோடு வருகை தரும் பக்தர்கள் அருள்திரு பெரிய மாரியம்மன் மற்றும் சின்ன மாரியம்மன் ஆலயத்திற்கு வருகை தரக் கோருகிறோம்.

வருடாந்திர உற்சவம் பிரதிவருடம் பங்குனிமாதம் முதல் வாரம் ஆரம்பித்து அதே மாதக் கடைசியில் முடிவடைகிறது.

| பிரதி வாரம் வெள்ளிக்கிழமை | சீட்டுக் கட்டண விவரம் |
|---|---|
| 1. அபிஷேகம் சீட்டு 1-க்கு ... ... | 1.25 காசு |
| 2. நிவேத்தியம் தேங்காய் 1-க்கு ... | 0.10 ,, |
| 3. அர்ச்சனை 1-க்கு ... | 0.40 ,, |
| 4. முடி ,, ... ... | 0.50 ,, |
| 5. பாவாடை 1-க்கு ... ... | 0.25 ,, |
| 6. கண்மலர் 1 ஜோடிக்கு ... ... | 0.20 ,, |
| 7. உருவம் 1-க்கு ... ... | 0.20 ,, |
| 8. வெள்ளி கண்மலர் 1 ஜோடிக்கு ... | 0.50 ,, |

மேலே கண்ட கட்டணங்கள் செலுத்தி சீட்டுப் பெற்றுக் கொள்ள கோருகிறோம்.

இங்ஙனம்,

திரு. எஸ். பொங்கியணன்,
அறங்காவலர் குழுத்தலைவர்.

எல். எஸ். சுப்பிரமணியம்,
செயல் அலுவலர்.

திரு. எம். பழனியப்ப கவுண்டர்,
திரு. என். சுப்பிரமணியம்,
திரு. கே. எஸ். ராதா,
திரு. கே. ஆர். ரங்கசாமி,
அறங்காவலர்கள்

# எப்போதும் இனியானை என்மனத்தே வைத்தேனே

டி. என். சுகி சுப்பிரமணியன்

உலகத்து அதிசயங்களைப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொள்வது ஒரு சாரார் கொள்கை.

உலகத்து அக்கிரமங்களைப் பார்த்து ஆத்திரப்பட்டு அழிந்துபடுவது அடுத்த சாரார் கொள்கை.

ஆனந்தப்படுவதின் எல்லையையும், அழிந்துபடுவதின் எல்லையையும் வரையறை செய்துகொண்டு சலனமற்று சமயப்பற்றோடு வாழ்வது மூன்றாவது சாரார் கொள்கை.

இந்நாளைய மேதைகளுக்கு இருக்கும் அறிவு உறுதியைப் பார்க்கும்போது அழுவதா சிரிப்பதா என்று தெரியவில்லை.

இந்நாளைய பேதைகளிடம் இருக்கும் அறியாமையைப் பார்க்கும் போது அழுவதா சிரிப்பதாயென்றும் தெரியவில்லை.

அறியாமையைப் பெருங்காலத்து, மிகவும் உறுதிப்பாட்டுடன் இருக்கிறார்கள் பேதைகள்.

தங்கள் அறிவைப் பெறும் மேதைகள் கடிகாரத்தின் பெண்டுலம் போல ஆடவிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். நிலைத்து நிற்கும் சாதனைகளையும் சாதனையாளர்களை இனம் காண்பதும் இவர்களால் இயலாமற் போய்விடுகிறது.

இந்த அவலநிலையை நினைக்கும்தோறும், கல்வியும் கலை ஞானமும், பக்தியும் பண்பும் வெள்ளமாய்ப் பாய்ந்த சமூகத்திலா நாம் இருக்கிறோம் என்னும் ஐயப்பாடு எழுகின்றது.

காருண்யம், அகிம்சை, பண்பு, சட்டம், அமைதி போன்ற நம்பிக்கைகளுக்கும், நமது கல்விக்கும் தொடர்பில்லை எண்ணும் படியாக குழப்பங்களையும் கூச்சல்களையும் கேட்கிறோம்.

நமக்கு வரும் பிரச்சனைகளை மேலும் மேலும் வளர்க்காமல் குறைத்தும் அழித்தும் விட முடியாதா?

ஞானியர்—கல்விமான்கள் பரம்பரையைச் சேர்ந்தவர்தாமா நாம்?

இல்லை.

நாம்—வாலி—சுக்கிரீவ—கபந்த—வனந்திரவாசிகளின் வழித் தோன்றல்களா?

நமது அறிவும் மதவுணர்வும் அமைதியும் அன்பும் நமக்குப் பயன்படாதா?

படும்! பயன்படும்!

நமது முன்னோர் பசியும் பட்டினியுமின்றி பண்புடன் பாடிப் பரவச வாழ்க்கைவாழ்ந்திருக்கிறார்கள்.

பாலும் தேனும் ஓடஓட உண்டு மகிழ்ந்திருக்கிறார்கள்.

நமக்குள் எழுந்த அரசியல் மோதல்கள்—பொருளாதார உலகச் சிக்கல்கள் நமது முன்னோர்களுக்கு எழவில்லை.

நாம் விஞ்ஞானத்தின் துணைகொண்டு குசேலர்களை, குபேரர்கள் ஆக்கிவிட முயற்சி செய்கிறோம். பணக்காரர்கள் பணத்தை வைத்துப் பணம் பண்ண முடியும் என்று எண்ணுவதுபோல, நாம் சூதாட்டங்களை வைத்துப் பணம் சம்பாதிக்க முடியும் என்னும் ஏழையர் கூட்டம்!

நம்மில் பலர்?

மிக மிகக் கேவலமாக வாழ்கிறார்கள்.

ஏழையின் பசியைத் தணிக்க எவரும் முன் வரவில்லை. பிறர் நலம் பேணும் தெய்வத் திருவடியார்கள் காய் மறைவு இலை மறைவாக இருக்கிறார்கள். தன்னலத்தில் சிறகுகள் பிரமாண்டமாக வளர்ந்துவிட்ட மனிதக் கழுகுகளை எங்ஙனும் பார்க்கிறோம்.

முதலாளித்துவ முறையில் வாணிபஞ் செய்து ஏழ்மையை நசுக்குவதற்குப் பதில் ஏழைகளை நசுக்குகிறார்கள்.

இத்தனைக்கும் நாம் சுதந்திர மக்கள். குடியாட்சியில் நம்பிக்கையுள்ள மக்கள்.

நம்மைச் சுற்றியுள்ள பொருளாதார வேலிகள் விலைவாசி விஷப் பாம்புகள் வாழ்க்கைச் சீர்கேட்டு முட்செடிகள் பல்கிப் பெருகிவிட்டன.

இத்துன்பத்தைத் துடைக்க உழவாரப் படை தேவை. ஒரு சங்கம்—ஒரு கட்சி—ஒரு விநியோகம் வழியாக நேர்மைப்படுத்திவிட முடியாது. நாம் காணும் மரங்களைவிட, நம்மோடு பழகும் மனிதர்கள் அதிகக் கோணல் உள்ள கூட்டமாக இருக்கிறார்கள்.

சமுதாய நன்மை என்பது சங்கம்—கட்சி—விநியோகம் என்ற முப்படையையும் தாண்டி நிற்க வேண்டிய மனப்பக்குவம்.

எல்லா நன்மைகளும் தீமைகளும் விளையும் நிலத்திற்கே மனம் எனப் பெயர். மனப்பக்கு வம் இருந்தால் நாம் திருந்தலாம் ; பின்னர் திருத்தலாம். திருந்தாமல் திருப்தி காண்பது இயலாத காரியம். மதி நலம், மூளை நலம், சட்ட ஞானம் யாவற்றையும் விட மன அமை தியைத் தரவல்ல பண்பாளர்கள்—சத்சங்கங் கள் நிரம்பத் தேவை.

மன அமைதியைத் தரும் இரகசியம் தெய்வத் திருப்பாட்டுகளில் தாம் இருக்கின் றன.

''அன்பினில் விளைந்த ஆரமுதே''

என்றும்,

''நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே''

என்றும்,

சாதி குலம் பிறப்பு என்னும்
சுழிபட்டுத் தடுமாறும்
ஆத மிலி நாயேனை அல்லால்
அறுத்து ஆட் கொள்வோனே

என்றும்,

பால்நினைந்து ஊட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவி யேனுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி

என்றும், வியந்து வியந்து அனுபவிக்கும் மனப் பக்குவம் நமக்கு வந்தாக வேண்டும்.

உமது உள்மனத்தின் பெருமை வெளிப் படையாகத் தெரியாது. ரோஜா மலரைத் தின்றவன் வாயிலிருந்து நறுமணம் வருவது போல, பக்திப் பாடல்களுடன் ஐக்கியமாகிவிட் டால் அவன் உள்ளொளி பெருகும். உள்மனம் வேருக்குச் சமம். வேருக்கு நீர் வார்த்தால், பூவிலும் காயிலும் நற்பலன் காணலாம். சொல் லிலும் செயலிலும் அன்பைக் காணலாம். நெஞ்சிலும் நினைவிலும் இறையன்பைக் காண லாம்.

உள் மனத்தின் வளர்ச்சியுள்ளவர்களே நமக்கு ஆசான்களாக ஆசிரியர்களாக வர முடி யும். மனிதாபிமானத்தோடும், மனித மனத் தோடும் நடமாடும் கோவில்களாக நாம் மாற வேண்டும்.

யாராவது ஒருவர் வாழ்க்கையில், என்ரு வது ஒருநாள் மாற்றஞ் செய்ய முடியும் என்ற நம்பிக்கையில் பிறந்தவை தேவார—திவ்வியப் பிரபந்த—வேதாந்த சார நூல்கள்.

எழுதப்படும் நூல்கள் யாவும் பயன்பட வேண்டுமானால், வாழையடி வாழையாக வரும் திருக்கூட்டத்துக்குள்ளே அனுதாப உள்ளமும் அறிவுப் பசியுள்ளவர்களும் பிறக்க வேண்டும்.

பிறரது உள்மனத்தை வளர்க்கச் செய்யும் இலக்கியங்கள் பக்தி நூல்கள். பிறரது மனதைக் கிளர்ச்சியடையச் செய்யும் நூல்கள் காவியங் கள்.

பக்தி நூல்களுக்குச் சமுதாயத்தின் மனச் சாட்சியை மாற்றும் சக்தி உண்டு.

அணுவைப் பிளந்து தக்க வேலை செய்யும் விஞ்ஞானியை விட,

சிந்தனையால் — சிவத்தை — அன்பை அறிந்த மெஞ்ஞானிகள் மிகப் பெரிய சேவை யைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

நெருப்பில் வீழ்ந்த இரும்பும் நெருப்பா கும்; விறகும் நெருப்பாக மாறும். பக்தி நூல் களுக்குள் அகப்பட்ட நெஞ்சங்கள் பக்திக் கனலாக மாறியே தீரும்.

அறிவுக்கும் இன்பத்திற்கும் தொந்தம் உண்டு.

அறிவுக்கும் அமைதிக்கும் தொந்தம் உண்டு.

இன்பத்தால்—அறிவும்—அறிவால் இன்ப மும் கிடைக்க வேண்டும். இந்த அனுபூதிநிலை பக்திப் பாடல்கள் வழியாக மட்டுமே கிடைக் கக்கூடிய ஆனந்தத் தேன். இன்பமும் அறிவும் வெளியே இருந்து கிடைப்பது போலத் தோன் றும். ஆனால் அது உள்ளுக்குள் இருந்து புறப் படும் சுனையூற்று. அல்லது மூச்சு ஓட்டம்.

மூச்சு விடுவதால் அசுத்தம் வெளியேறி உடல் சுத்தமடைகிறது. உள்ளமும் புறமும் சுத்தம் நிலவத்தான் மூச்சு விடுகிறோம். மூச்சு உள்ளவரை நமக்கு உயிர் இருக்கும். காற்று உள்ளவரை காயகல்பமாக நாம் இருந்துவிட முடியாது.

நாம் போன பின்பும் பிற ஜீவன்களுக்கும் மேடையில் வீசும் மென்காற்று இருக்கும். மூச்சையடக்கி வைப்பதிலே இன்பம் இருக்கிறது என்று ஞான யோகிகள் வழிகாட்டியுள்ளார்கள். திருமூலர் சொல்லுவார் :

ஏற்றி இறக்கி
இரு காலும் பூரிக்கும்
காற்றைப் பிடிக்கும்
கணக் கறி வாரில்லை
காற்றைப் பிடிக்கும்
கணக் கறி வாளர்க்குக்
கூற்றை உதைக்கும்
குறியது வாமே

நம்மில் 99 நபர்கள் காற்றைப் பிடிக்கும் கணக்கறியோம். நம்மைச் சூழ்ந்துள்ள காற்றை நாம் பயன் செய்கிறோம். ஆயினும் அதனைக் காண முடிவதில்லை.

''நான் காண முடியா ததை எங்ஙனம்
காண்பேன்; எங்ஙனம் களிப் பேன்;
எங்ஙனம் கவி பாடு வேன்''

இவ்வாறு நாத்திகர்கள் கேட்கிறார்கள்.

''நான் காணுகிறேன்; களிப்படைகிறேன்:
கவியும் பாடுகி றேன்''

என்று ஞானிகள் சொல்லுகிறுர்கள்.

பாடவேண்டும் நான்
போற்றி நின்னையே
பாடி, நைந்து நைந்
துருகி நெக்குநெக்கு
ஆட வேண்டும் நான்
போற்றி அம்பலத்
தாடு நின் கழற்
கூட வேண்டும் நான்
போற்றி இப்புழுக்
கூடு நீக் கெனைப்
போற்றி பொய்யெலாம்.
வீட வேண்டும் நான்
போற்றி வீடுதந்
தருளு போற்றி நின்
மெய்யர் மெய்ய னே!

தேவார திவ்வியப் பிரபந்தங்கள்—சித்தர் ஞானக்கோவைகள் யாவும் உள்ளொளியைப் பெருக்கும் ஞான விளக்குகள். செவிப் பறைக் காக வழங்கப்பட்ட நாத விந்து.

மெய்யர் மெய்யனை—ஆண்டவனை உள்ளத் துள் கண்டால் கோவில் உள்ளேயும் காணலாம்.

நமது ஊனுடம்பு ஆலயம் ஆகும். அங்கு குடியிருக்க வரும் ஆண்டவன் நமது காயத்தைக் கோயிலாக அமைக்கிறுர். இது புனிதமான விடுதியாக இருக்க வேண்டாமா? ஒவ்வொரு விநாடியும் நமது காயமாகிய கோவில் வாய் மையே தூய்மை காய களிம்பு இல்லாத பாத்தி ரமாக இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். இது அப்பர் பெருமான் திருவுள் ளம்.

காயமே கோயிலாகக்
கடிமனம் அடிமையாக
வாய்மையே தூய்மையாக
மனமணி இலிங்கமாக
நேயமே நெய்யும் பாலா
நிறையநீர் அமையஆட்டிப்
பூசனை ஈசனுர்க்குப்
போற்றவிக் காட்டினேமே!

இறைவன் வந்து தங்கும் வண்ணம் உள்ளம் பளிங்கு மாளிகையாக இருக்கவேண்டு மானல், நமது புலன்கள் அவை விரும்பும் இன்பங்கள் மாசு மரு உள்ளனவா என்று அறிய வேண்டும். பொம்மையை உயிர்ப் பொருளாக எண்ணுவது குழந்தையின் இளம் அறிவு. அறிவு வளரும்போது எது உண்மை யான உயிர்ப் பொருள் என்று அறியுமாப் போல, மனமணி இலிங்கத்தை நேயமாகத் தெரியவேண்டும்.

இதற்காக நமது ஞானிகள், தம்மை அறிந்து இன்புற்று வாழ்வாங்கு வாழ்ந்த மாளிகைகளைப் பாடற் கோபுரங்களாக விட்டுப் போயிருக்கிறுர்கள்.

நம்மைச் சுற்றி நன்மைகள் நர்த்தனமிடு கின்றன. இதய கீதங்கள் ஒலி செய்கின்றன. பதவிகள் பந்தாகத் துள்ளல் போடுகின்றன.

இனிது இனிதான எத்துணை இன்பங்கள் இருக்கின்றன!

கனி இனிது; கரும்பு ரசம் இனிது; சர்க் கரைக் கட்டி இன்னும் இனிது; பாவை நல்லார் இனியர்; இம்மூன்றின் இனிமையை விட அர சாட்சி செய்யும் போக வாழ்க்கை மேலும் இனிது. இத்துணை இனிய பொருள்களையும் பொறுப்புக்களையும் போகங்களையும் விட, எவர் மனத்திற்கும் இனியவனுக இருக்கும் பொருள் ஒன்றே!

''கனியி னும்கட்டி
பட்ட கரும்பினும்
பனிம லர்ந் குழற்
பாவைநல் லாரினும்
தனிமு டிகவித்
தாளும் அரசினும்
இனியன் தன்னையடைந்
தார்க்குஇடை மருதனே!

இது திருநாவுக்கரசரின் தீர்ந்த முடிவு. எப்போதும் இனிமையாக இருப்பதுதான் மெய்ப்பொருள். அழுகும் கனியும், புளித்துப் போகும் கரும்பு ரசமும், திகட்டிவிடும் செல்வ மும், நோய்க்கும் பலவீனத்திற்கும் கால் கோளாய் அமையும் பாவையர் இன்பமும், பரிபோகும் ஆட்சி பீடமும் இனியவை அல்ல! அல்ல! அல்ல!

மனத்திற்கு இன்பம். மதிக்கு இன்பம். ஆத்மாவுக்குச் சிலிப்புத் தரும் இனியன் என்றும் இனியன்; எவர்க்கும் இனியன்; எக்காலத்தும் இனியன் யார்?

அவன் ஆண்டவன்!

அன்பின் முழு உருவம் ஆண்டவன்.

ஒளிக்கதிரின் ஒப்பற்ற வடிவம்ஆண்டவன்.

புது வெள்ளத்தின் தெளிவு ஆண்டவன்.

எந்தப் புலனுக்குத் துன்பம் வந்தாலும் வரலாம். மனத்திற்கு மட்டும் துன்பத்தில் நிழல்கூடப் படியக்கூடாது. மனத்தைப் பாது காக்கும் பரிபக்குவம்—பக்திக்கு உண்டு. ஆண் டவன் அருளுக்குத்தான் பேரின்பங்களைத் தர வல்ல சக்தியுண்டு.

பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்
பழதிதினிற் சுவை ஒப்பாய்
கண்ணிடை மணி ஒப்பாய்
கடுஇருட் சுடர் ஒப்பாய்
மண்ணிடை அடியார்கள்.
மனத்துஇடர் வாராமே

காக்கும் திறனும் ஈசனுக்கே உண்டு.

பயிரைக் காக்கும் உழவன் அதன் அரு காகக் குடிசை கட்டிக் கொண்டு காப்பதுபோல, பூமியிலே கோவில் கொண்டு அடியவர் துயரைத் தீர்ப்பவன் ஆண்டவன்.

மனம் எப்போதும் தளர்ச்சியின்றி—நோய் வாய்ப்படாமல் வலுவுள்ளதாக இருக்க வைப்பது மெய்யருள். அடிக்கடி பகவன் நாமத்தையும் செயலையும் மனத்தகத்தில் உரசிக் கொண்டிருக்க வேண்டும்.

நமக்கு உயிர்க் காவலனாக இருக்க வல்லவன் ஆண்டவன். இதனைச் சொல்கிறார் பெரியாழ்வார் :

பொன்னைக் கொண்டுஉரைகல் மீதே
  நிறமெழ உரைத்தாற் போல்
உன்னைக் கொண்டுஎன் நாவகம்பால்
  மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண்டுஎன் னுள்வைத்தேன்
  என்னையும் உன்னில் இட்டேன்
என் அப்பா! என்இரு டீகேசா
  என்உயிர்க் காவலனே!

பாசுரங்களையும் திருப்பதிகங்களையும் பாடப் பாட மனத்துக்கண் மாசு படியாமல் ஆனந்தத் தேன் பருகி இரண்டறக் கலந்து விடலாம்.

கோவில் வழிபாடு.

கோபுர தரிசனம்.

தெய்வத் திருப்பாடல்கள்
இவையே மன்பதைகள் உய்வதற்குரிய

என்றுமுள ஊன்றுகோல்கள்.

எப்போதும் இனியானை
என் மனத்தை வைப்பேன்

இவ்வாறு சொல்லும் துணிவு தமிழ் ஒலி கேட்கும் ஒவ்வொரு மனிதப் பிறவிக்கும் வர வேண்டும்.

சரியையில் தொடங்கினால் கிரியையில் நிறைவு பெறும்.

நல்லதை உச்சரித்தால்—நினைக்கப் பழகினால் நல்லவர்களாக மாறுவோம். செயற்படுவோம்.

பழகுவது சரியை; பலனாவது கிரியை.


# அருள்திரு

# சுப்பிரமணியசுவாமி ஆலயம்

## சென்னிமலை, ஈரோடு வட்டம், கோவை மாவட்டம்

கொங்கு நாட்டு முருகப் பெருமான் ஆலயங்களில் சிறப்புடன் விளங்கிவரும் இத்திருத் தலத்தில்தான் சிவாலய சோழனுக்கு இருந்த தீரதாபிணி நீக்கப்பட்டுள்ளது. அருணகிரி நாதருக்குப் படிக்காசு வழங்கப்பட்ட இத்தலத்திற்குத் தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் பக்தர்கள் நாள்தோறும் வருவதுடன் திருவிழாக் காலங்களில் பல்லாயிரக்கணக்கில் வந்து முருகனைக் கண்டு தரிசித்துச் செல்கிறார்கள்.

மலை உச்சியில் அமைந்திருக்கும் இத்தலத்திற்கு மலைப்பாதை போடப்பட்டு, கார், உல்லாசப் பேருந்து முதலியவை போக வசதியாக உள்ளது. ஆண்டுதோறும் இம் முருகனுக்கு தை மாதம் பூச நட்சத்திரத்தில் சிறப்பாக தேரோட்டம் நடைபெற்று வருகிறது.

வேண்டுவோர்க்கு வேண்டியதைக் கொடுத்தருளும் இம் முருகனுக்கு வெள்ளித் தேர் செய்ய திருப்பணிக் கமிட்டி அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அன்பர்கள் அனைவரும் இத்திருப்பணியில் பங்கு கொண்டு திருப்பணியைச் சிறப்பாக முடிக்க நன்கொடை வாரி வழங்க வேண்டுகிறோம்.

ஆலய நிர்வாகிகள்.

# அக்கமகா தேவியார்

கவியோகி சுத்தானந்த பாரதியார்

**அழுத்தமான ஆய்வுரை :**

''ஒன்றே நினைந்திருந்தேன்
ஒன்றே துணிந் தெழுந்தேன்
ஒன்றேஎன் உள்ளத்தின் உள்ளடைந்தேன்
ஒன்றே காண்

கங்கையான் திங்கட்
கதிர் முடியான் பொங்கொளிசேர்
அங்கையாற் காளாம் அது''

இது காரைக்கால் அம்மையாரின் கருத்துறுதி. ''கடவுளே அறிவான் அறிவிப்பான், அறிவாய் நிற்போன். அவனே மெய்ப்பொருள்; அவனே வான்புவி, அவனன்றி யானில்லை, உயிரில்லை, உலகில்லை; அவனுக்கே யான் ஆள்; வேறு யாருக்கும் இல்லை'' இது வீரசைவத் திருவிளக்கான அக்கமாதேவியின் அழுத்தமான ஆய்வுரை; கிறிஸ்துவப் புனிதருள் தெரஸாதேவி இவ்வாறு மனவுறுதியுடன் ஏசுநாதரை அன்பு செய்தாள். அவளை அந்நாட்டு மன்னன் காதலித்தான். அரசன் காதலை மறுத்து வெறுத்து தெரஸாதேவி என்றும் தூய கன்னியாகவே இருந்து ஏசுநாதரை அன்பு செய்தாள்.

**வீர சைவச் சுடர் :**

வீரசைவச் சுடரான அக்கமகாதேவியும் ஐந்தெழுத் துண்மையில் அழுத்தங் கொண்டு அதனை அன்பு செய்தாள். அக்க மகாதேவியின் வரலாற்றைத் தமிழருக்கு அறியச் சொல்லுகின்றேன். அண்மையில் தார்வார் பல்கலைக் கழகத்திலிருந்து வீரசைவ இலக்கியங்களையும், பஸவதேவரின் நூல்களையும் வரவழைத்து ஆராய்ந்து பெரு மகிழ்ச்சியடைந்தேன். நமது தமிழகத்தின் சிறந்த அருட் கருவூலங்களான நால்வர் பாடல் போலவே, கன்னடத்திலும் அரிய திருமுறைப் பாடல்கள் உள்ளன; அவற்றுள் உள்ளத்தை அள்ளும் உவகைச் செல்வம் அக்க மகாதேவியின் அருட் பாடல்களாம்; ஏனெனில் அவை அந்தப் புனிதவதியின் தூய, துணிந்த சிவத் திருவாழ்வுடன் இணைந்தவையாம்.

**எனக்கினிய எம்மான் :**

''எனக்கினிய எம்மானை இன்பச் சிவனை இணைபிரியா வாழ்க்கையே இனிது கண்டேன்'' என்று அக்கமாதேவி சிவனடியைச் சிக்கெனப் பிடித்தாள். அக்கமாதேவி பனிரெண்டாவது நூற்றுண்டிலே பசவ தேவர் காலத்திலே வாழ்ந்த கன்னட நாட்டுக் கற்புச் செல்வி. பெற்றோர் தூய சிவநேயர்; ஒரே புதல்வியாதலால் மிகச் செல்வமாக அவளை வளர்த்தனர்.

ஆண்டாள், மீரா பாய் போலவே அக்கமாதேவி ஆண்டவனுக்கே ஆட்பட்டு, அவனன்றி வேறெதிலும் ஆர்வங் காட்டாது வளர்ந்தாள். பெற்றோர் செய்யும் சிவ வழிபாட்டில் அக்கமாதேவி கருத்தூன்றினாள். ஒரு முனிவர் அவளுக்கொரு சிவலிங்கம் தந்தார். அதற்கு முழுக்காட்டி, அணி செய்து, மலர் தூவி, ஒளி காட்டி, தான் உண்ணும் உணவையே படைத்துப் பிறகே உண்டாள்.

**அருள் விண்ணப்பம் :**

சிந்தனையெல்லாம் சிவமயமே
செய்குவதெல்லாம் சிவன்பணியே
வந்தனையெல்லாம் சிவனடிக்கே
வார்த்தைகளெல்லாம் சிவனன்பே
பந்தனையில்லாப் பதிநேயம்
கழுத்து வழுத்துதல் பேரின்பம்
தந்தெனை யாளாய் பெருமானே
தந்தனன் உனக்கே எனைமுற்றும்

என்பது அக்கமாதேவியின் அருள் விண்ணப்பம். பெற்றோர் சிவன் திருவிளையாடல்களைப் படித்து விளக்கும்போது அக்கமாதேவி கண்ணில் நீர் மல்கி, உள்ளம் கசிந்துருகக் கேட்பது வழக்கம். தோழிகளுடன் ஆடும்போதும் சிவபெருமானுக்குத் திருவிழாக் கொழிப்பதே அவளின்பம்.

**உனக்கே நான் :**

உண்பதும் உனக்கே எம்பெருமான்
உயிர்ப்பதும் உனக்கே எம்பெருமான்
எண்மன முனக்கே எம்பெருமான்
எல்லாம் உனக்கே எம்பெருமான்

என்று நாளெல்லாம் சிவனுணர்வில் வளர்ந்த சிறுமி அழகிற் சிறந்து வனப்பிற் பொலிந்து இள நங்கையானாள். பெற்றோர் திருமணம் முடிக்க முனைந்தனர். நல்ல இடமும் அமைந்தது. எனினும் அக்கமாதேவி மீரா தேவியைப் போலவே,

காதலன் அவனே சிவபெருமான்
கருதுவ தவனே எம்பெருமான்
ஓதலும் சிவசிவ மந்திரமே
உள்ளமெலாம் சிவ சிந்தனையே

என்று பாடுவதும் கண்மூடி உள்ளே கருதுவதும் ஆனாள். ஒரே செல்வப் புதல்வி இவ்வாறு உலகை வெறுத்து, சிவனையே நினைத்து உருகக் கண்ட பெற்றோர் கவலை கொண்டனர்.

### கௌசிகன் காதல் :

அவ்வூர் மன்னன் கௌசிகன் மைசூரை ஆளும் இளந்திருச் செம்மல். ஒரு நாள் வேட்டையாடிவிட்டு வெற்றி முரசு கொட்டி வீரப் பவனி வந்தான். ஊரெல்லாம் ஆரத்தியெடுத்து மன்னனை வரவேற்றது. காகளங்களும் எக்காளங்களும் முழங்கி மன்னன் புகழைப் புலவர் பாடி வந்தனர். தனது தோழிகளுடன் அக்க மாதேவியும் ஓர் மரத்தடியே நின்று மன்னன் பவனியைப் பார்த்தாள். இவ்வாறே சிவ பெருமான் புகழைக் கூவி இசைக் கருவிகளுடன் பாடி ஊர்வலம் வர அவள் உள்ளம் அவாவியது. ''சிவசிவ எனவே பாடியாடிச் சிந்தை மகிழேனே'' என்று மெல்லிய குரலில் இசைத்து நின்ற அக்கமாதேவியின் அழகும், இளம்பொலிவும் அரசன் கண்ணைக் கவர்ந்தன. பவனியை நிறுத்தி, மன்னன் அக்கமா தேவியைப்பார்த்துப் பார்த்து உள்ளமெல்லாம் அவளிடம் வைத்துச் சென்றான்.

### மகளே மன்னனை மண :

மறுநாள் பெற்றோரை வரவழைத்துத் தனது ஆர்வக் காதலைப் பேசினான். அரசனே தன் மகளுக்குக் கணவனாகும் விருப்பத்தைத் தடுப்பவர் யார்? பெற்றோரும் ஒப்புக் கொண்டனர். அக்கமாதேவியை அன்புடன் அணுகி ''செல்வியே நீ என்ன பேறு பெற்றாய், நாட்டையாளும் கௌசிகனே உன்னைக் காதலித்து வேட்க விரும்புகிறான். மகளே நீ நாளையே அரசி ஆவாய்; அரண்மனையில் வாழ்வாய் ; உனக்குக் கைகட்டிப் பணி செய்ய எத்தனையோ பேர் காத்து நிற்கிறார்கள். உன் அழகுக்கு அழகு செய்ய அணிகலன்கள் புதிது புதிதாகப் பொலியும். உன் சொல் உடனே செயல்பெறும். மகளே உன்னால் எங்களுக்கும் பெருமை, ஊருக்கும் பெருமை. அருமைச் செல்வமே அரசன் மனைவியாக விரும்பு; தலையை அசை'' என்று தந்தை மன்றாடினான். தாய் வற்புறுத்தினாள்.

### அரன் சிவபெருமான்; அழகன் எம்பெருமான்:

அக்கமாதேவி கண்ணை மூடி அப்படியே அமர்ந்து பாடினாள் :

''அரசன் சிவபெருமான்
அவனைக் காதலித்தேன்
அழகன் சிவபெருமான்
அவனே என்கணவன்''

''காவலனை உதைத்த வனைக்
காதலித்தெனை யளித்தேன்
வேலினை யீன்றவனை
விரும்பிப் பிற மறந்தேன்''

அம்மா, அப்பா உங்களுக்கு ஏன் இந்தப் பேராசை; ஊராசை. கூற்றை உதைத்த கொழுந்தடியைப் பற்றிய மனது வேறெதை விரும்பும்? நீ சொல்லும் அரசனும் அரண்மனைச் செல்வமும் நாளையே காலனுக்கு இரையாகுமே. அரசன் உடல் ஒரு நாள் தீயில் வெந்து சாம்பலாகுமே. அரசு என்றால் ஆர்ப்பாட்டமான மாயப் பகட்டுத் தானே. இந்தப் பகட்டு எத்தனை நாள்?

இன்று வான் வென்றதனை
இன்னொரு வாள் வெல்லுவதே
என்றுமிம் மண்ணான் இயல்பு

பெற்றெறும்மை நாய்கடிக்கும்
விந்தையெ மாயமெனப்
பற்றுழன்று நோவார் பலர்

அழகன் ஒருவனே—அரனே. அவன் அழகே அழகு. அருள் அழகு. மற்ற அழகெல்லாம் காலத்தால் உலர்ந்து உதிர்ந்து மண்ணாகும். செல்வம் என்பது திருவருட் செல்வமே. மற்றதெல்லாம் மாறித் திரிந்து மண்ணாகும். நிலை பொருள் ஒன்றே—நீடுவாழ் சிவமே—மற்றெல்லாம் கலைந்து குலைந்து காலனுக்கு இரையாகும். இவ்வாறு அறிவுரைத்து இலங்கன்னி அக்கமா தேவி அருளாண்டவனையே நினைந்துணர்ந்து நெக்குருகி நின்றாள்.

### வெறியின் மிரட்டல் :

கௌசிகன் காதல் தமவெறித் தினவானது. அக்கமாதேவியைத்தர வேண்டும். இன்றேல் பெற்றோர் அழிவர் வீடுநிலமெல்லாம் பறிமுதலாகும் என்று வெருட்டினான், வெறியேறிய வேந்தன். பெற்றோர் அஞ்சினர், கெஞ்சினர்.

### மூன்று ஆணைகள் :

பெற்றோருக்குற்ற இடுக்கணை நினைத்து, அக்கமாதேவி மூன்று ஆணைகளை மீறாதிருந்தால் அரசனுக்கு அரசியாக விரும்பினாள். அரசன் அவ்வாறே ஆணை காப்பேன்; ஆருயிரும் அக்க மாதேவிக்கு ஈவேன் என உறுதி கூறினான்.

(1) எனது சிவவழிபாட்டைத் தடுக்கக் கூடாது.

(2) காம இச்சையுடன் என்னைத் தொடக் கூடாது.

(3) சிவநிந்தை கூடாது; சிவநிந்தை செய்தால் நான் விலகிச் செல்ல உரிமையுடையேன்.

இவையே மூன்று ஆணைகள்.

### பேரின்பச் சொக்கு :

''சரி'' என்று மணந்தான் அரசன். சரியென்று அரண்மனை புகுந்தாள் அக்கதேவி. ஆனால் உள்ளமே அவள் அரண்மனை, அரனே அரசன். வேறு யாருக்கும் அங்கே இடமில்லை. அக்கமாதேவி, தமக்கென வழிபாட்டறை அமைத்தாள்; சிலலிங்கத்தை அங்கே நாட்டினாள். அணையா விளக்கேற்றினாள். நாண் மலர்களைக் குவித்து மாலை தொடுத்து அணி செய்து, பாமாலை சூட்டி வழிபட்டுப் பேரின்பச் சொக்கில் தன்னை இழந்தாள்.

நீயே எனக்கன்னை; நீயே எனக்கப்பன்
நீயே எனக்குச் சுற்றம்
நீயே எனக்குலகு; நீயே எனக்குறவு;
நீயேயெனக் கிகபரம்
நீயே யெனக்கு நிதி, நீயேயெனக்கு மதி
நீயேயெனக்கு பதியே!
நீயே யெனக்குகுரு; நீயே யெனக்கு மொழி
நீயெயெனக்கு வழியே
நீயே யெனக் குணர்வு; நீயேயெனக் குயர்வு
நீயே யெனக் கனுபவம்
நீயே யெனக்கருமை; நீயே யெனக் கபயம்
நீயே யெனக் கிறைவனே
ஆயிரம் கதிர்வீ சருட்பெருஞ் சோதியே
ஆன்மநிறைவே ஆதியே
அருள்பெருகும் அறிவுவளர் மருவுதிரு மலைவளரும்
ஆனந்த மோன வடிவே!

''நீயின்றி நானில்லை நீரின்றி வளமில்லை'' என்று நாளெல்லாம் உருகி உருகி சிவனன்பி லேயே சீவனைக் கரைத்தாள்.

## அரசன் முறைத்தான் :

அரசன் ஆசையை உரைத்தான்; மணம் புரிந்தும் மருவா மனைவியைச் சினந்தான், முனிந்தான். அவளை வலுவில் கட்டியணைக்க முனைந்தான். வழிபாட்டைத் தடுத்தான். மானத்தை விடுத்தான். காமனும் கணைகளைத் தொடுத்தான். ''என்னுயிரே ஒரு முத்தம்'' என்றான். முன்னே கைகளை அணைக்க நின்றான். அக்கமாதேவி ஆசையை வென்றாள். அரசன் அவல நிலையை வெறுத்தாள். ''சிவனே இந்தக் காமப் பித்தனிடமிருந்து என்னைக் காப்பாற்று'' என்று முறையிட்டாள். உடலின்பம் உயிருக்குத் துன்பம். உள்ளின்பமே இன்பம். அது சிவ சிந்தையாலே வரும் என்று நினைத்தாள்.

## சங்கரா குருபரா :

மாயப் பேயின் கைப்படாத
மாசிவாத வாழ்வருள்
தாயுந் தந்தைதானுமான
சங்கரா குருபரா''

என்று குரலெடுத்துக் கூவினாள். அணிகலன் களை எடுத்தெறிந்தாள். பட்டாடைப் பகட்டு களைப் பறித்து வீசினாள். வழிபாட்டறையின் பின் கதவைத் திறந்தாள். தோட்டத்திற் புகுந்தாள். இருளில் மறைந்தாள். சிவனருள் வழி காட்டி நடத்தியது. அரசன் எப்படியோ அவளைத் தொடர்ந்து தொடர்ந்து, அடர்ந்த காட்டில் கண்டுபிடித்து ''என் செல்வமெல்லாம் உனக்கே, அக்கக் கண்ணே'' என்று இளித்தான். அக்கக்கண் கண்ணகியானது. தீப்பொறி பறந்தது. மாணிக்கவாசகர் போல.

வேண்டேன் செல்வம் வேண்டேன் சீர்த்தி;
வேண்டேன் மாளிகை வெறியாட்டம்
வேண்டேன் போகம் சிவயோகத்தை
விரும்பி வேட்டேன் விரதமிதே

அரசே இந்த உடல் இறைவன் கோயில்; இதில் இடங்கொண்ட சிவனுக்கே எனது சீவன் ஆளானது. நீ தரும் அணிமணி ஆடை பீடை என்றொதுக்கினேன். பாம்பணி பூண்ட பரமன் அன்பை அணிந்தேன். சிவனொளியை அணைந் தேன். உன் மாயம் என்னை என் செய்யும்? நீ போ திரும்பி, நான் சிவன் வழி செல்வேன் என்று சிவத் திருச் செலவி முன் சென்றாள். தனியே சென்றாள். ஆனால் தோன்றாத் துணைவ னை சிவபெருமான் அரணாக நின்று அவளைப் பாதுகாத்தான். கௌசிக மன்னன் அஞ்சினான்; வியந்தான், நடுங்கினான். இளந்திரு நங்கை இப்படித் துறந்து செல்லும் தூய வீறு அவனைத் திகைக்க வைத்தது. மனச்சாட்சி சாட்டையடி கொடுத்தது. ஆசை தோற்றது. அருளன்பு வென்றது. அரசன் ஆத்திரம் தோத்திரமானது. அவா பற்றிய மன்னன் சிவா என்றான். அக்க தேவியின் அரனன்பு அரசனை ஆட்கொண்டது.

## அரனே வழி அரனே வழி :

அடர்ந்த காட்டிருளில், முள்ளும் கல்லும் இடர்செய்யும் புதர்களூடே அக்கதேவி,

அரனே ஒளி, அரனே வழி,
அரனே அருள்விழியே
அரனே பசி, அர நாமமே
அருந்தும் சுவைவிருந்தே;
அரனே துணை அரனே துதி
அரனே மதி விதியே,
அரனே நினை வரனேநிலை
அடியார் புகல் அரனே!

என்று பாடிக் கொண்டே காடும் மேடும் கண வாயும் மலையும் தாண்டிச் செல்லுகிறாள் அக்க தேவி. பசித்தால் காட்டுக் கனிகளை, நாவல் இலந்தைக் கனிகளை உண்கிறாள்; ஆற்றுநீரும் ஊற்றுநீரும் அருந்துகிறாள். மலைக் குகைகளில் மனங்குவிந்து அமர்கிறாள். கல் முழைகளில் கண்ணயர்கிறாள். காரைக்கால் அம்மை போலவே பாடுகிறாள்.

பிரான் அவனை நோக்கும்
பெருநெறியே பேணிப்
பிரான் அவன்றன் பேரருளே
அவண்டிப்-பிரான்அவனை
எங்குற்றான் என்பீர்காள்
என்போல்வார் சிந்தையிலும்
இங்குற்றான் காண்பார்க் கெளிது.

## முறையீடு :

இறைவா, என்னுள் உறைவாய்! என் முறை கேளாயோ ''என்னுளே நின்றிடும் ஏகனே நாதனே, உன்னுளே நின்றிடும் உள் ளமே நல்குவாய்'' என்று கூறுகிறாள். அக்க தேவி ஆர்வம் மிக்க தேவி. இறைவா ஏன் எனக் கேளாயோ! கண்ணாரக் காணேயா? கருதிக் கருதிக் கண்ணீர் மல்கிக் காடு மலையெல் லாம் தேடித் திரிகிறேன்! நீயில்லா வாழ்வு நீரில்லாப் பயிரானதே! உலர்ந்த வாழ்வு மலர்ந்து மணக்க உன் அருளைப் பொழிவாய்! அரனே குருபரனே என்று அக்கதேவி முறை யிடும் குரலை இறைவன் கேட்டான்.

**பஸவர் பொழில் :**

சிவமயக் காதல் விம்மியெழுந்து முன்னே உந்தியது. கல்யாண் தவப் பொழிலில் அக்க தேவி புகுந்தாள். அதுதான் வீரசைவ நிலையம். திருமிகு பஸவர், திரு அல்லமர் பிரபு போன்ற சிவ முனிவர் தவம் புரியும் தூய பொழில். அல்லமா பிரபு பஸவரின் குருநாதர் ஆவார்.

**பொழிலிற் புது மலர்ச்சி :**

அக்கமகாதேவி கல்யாண் தவப் பொழிலிற் புகுந்ததுமே ஒரு புதிய மலர்ச்சி புன்னகைத்தது; மலர்கள் புது மணம் வீசின; பறவைகள் சிறகடித்துப் பாடியாடின; மான்கள் களிதுள்ளின. இளங்குமரி ஆடம்பரங்களை உதறித் தள்ளித் துறவில் உறுதி கொண்டு வந்தமை அல்லமார் பிரபுவுக்கு வியன் மகிழ்வளித்தது. பஸவ தேவருக்கும் புது நம்பிக்கை யீந்தது. பெண்களும் துறவிற் பண்பட்டு விளங்க முடியும் என்ற உறுதியீந்தது.

158599

**சோதனை சாதனை :**

இருப்பினும் சோதனை வேண்டும். அல்லமா கின்னரி பொம்மையரவை அனுப்பி அக்கமாதேவியைச் சோதித்தார். சோதிக்கச் சென்ற பொம்மையா அக்கதேவியின் அழகில் சொக்கிப் போனார். காதல் பூத்தது. அக்கமாதேவி மனவுறுதி கொண்டு பொம்மையா மனதைப் புனிதமாக்கினாள். பொம்மையா அக்கதேவியை வணங்கினான். ''அக்கதேவியின் அருளால் காமம் கடந்த வாமன் ஆனேன்'' என்று கின்னரி பொம்மையா கிளர்ச்சி கொண்டுரைத்தார்.

கல்யாண் தபோவனத்தில் அக்கதேவி மகிழ்வுடன் தியானம் செய்து பக்குவ நிலை பெற்று ஸ்ரீசைலம் சேர்ந்தாள். அங்கே சிவன் அருள் கூடியது. அக்கதேவி மாறிப் பிறந்தாள். அவள் கண் ஞானக் கதிரிட்டது. முகம் எழுந்த ஞாயிறானது. அம்மாள் தனது அனுபவங்களைக் கவிதையாய்ப் புனைந்தாள். பேச்சைச் சுருக்கினாள். மூச்சைச் சுருக்கினாள். இதயத் துடிப்பில் ஒருமை கூடினாள். அவளைச் சுற்றி மகா குண்டலிகக் கனல் வீசியது. இந்தச் சித்தி எப்படிக் கிடைத்தது என்று ஆர்வத் தொண்டர் வினவினார்.

**அதுவானால் அதுவே காட்டும் :**

''வாயை மூடி மனதைத் திறமின். உள்ள பொருள் உள்ளத்திலே உணர்வாகும் ; அதைப் பேச முடியாது. பேச்சும் சுமையே.

எல்லையற்ற இன்பம்-அதனை
இயம்புவார் எவரே?
சொல்லடக்கி யுள்ளே-காணீர்
சுத்த சக்தி சிவமே!

உள்ளுறவிற் காணும்-பொருளை
உரைப் பதெல்லாம் வீணே
அள்ளும் அன்பிருந்தால்-அதுவே
யாகும் இன்பமாமே

என்று பாடினார் அக்கதேவி. ''அதுவானால் அது ஆவார்; அதுவே சொல்லும்''.

எல்லையிற்பே ரின்பமயம்
எப்படியென் றோர்தமக்குச்
சொல்லறியா ஊமர்கள்போற்
சொல்லுநா ளென்நாளோ''

என்றார் தாயுமானார்.

**சூளும் கோளும் :**


இந்த நிலை எளி தன்று. இடர் வலிது. உலகோர் இடும்பையும் கிண்ணுடம், இத்தனை அத்தனையன்று. கட்டிய கணவனை மன்னனை விட்டுக் காட்டுக்குப் போனாளாம்வல வயதுப் பெண் தனியே போகலாமா? தமாம் தவம்! பெண்ணுக்கு இல்லறத்திலே அறம் பொருள் இன்பம் துய்த்து, கணவனை அன்பு செய்வதே கடமையாகும். கணவனை விட்டுச் செல்லும் காரிளம் கடவுளை எப்படியடைவதாகும்? பாட்டாம் பாட்டு. எத்தனையோ பாட்டுண்டு. புதுப் பாட்டு எதற்கு? இவ்வாறெல்லாம் உலகோர் சூளுரைத்து, கோளுரைத்து, குறும்புப் பேசிக் குற்றம் சுமத்துவது இயல்பே.

**பெண்ணுக்குப் பேரின்பம் எய்தும் :**

அக்கதேவி, சிவபிரான் சக்தியுடனேதான் அமர்கிறான். உமாதேவி இமாலய உச்சியில் தவம் புரிகிறாள். கன்னியாகுமரி தென்முனையிலே தவம் காக்கிறாள். அருள் வழிச் சென்று பேரின்பம் அடைதற்கு ஆண்போலப் பெண்ணுக்கும் உரிமை உண்டு. ''பெண்ணி நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'' என்று பாடுகிறார் சம்பந்தப் பெருமான். சிவமும் சக்தியும் சேர்ந்தே உலகாடல் நடக்கிறது.

சினத்தை விடு; சிவத்தைஅடு
உறுதியாய் மனதை உள்ளே ஊன்று
தனித்துநினை; தன்னையறி
இனித்துணர்வாகும் இறையருளின்பமே

இதுவே அக்கதேவியின் அருள்மொழி. பஸவ தேவரின் வீர சைவ வெற்றிக்கு அக்கதேவியின் அருட்பாடல்கள் மிகவும் பயனாயின.




திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலின் சார்பில் 19-10-74 ஆம் நாள் நடைபெற்ற ஐந்து லட்ச ரூபாய்ச் செலவில் கட்டப்பட இருக்கும் மகப்பேறு, கண் மருத்துவமனைக் கால்கோள் விழாவிலும், சிறுகுடில்கள் மற்றும் சுற்று மண்டபம் ஆகியவற்றின் திறப்பு விழாவிலும், மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் கால்கோள் விழாவினைச் செய்தார்கள். அறநிலைய அமைச்சர் மாண்புமிகு மு. கண்ணப்பன் அவர்களும், சட்டமன்ற உறுப்பினர் க. மு. கதிரவன் அவர்களும் உடன் இருக்கின்றார்கள்.

திருக்கோயில்

சனவரி 1975 ரூ. 1

பதிவு எண். எம். 7039


# காதி கிராப்ட்

அளிக்கிறது சுவையும், வெண்மையும்.




ஆடைகள் பளிச்சிட கோபுரம் மார்க் சோப்.
ஆரோக்யம் தரும் சுத்தமான தேன்,
கதர்த்துணி, பட்டுப்புடவைகள், ரெடிமேட்
ஆடைகள், சுத்தமான எண்ணெய்,
கலையழகு கொஞ்சும் கைவண்ணப்
பொருள்கள், பொம்மைகள், பனை வெல்லப்
பொருள் மற்றும் தரமேன்மையான பற்பல
பொருட்களையும் வாங்கலாம்.
தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி
மாநிலங்களில் 200க்கும் மேலான
காதி கிராப்ட்கள் மக்களின் தேவைகளை
பூர்த்தி செய்கின்றன.




| தொலைபேசி | சென்னை | திருச்சி | கோவை |
|---|---|---|---|
| | 29684 | 3814 | 35051 |
| | 81954 | | |


வெளியிடுபவர்; ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, சென்னை-600034.
ஆசிரியர் : ந. ரா. முருகவேள், எம்.ஏ., எம்.ஓ.எல்.
அச்சிடுவோர் : தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.